இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 32 | கதிர் 86 | வள்ளுவர் ஆண்டு 2048 | மாசி 08, திங்கட்கிழமை 20.02.2017

கம நலம்
Govisetha
அதிக கோடீஸ்வரர்களை உருவாக்கும் கம நலம்
இப்பொழுது
புதன்கிழமைகளிலும்..
திங்கள், புதன், வியாழன், சனி ஆகிய தினங்களில்
கம நலம்
NATIONAL LOTTERIES BOARD

## உப குழுக்களின் முதல் அறிக்கை மக்களுக்காக மீள்வரைவு

யாழ்ப்பாணம், பெப். 20
புதிய அரசமைப்பை உருவாக்க நியமிக்கப்பட்ட உபகுழுக்களால் தயாரிக்கப்பட்ட இடைக்கால அறிக்கை, மக்களுக்குப் புரியும் மொழியில் மீள்வரைவு செய்யப்பட்டு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.
உபகுழுக்களின் அறிக்கை கடந்த ஆண்டு நவம்பர் மாதம் >> 24

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு

## ரணில் கேட்ட அறிக்கை நாளை முன்வைப்பு

யாழ், பெப். 20
அரசமைப்பில் சொல்லப்பட்டு இதுவரையில் நடைமுறைப்படுத்தப் படாத விடயங்கள், கடந்த காலங்களில் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டங்கள், மாகாண முதலமைச்சர்களால் ஒருமித்து ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்கள், இவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட அறிக்கை, நாளை செவ்வாய்க் கிழமை நடை பெறும் வழிநடத்தல் >> 24

## அரசமைப்பு உருவாக்கத்திலிருந்து மகிந்த அணி முற்றாக விலகும்

### எழுத்து மூல அறிவிப்பை நாளை சபாநாயகரிடம் கையளிக்கிறது

கொழும்பு, பெப். 20
'புதிய அரசமைப்பை உருவாக்கும் பணிகளிலிருந்து வெளியேறுவதற்கு மகிந்த அணி தீர்மானித்துள்ளது. புதிய அரசமைப்புக்கு எதிர்ப்பை வெளியிடும் முகமாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அரசமைப்பை உருவாக்கும் வழிகாட்டல் மற்றும் உப குழுக்களில் அங்கம் வகிக் கும் 15 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி >> 24

ஜெனிவாவில் இலங்கை தொடர்பாக

# அல் ஹுசைனின் அறிக்கை மிகக் காட்டமாகவே வரும்

## ஆனாலும் மேலும் கால அவகாசமும் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 20
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசைனின் இலங்கை தொடர்பான அறிக்கை மிகக் காட்டமானதாக – எச்சரிக்கை விடுக்கும் வகையில் அமையும் என்று ஜெனிவாத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு இலங்கைக்கு மேலும் கால அவகாசம் வழங்குதற்கான தீர்மான வரைவை பிரிட்டன் கொண்டுவரும் என்றும் தெரிவிக்கப்பட்டது.
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 34ஆவது அமர்வு எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்பமாகி அடுத்த மாதம் 24ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது. அமர்வின் முதல் நாளில் 27ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசைன் உரையாற்றுவார்.
இலங்கை தொடர்பில் 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் தற்போதைய நிலமை தொடர்பில் ஐ.நா. ஆணையாளர் குறிப்பிடுவார். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரது இலங்கை தொடர்பான நிலைப்பாடு >> 22

## ஜெய்சங்கருடன் தமிழ் தரப்புகள் இன்று சந்திப்பு

கொழும்பு, பெப். 20
இலங்கை வந்துள்ள இந்திய அயலுறவுச் செயலாளர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் இன்று கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்குக் கூட்டணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் முக்கிய பேச்சு நடத்துகிறார்.
கொழும்பிலுள்ள >> 24

## ஊடகவியலாளர் மீது தாக்குதல்; 2 ராணுவத்தினர் நேற்றும் கைது

கொழும்பு, பெப். 20
ஊடகவியலாளர் கீத் நொயார் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் மேலும் இரண்டு இராணுவத்தினர் >> 24



உவையள கைது செய்து கடைசில நிரபராதிகள் எண்டு விடுவதுதான வழமை...

மண்மீட்புப் போருக்கு ஆதரவாக

## வடக்குப் பாடசாலைகளில் இன்று காலை கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், பெப். 20
மண்மீட்புப் போரில் ஈடுபட்டிருக்கும் மக்களுக்கு ஆதரவாக வடக்கு மாகாணம் முழுவதிலும் உள்ள சகல பாடசாலைகளிலும் இன்று காலை ஒரு மணி நேரம் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. இதற்கான அறிவிப்புக்கள் உரிய தரப்புக்கள் ஊடாக வலயக் கல்வி பணிமனைக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
முல்லைத்தீவு மாவட்டத்தின் பிலக்குடியிருப்பிலும், புதுக்குடியிருப்பிலும் பாதுகாப்புத் தரப்பினர் ஆக்கிரமித்து >> 24

## 20ஆவது நாள்

### பிலக்குடியிருப்புப் போராட்டத்துக்கு தாயகமெங்கும் பெருகுகிறது ஆதரவு



முல்லைத்தீவு, பெப். 20
'தாயக தேசத்து மக்களின் பெருகி வரும் பேராதரவு எங்களின் போராட்டத்துக்கு உந்துதலாக உள்ளது. காணிக்குள் கால் வைக்கும் வரையில் >> 24

## களுத்துறையில் பெரும் துயரம் படகு கவிழ்ந்து 11 பேர் சாவு



கொழும்பு, பெப். 20
களுத்துறை – கட்டுகுருந்த பகுதியில் நடைபெற்ற திருவிழாவில் பங்கேற்ற யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்ததில் அதில் பயணம் செய்த 11 பேர் உயிரிழந்தனர். 32 பேர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
கட்டுகுருந்தவிலுள்ள கத்தோலிக்க ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா >> 24

கேப்பாபிலவு மக்களுக்கு ஆதரவாகப் புதனன்று

## கொழும்பில் போராட்டம்

கொழும்பு, பெப். 20
கேப்பாபிலவு, பிலக்குடியிருப்பு மக்களின் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி நாளை மறுதினம் புதன்கிழமை கொழும்பு- கோட்டை தொடருந்து நிலையத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. >> 22




## யாரின் உத்தரவில் நடக்கிறது மாற்றம்?

முல்லைத்தீவு, பெப். 20
பிலக்குடியிருப்பில் நிலை கொண்டுள்ள வான் படையினரின் எச்சரிக்கைப் பலகை நேற்று மூன்றாவது தடவையாகவும் >> 23

## யாழ்ப்பாணம் வரும் மைத்திரிபால 238 ஏக்கர் காணிகளை விடுவிப்பார்

யாழ்ப்பாணம், பெப். 20
அரச தலைவரின் யாழ்ப்பாண வருகையின் போது 238 ஏக்கர் நிலப்பரப்பு விடுவிக்கப்படவுள்ள தாகத் தெரியவருகின்றது.
ஜனவரி மாதம் 4ஆம் திகதி பல் வேறு நிகழ்வுகளில் பங்கெடுப்பதற்காக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்துக்கு வருகை தரத் திட்டமிட்டிருந்தார். இருப்பினும் இறுதி நேரத்தில் அந்தப் பயணம் இடைநிறுத்தப்பட்டது. இந்தப் >> 24

17ஆவது நாள்

## புதுக்குடியிருப்பு மக்களின் போராட்டம் தொடர்கிறது

முல்லைத்தீவு, பெப். 20
புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்னால் உள்ள தமது பூர்வீகக் காணிகளில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் காணிகளை மீளக் கையளிக்க வலியுறுத்தி மக்கள் முன்னெடுக்கும் அறவழிப் போராட்டம் நேற்று 17ஆவது >> 22

## கச்சதீவுத் திருவிழாவில் பங்கேற்க 5, 000 இந்தியப் பக்தர்கள் முற்பதிவு

யாழ்ப்பாணம், பெப். 20
அடுத்த மாதம் நடைபெறவுள்ள கச்சதீவுத் திருவிழாவில் பங்கேற்பதற்கு இதுவரை 5 ஆயிரத்து 15 இந்தியப் பக்தர்கள் பதிவு செய்துள்ளதாக, ராமேஸ்வரம் வேட்காடு பங்குத் தந்தை சகாயராஜ் தெரிவித்தார்.
கச்சதீவு அந்தோனியார் ஆலய உற்சவம் அடுத்த மாதம் 11ஆம், 12ஆம் திகதிகளில் நடைபெற வுள்ளது.
கடந்த டிசெம்பர் மாதம் திறந்து வைக்கப்பட்ட புதிய ஆல யத்திலேயே இந்த முறை திருவிழா இடம்பெறவுள்ளது.
கடந்த ஆண்டு பெப்ரவரி 20 ஆம் மற்றும் 21ஆம் திகதிகளில் நடைபெற்ற கச்சதீவுத் திருவிழாவில் 3 ஆயிரத்து 249 இந்தியப் பக்தர்கள் பங்கெடுத்திருந்தனர்.
இந்த ஆண்டு திருவிழாவில் பங் கெடுப்பதற்காக இதுவரையில் 5 ஆயிரத்து 15 பேர் வரையில் பதிவு செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5)

# கூட்டமைப்பு, ஜே.வி.பியின் ஆதரவுடன் திருத்தங்களை கொண்டுவரவேண்டும் அரசு

## ரணில் முன்னிலையில் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 20
நாட்டில் கூட்டு அரசைக் கொண்டுவர தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பியின் ஆதரவு பெரும் செல்வாக்கு செலுத்தியது. எனவே, இந்த அரசு எந்தத் திருத்தம் மேற்கொண்டாலும் அந்த இரண்டு கட்சிகளினதும் முழு ஆதரவுடனேயே மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.
நெதர்லாந்து மற்றும் இலங்கை அரசுகளின் அனுசரணையில் மாவனல்லை, ஹெம்மாத்தகம நீர் வழங்கல் திட்டம் 15 ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், கபீர் ஹாசீம், ஹரின் பெர்னாண்டோ மற்றும் இலங்கைக்கான நெதர்லாந்துத் தூதுவர் திருமதி.ஜோனி டூர்னிவார்ட் உள்ளிட்டோரின் பங்குபற்றலுடன் ஹெம்மாதகம நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஹக்கீம், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை அருகில் வைத்து சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகளின் உரிமைகள் குறித்து உரையாற்றினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:
'நாடாளுமன்ற அரசமைப்பு உப குழுவிலிருந்து மகிந்த அணியினர் விலகியுள்ளமை அவர்களின் தோல்வியின் மற்றுமொரு அடையாளம். ஆனால், நாங்கள் இது தொடர்பில் தெளிவாக ஆராய்ந்து பேசியுள்ளோம். தேர்தலின்போது வழங்கிய வாக்குறுதிக்கு அமைவாக அரசமைப்புத் திருத்தம் மேற்கொள்ளப்படும்.
ஒற்றையாட்சிக்குப் பாதிப்பு ஏற்படப்போவதாகவும், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீண்டும் இணைக்கப்படப்போவதாகவும் எந்தவித பொறுப்பும் இன்றி தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக மகிந்த அணியினர் பொய்ப்பரப்புரைகளை முன்னெடுக்கின்றனர். இவ்வாறான எந்தவிதத் தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேலைத்திட்டங்களை நாட்டின் பெரும்பான்மை மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்மானமொன்றுக்கு வருவதற்கு நாங்கள் முயற்சிக்கின்றோம். சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமை இதற்கு நேரடியாக முன்வந்து மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றும் என்று நாம் நம்புகின்றோம்.
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் கூட்டணி நாங்கள் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்குத் தடையாக இருக்கும் என்பது உறுதி.
உள்ளூராட்சி சபைத் தேர்தல் குறித்தும் சில பிரச்சினைகள் எழுந்துள்ளன. இவை தொடர்பில் தீர்மானம் எடுக்கும்போது சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகளின் கருத்துக்களைக் கேட்டறிந்த பின்னரே தீர்மானம் எடுக்க வேண்டும்.
ஊடகங்களில் இது தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் வெளியாகியுள்ளன. எனினும், ஜே.வி.பி. தலைவர் உள்ளிட்ட அனைத்து சிறுபான்மை, சிறு கட்சிகளின் தலைவர்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்ட பின்னரே உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் தீர்மானம் எடுக்க வேண்டும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நான் இன்று (நேற்றுமுன்தினம்) வலியுறுத்துகிறேன்' - என்றார். (வ-4)

## உள்ளூராட்சித் தேர்தலுக்கு சுதந்திரக் கட்சி தயாராகிறது

கொழும்பு, பெப். 20
எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சி விரிவான செயற்றிட்டமொன்றை வகுத்து வருகின்றது என்று அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.
நாட்டின் சகல தேர்தல் தொகுதிகளிலும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் மாபெரும் கூட்டங்களை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதுடன், கம்பஹா மாவட்டத்தில் நடக்கவுள்ள முதல் கூட்டம் தொடர்பில் கலந்துரையாட அத்தொகுதியின் அமைப்பாளர்கள் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதிக்கு கடந்த வாரம் அழைக்கப்பட்டிருந்தனர். இந்தக் கலந்துரையாடலில் முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரணதுங்கவும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முதன்மைச் செயலாளர் மகிந்த அமரவீரவும் கலந்துகொண்டனர்.
இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட கம்பஹா தொகுதி அமைப்பாளர்களும், ஏனைய பிரமுகர்களும் தற்சமயம் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் பிளவைச் சரிசெய்து முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவையும் இணைத்து ஒரே அணியாகச் செயற்படாவிட்டால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றிபெறும் வாய்ப்பு குறைந்துபோகும் எனக் கருத்துத் தெரிவித்தனர்.
எனினும், இந்தக் கருத்துக்கு சந்திரிகாவும், மகிந்த அமரவீரவும் இணக்கம் தெரிவிக்கவில்லை எனவும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு வெற்றிவாய்ப்பை உறுதிப்படுத்தும் வகையில் தொகுதி அமைப்பாளர்கள் செயற்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-4)

## தெற்கு இனவாதிகளை வடக்கு மாகாண சபை கண்டிக்கவேண்டும்

### வலியுறுத்தும் பிரேரணை நாளை சபைக்கு

யாழ்ப்பணம், பெப். 20
வில்பத்து சரணாலயத்தையும் அதனை அண்டிய காடுகளும் அழிக்கப்பட்டு முஸ்லிம் மக்களைக் குடியேற்றுவதாக இனவாதத்தை தூண்டும் தென்னிலங்கை இனவாதிகளை வடக்கு மாகாண சபை கண்டிக்க வேண்டும். அத்துடன் அரச அத்தலைவர் மைத்திரிக்கும் இது தொடர்பில் தெரிவிக்க வேண்டும்.
இவ்வாறு வலியுறுத்தும் பிரேரணையை நாளை வடக்கு மாகாண சபை அமர்வில் முன்மொழிகிறார் எதிர்க்கட்சி உறுப்பினர் அ.ஜெயதிலக.
அண்மையில் சில ஊடகங்களும் சுற்றுச்சூழலியல்வாதிகளும், வில்பத்துச் சரணாலயமும் அதனை சுற்றியுள்ள அடர்ந்த காட்டுப் பகுதியையும் காடழிப்புச் செய்து முஸ்லிம் மக்களைக் குடியமர்த்துவதாக நாட்டினுள் எதிர்ப்பை உருவாக்கியுள்ளதுடன் அந்த மக்களின் மீளக் குடியேறும் உரிமையைப் பறித்துக்கொண்டு இருக்கின்றார்கள்.
1990ஆம் ஆண்டில் மன்னார் உள்ளிட்ட வடக்கு மாகாணத்தின் எல்லா முஸ்லிம் மக்களும் வெளியேற்றப்பட்டனர். மன்னார் மாவட்டத்தில் முசலிப் பிரதேச செயலக பிரிவில் மறிசிக்கட்டி, கரதிக்குழி, பாலான்குழி, கொண்டச்சி மற்றும் விளாத்திகுளம் உள்ளிட்ட ஆறு கிராமங்களில் மீள் குடியமர்த்தும் நடவடிக்கைகள் 2012ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. அது சட்டரீதியாக மேற்கொள்ளப்படுகின்றது.
எனவே தென்னிலங்கையில் உள்ள சில இனவாதிகள், மதவாதிகள் மற்றும் சுற்றாடல் அமைப்புக்களினால் பரப்பப்படும் பொய்யான தகவல்களை வடக்கு மாகாண சபை கண்டிக்க வேண்டும். அத்துடன் இந்த விடயம் தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் சபை ஊடாக தெரிவிக்க வேண்டும் என்று அவர் தனது பிரேரணையில் முன்மொழியவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-8)

### யாழ். பல்கலையில் மோதல்

## தென்பகுதி மாணவர்கள் 6 பேர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், பெப். 20
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தில் கல்வி பயிலும் தென்னிலங்கை மாணவர்களிடையே ஏற்பட்ட மோதலில் 4 பேர் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். மோதலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 6 பேரைக் கைதுசெய்துள்ளதாகக் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.
'யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ பீட 3ஆம் வருடத்தில் கல்வி பயிலும் தென்னிலங்கை மாணவர்கள் சிலர் வெளியில் தங்கி தமது கல்வியைத் தொடர்ந்து வருகின்றனர். அவ்வாறு வெளியில் தங்கியுள்ள மாணவர்களை தாம் தங்கியுள்ள விடுதிக்கு வந்து தங்குமாறு ஏனைய மாணவர்கள் அழைத்துள்ளனர்.
இவ்வாறு அழைக்கப்பட்ட மாணவர்கள் வருகை தராததனையடுத்து விடுதியில் தங்கியுள்ள மாணவர்கள் நேற்று முன்தினம் பல்கலைக்கழக மைதானத்தில் கைகலப்பில். ஈடுபட்டுள்ளனர்' என்று ஆரம்ப விசாரணையில் தெரிவிக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
'கைகலப்பின் போது, தாக்குதலுக்குள்ளான மாணவர்கள் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்தனர். முறைப்பாட்டின் பிரகாரம் குறித்த மாணவர்களை விசாரணைக்கு வருமாறு நேற்று ஞாயிற்றுக்கிழமை பொலிஸார் அழைத்த போது, விடுதியிலுள்ள மாணவர்கள் 7 பேர் பரமேஸ்வராச் சந்தியை அண்மித்துள்ள வீட்டில் தங்கியிருந்த 8 மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.
தாக்குதலில் 4 மாணவர்கள் காயமடைந்தனர். படுகாயமடைந்த மாணவன் ஒருவர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். 6 பேர் நேற்று ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். மாணவர்களிடம் விசாரணையை மேற்கொண்டு வருகின்றார்கள். விசாரணையின் பின்னர் நீதிமன்றில் அவர்களை முற்படுத்துவார்கள்' என்று கோப்பாய் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4,106)

# 3 மாதங்களுக்குள் தேர்தல் இல்லையேல் மக்கள் போராட்டம்

## அரசை எச்சரிக்கிறது மகிந்த அணி

கொழும்பு, பெப். 20
உள்ளூராட்சி சபைத் தேர்தலை இன்னும் மூன்று மாதங்களுக்குள் நடத்தாவிட்டால் அரசுக்கு எதிராக லட்சக்கணக்கான மக்களை வீதியில் இறக்கிப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று மகிந்த் ஆதரவு அணி எச்சரித்துள்ளது.
மகிந்த ஆதரவு பொது எதிரணியின் பதுளை மாவட்டக் கூட்டம் பதுளை வெலிகம விடுதியில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன இவ்வாறு எச்சரிக்கையை விடுத்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
மைத்திரி - ரணில் தலைமையிலான கூட்டு அரசு குறுகிய காலத்துக்குள்ளேயே வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது. நாட்டு மக்களின் பலத்த எதிர்ப்பையும் எதிர்கொண்டுள்ளது. ஆட்சியை நீடிக்க முடியாமல், இந்த ஆட்சி தத்தளித்துக்கொண்டிருக்கின்றது. நோய்வாய்ப்பட்டிருக்கும், இந்த அரசுக்கு ஒட்சிசன் ஏற்றப்பட்டாலும், நோயைக் குணமாக்க முடியாது. படுபாதாளத்தை நோக்கி, இந்த ஆட்சி சென்றுகொண்டிருக்கின்றது.
ஆட்சியாளர்களிடையே குழப்பகரமான சூழல் ஏற்பட்டுள்ளது. அவர்கள் ஒவ்வொரு வரும் மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். மத்திய வங்கியில் ஊழல், மோசடிகள் இடம்பெற்றிருக்கின்றன. இந்த விடயங்களில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மௌனம் சாதித்து வருகின்றார்.
99வருடங்களுக்கானகுத்தகைக்கு, எமது நாட்டின் வளங்கள் வெளிநாட்டவர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அந்த 99 வருடங்கள் நிறைவு பெற்றதும், மீளவும் 99 வருடங்களுக்கு அந்த நாட்டவர்களுக்கே வழங்கப்படும் வகையில் உடன்படிக்கை கைச்சாத்தப்பட்டிருக்கின்றது.
மக்கள் வாக்குகளை அளித்து, ஆட்சியாளர் களை நியமித்திருப்பது 5 வருடங்களுக்கு மட்டுமே. அந்த நிலையில், நாட்டு வளங்களை வெளிநாட்டவர்களுக்கு 99 வருடங்களுக்குக் குத்தகைக்கு விடுவதற்கு, ஆட்சியாளர் களுக்கு யார் அதிகாரம் கொடுத்தது? இதற்கு அவர்கள் பதில் கூறியாக வேண்டும் - என்றார். (வ-4)



# சினிமா, பேஸ்புக்கில் மூழ்காதீர்கள்: தனித்துவமானவர்கள் ஈழத்து இளைஞர்கள்

*தமிழக கவிஞர் விஜய் அறிவுரை*

யாழ்ப்பாணம், பெப்.20

இங்குள்ள இளைஞர்கள் திரையுலகம், முகப்புத்தகம், ருவிற்றரில் உலாவ வேண்டியவர்கள் அல்ல. உங்களுக்குள் மிகப் பெரிய போராட்டம் உள்ளது. நீங்கள் விழித்து வெளிவந்து உங்களுக்குள் உள்ள ஆற்றலை வெளி உலகத்துக்கு வெளிப்படுத்த வேண்டும். அதன் மூலம் ஓர் அங்கீகாரத்தைப் பெற்று அடுத்த தலைமுறைக்கு விளக்கேற்றவேண்டிய சூழலில் உள்ளவர்கள். இதற்கான தன்னம்பிக்கை உங்களிடம் உண்டு.

இவ்வாறு தெரிவித்தார் தமிழகக் கவிஞர் பா.விஜய்.

வெண்தாமரை இயக்கத்தின் ஏற்பாட்டில் கல்வி கற்கும் பல்கலைக் கழக மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையில் நடந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

உலகின் சரித்திரங்களே மிரண்டுபோகும் வீர வரலாறு எழுதிய யாழ். மண்ணுக்கு முதன் முதலாக வந்துள்ளேன். இந்த மண்ணை வணங்குகின்றேன். இந்த மண்ணை எடுத்துச்சென்று எனது பூசை அறையில் வைத்து வணங்கவே விரும்புகின்றேன். மாபெரும் வீர வரலாறு இடம் பெற்றது இந்த மண்ணில். மறக்க முடியாத மாபெரும் சரித்திரம் குடிகொண்டுள்ளது இந்த மண்ணில். தமிழகத்தில் உலகத்தையே திரும்பிப்பார்க்க வைக்கும் அளவுக்கு அண்மையில் நடந்த நிகழ்வு மெரீனா கடற்கரையில் நடந்த போராட்டம். அது இனத்தின் கலாசாரத்தை மீட்க இடம் பெற்றது. அந்தப் போராட்டத்தின் மூன்றாம் நாள் பங்கு கொண்டேன். அதே உணர்வோடு இன்று இந்த மண்ணில் கால் பதிக்கின்றேன்.

**நிலைமை வேறு**

நான் தமிழகத்தில் வருடத்துக்கு 40 கல்லூரிகளுக்குச் செல்வேன். அங்குள்ள மாணவர்களைச் சந்திக்கும் மன நிலைவேறு, உங்களைச் சந்திக்கும் மன நிலைவேறு. தமிழக மாணவர்களையும், இங்குள்ள மாணவர்களை யும் ஒரே மாதிரியாக எண்ணிப் பார்க்க என்னால் முடிய வில்லை. எமது நாட்டில் உள்ள பாதுகாப்பு, கைகொடுத்து உதவுவதற்குரிய ஆள், கேட்டது கிடைக்கும் நிலமை. இங்கு வேறு சூழல். உங்களைப்போன்ற மாணவர்களே நாளைய எடுத்துக்காட்டான தலைவர்கள். உலகில் அழித்து ஒடுக்கப்படும் இனத்தில் இருந்துதான் தலைவன் பிறப்பான். அப்படியான ஓர் இனமே நீங்கள்.

**சாதிப்போரே தேவை**

இந்த இனத்துக்கு நிறையப் பேசுபவர்கள் அன்றி நிறைய சாதிக்கின்றவர்களே இன்று வேண்டும். எவன் ஒருவன் தான் பட்ட அவமானத்தைச் சேமித்து வைத்திருக்கின்றானோ அவன் நிச்சயமாக அரியாசனம் ஏறுவான். வாழ்வில் நடந்த அவமானம் அத்தனைக்கும் உலகம் பதில்சொல்லியே ஆகவேண்டும் என்ற ஒற்றைக் கனவோடும் முயற்சியோடும் உங்கள் பயணங்களை தொடங்குங்கள். உறுதியாக இந்த உலகம் ஒரு நாள் தனது கரத்தை உயர்த்தும். அப்போது உங்களுக்கான சிம்மாசனத்தை வழங்கும். அதில் மாற்றம் இல்லை.

யாழ்ப்பாணத்துக்கு கொழும்பின் ஊடாகப் பயணித்த வெறும் 8 மணிநேர பயண வலியையே என்னால் தாங்க முடியவில்லை. மிகப் பெரிய இதய வலியை சுமந்து கொண்டு எவ்வளவு உற்சாகமாக இங்கு ஓர் இனம் உள்ளது. அதற்கு எவ்வளவு மனத்திடம் வேண்டும் என எண்ணுகின்றேன். என் உள்ளத்தில் ஊறும் உணர்ச்சிகளை முழுமையாக சொல்ல முடியாத தருணத்தில் இருக்கின்றேன். உங்களால் புரிந்து கொள்ள முடியும் என நினைக்கின்றேன்.

**அறிவால் ஜெயிக்கலாம்**

இந்த இனத்துக்கு விடிவு கிடைக்க வேண்டுமானால் அது மாணவர்களின் கையிலேயே உள்ளது. கையில் ஆயுதம் இருந்தால் பறிக்கப் படலாம், பணம் இருந்தால் பறிக்கப்படலாம், உங்கள் கைகளில் அறிவை வைத்திருந்தால் அது ஜெயிக்கும். அறிவால் உலகையே மிரட்டுங்கள். அதற்கு நாம் செய்ய வேண்டியது ஒன்றுதான் தேவையில்லாத விடயத்தில் கவனம் செலுத்தாது இலக்கை நோக்கி நகருங்கள். இன்றைய இளம் சமூகம் மூழ்கும் சினிமா, முகப்புத்தகம், துடுப்பாட்டத்தில் நீங்களும் மூழ்காதீர்கள். நீங்கள் செல்லவேண்டிய தூரம் அதிகமானது.

இன்று உலகம் முழுக்கவுள்ள தமிழர்கள் உங்களுக்காகக் காத்திருக்கின்றனர். தயக்கத்தை தூக்கி எறியுங்கள் தயங்கினால் சாதிக்க முடியாது. தயக்கத்தை உடைத்த மாவீரன் நெப்போலியன். மாவீரனைப் பற்றி இந்த மண்ணில் பேசவேண்டிய தேவையில்லை. இருப்பினும் உதாரணத்துக்காக கூறினேன்-என்றார். (ற-10)

# இந்திய மீனவர் ஆக்கிரமிப்பு வடக்குக் கடலில்

## கடற்படையினரின் காத்திரமான நடவடிக்கை தேவை என வலியுறுத்து

முல்லைத்தீவு, பெப்.20

வடக்குக் கடற் பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் அதிகரித்துள்ளது. கடந்த இரு நாள்களில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 3 மீனவர்களின் 80 லட்சம் ரூபா பெறுமதியான வலைகள் வெட்டப்பட்டு நாசமாக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசத் தலைவர் மரியராசா தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவில் தற்போது பருவ கால மீன்பிடி ஆரம்பித்துள்ளது. முல்லைத்தீவு கடற்கரைக்கு அண்மையாக இந்திய இழுவைப் படகுகள் கடந்த இரு நாள்களாக மீன்பிடியில் ஈடுபடுகின்றன. கரையில் இருந்து 4 கடல் மைல் தொலைவில் மீன் பிடிக்கின்றனர். அவர்கள் முல்லைத்தீவு மீனவர்களின் பெறுமதியான வலைகளை வெட்டி நாசமாக்குகின்றனர்.

நேற்று பொக்கணை, மாத்தளனில் தொழிலுக்குச் சென்ற மீனவர்களின் 80 லட்சம் ரூபா பெறுமதியான வலைகள் அறுத்து நாசமாக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளோம். முல்லைத்தீவு மாவட்ட கடற்படையினர் பாராமுகமாக இருக்கின்றனர். அதுவே இந்திய மீனவர் அத்துமீறலுக்கு காரணம். மாவட்டச் செயலரும், உரிய அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றார்.

**தொடரும் அவலம்**

கடந்த 4 மாதங்களாக வடக்கு மாகாணக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் படையெடுப்பு அதிகரித்துள்ளது. மன்னார், சுண்டிக்குளம், முல்லைத்தீவுக் கடற்பரப்புகளில் கரையில் இருந்து 1 முதல் 5 கடல் மைல் தூரத்தில் அவர்கள் ரோலர் மூலம் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர்.

கடந்த நவம்பர் மாதம் 14 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு மன்னார் கடற்பரப்பில் தாழ்வுப்பாடு மீனவர்கள் பல லட்சம் ரூபா பெறுமதியான வலைத் தொகுதிகளை பாய்ச்சி விட்டு கரை திரும்பி மறுநாள் காலை சென்ற போது அங்கு வலைகள் இல்லை. நீண்ட தூரம் சென்று பார்த்தபோது இந்திய மீனவர்கள் அவற்றைத் தமது படகுகளில் ஏற்றுவதை அவ தானித்தனர். வலைகள் தாழ்வுப்பாடு மீனவர் களுடையவை என்று உறுதிப்படுத்திய போதும் அவற்றைத் தராது எடுத்துச் சென்றனர்.

கடந்த மாதம் 22ஆம் திகதி முல்லைத்தீவுக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் ரோலர் படகுகள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதை முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்கள் அவதானித்தனர். உடனடியாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர், மாவட்டச் செயலர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் என அனைவருக்கும் தகவல் வழங்கப்பட்டது. இந்திய மீனவர்களின் அத்துமீறலை கடற்படையினரோ வேடிக்கை பார்க்கின்றனர். அத்துமீறலைக் கட்டுப்படுத்த் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கடந்த 8 ஆம் திகதி மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாசத் தலைவர் யஸ்ரின் சொய்சா மத்திய மீன்பிடி அமைச்சருக்குத் தெரியப்படுத்தினார்.

கடந்த 17ஆம் திகதி யாழ்ப்பாணம் சுண்டிக்குளம் தொடுவாய் பகுதியில் உள்ளூர் மீனவர்களின் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் இந்திய மீனவர்களால் திருடிச் செல்லப்பட்டது. கட்டைக்காடு சென்மேரிஸ் கடற்றொழில் சங்க தலைவர் ஜெ.கிறிஸ்டிராஜா இதனை உறுதிப்படுத்தினார்.

நேற்றும், நேற்று முன்தினமும் முல்லைத் தீவுக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களுடைய படையெடுப்பு அதிகரித்துள்ளது. மீனவர்களுடைய வலைகள் அறுக்கப்பட்டுள்ளன. (ற-21,7)



## கூட்டரசிலிருந்து வெளியேறுவதை தீர்மானிப்பது அரச தலைவரே

*துமிந்த கூறுகின்றார்*

கொழும்பு, பெப்.20

கூட்டு அரசில் இருந்து சிறி லங்கா சுதந்திரக் கட்சி விலகவுள்ளது என்று சில அமைச்சர்கள் ஊடகங்களில் தெரிவித்து வரும் கருத்துக்கள் அவர்களது தனிப்பட்ட கருத்துக்களே. அவை கட்சியின் உத்தியோகபூர்வ அறிவிப்புக்கள் அல்ல.

இவ்வாறு அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அரசுக்குள் பங்காளியாகவுள்ள இருபெரும் கட்சிகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பொது மேடைகளில் வீரர்கள் போன்று பேசுவதனால் முடியாது.

அரசுக்குள் உள்ள கருத்து முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்வதற்கு இரு கட்சிகளிடையேயும் பேச்சு ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

அரசிலிருந்து விலகுவது குறித்த காலம், நேரம் என்பவற்றைத் தீர்மானிப்பது கட்சியின் தலைவரான அரச தலைவரும், கட்சியின் நிறைவேற்றுக் குழுவுமாகும் - என்றார். (ற)

# முல்லைத்தீவில் போராடும் மக்களுக்கு அரசு உடனே தீர்வு வழங்க வேண்டும்

## மகளிர் அபிவிருத்தி நிலைய பணிப்பாளர் வலியுறுத்து

முல்லைத்தீவு, பெப்.20

முல்லைத்தீவில் முன்னெடுக்கப்படும் காணி மீட்புப் போராட்டத்தில் பெரும் பங்கு வகிப்பவர்கள் பெண்கள். அவர்களது ஓயாத தியாகம் மதிக்கப்பட வேண்டும். தரவுகள் வந்து குவிந்த போதிலும் அதிகாரத்தில் இருப்பவர்கள் அலட்டிக் கொள்ளாமல் இருப்பது வேதனை அளிக்கின்றது. அரசு இந்தப் பிரச்சினைக்கு உடன் தீர்வு வழங்க வேண்டும்.

இவ்வாறு மகளிர் அபிவிருத்தி நிலைய பணிப்பாளர் சரோஜா சிவசந்திரன் தெரிவித்தார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் உள்ளதாவது:

இழப்புக்களை சந்தித்து அரசியல் ரீதியான தீர்வுகளில் நம்பிக்கை இழந்தவர்களாக தாமாகவே வீதிக்கு வந்துள்ளனர். கூட்டரசில் தமக்குநீதி கிடைக்கும், தமது நிலங்கள் தமக்குக் கையளிக்கப்படும் என நம்பியே வருடங்கள் பறந்தோடி விட்டன. எதுவுமே சாத்தியப்படவில்லை. அங்கொன்றும்

இங்கொன்றுமாக நிலவிடுவிப்பு நடந்தாலும் மக்கள் பல பிரச்சினைகளோடு தமது அன்றாட வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருக்கின்றார்கள் என்பதே உண்மை-என்றுள்ளது. (ற-21)

## பிலக்குடியிருப்பு மக்களுக்கு ஆதரவாக இணையவழி கையெழுத்துச் சேகரிப்பு

யாழ்ப்பாணம்.பெப்.20

வான் படையினர் வசமுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி கேப்பாபிலவு- பிலக்குடியிருப்பு மக்கள் மேற்கொண்டு வரும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து இணையவழி கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் கையெழுத்துக்கள் பிரிட்டன் நாடாளுமன்றம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

http://change.org என்ற இணைய முகவரிக்குச் சென்று பறிக்கப்பட்ட தமது வாழ்விடங்களுக்காகப் போராடும் கேப்பாபிலவு மக்களுக்கான மனுவினை உலகின் எப்பகுதியில் இருந்தும் பதிவுசெய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5)

## நீதித்துறைச் சுயாதீனத்துக்கு கூட்டு அரசினால் நெருக்கடி

### மகிந்த குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 20

சட்டத்தரணி இராமநாதன் கண்ணனுக்கு மேல் நீதிமன்ற நீதிபதி நியமனம் வழங்கியதன் மூலம் கூட்டு அரசின் நீதிமன்ற சுதந்திரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் சிறப்பு அறிக்கை ஒன்றை அவர் விடுத்துள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த அரச தலைவர் தேர்தலின் போது தற்போதைய ஆட்சியாளர்களுக்கு ஆதரவு வழங்கிய ஒரு அரசியல் கட்சியை திருப்திப்படுத்தும் நோக்கத்துடன் மட்டக்களப் பில் பணியாற்றிய சட்டத்தரணி இராமநாதன் கண்ணனுக்கு மேல் நீதிமன்ற நீதிபதி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் பதவி உயர்வுகளை எதிர்பார்த்திருக்கும் நீதிபதிகளுக்கு பலத்த அநீதி ஏற்பட்டுள்ளது. இந்த நியமனத்தின் மூலம் நீதிமன்றங்களின் சுயாதீனத்தன்மை பறிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்த நியமனத்தை நீக்குவதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த குற்றச்சாட்டுக்களை அண்மையில் நிராகரித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் வேண்டுகோளுக்கு அமையவே சம்பந்தப்பட்ட நியமனத்தை தான் மேற்கொண்டதாகத் தெரிவித்தார்.

தலைமை நீதியரசரின் பரிந்துரையில் இந்த நியமனம் வழங்கப்பட்டதாகக் கூறிய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இவ்வாறான நியமனமொன்றை மேற்கொள்ள சட்டரீதியாக தனக்கு தடைகள் எதுவும் இல்லை என்றும் தெரிவித்தார். (வ-5)

## வீட்டில் திருடியவரை நீதிமன்றில் அடையாளம் காட்டினார் பூசகர்

யாழ்ப்பாணம்.பெப்.20

2015ஆம் ஆண்டு அல்வாய் திக்கம் பகுதியில் பூசகர் வீட்டில் எட்டு லட்சத்து அறுபது ஆயிரம் ரூபா பெறுமதியான திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர் சாட்சியினால் அடையாளம் காண்பிக்கப்பட்டார். இதனால் சந்தேகநபரின் விளக்கமறியல் மார்ச் மாதம் 3ஆம் திகதி வரை பருத்தித்துறை நீதிவான் மன்றினால் நீடிக்கப்பட்டது.

பருத்தித்துறை திக்கம் பகுதியில் 2015ஆம் ஆண்டு 11ஆம் மாதம் பூசகர் வீட்டில் எட்டு லட்சத்து அறுபது ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டன. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் இரண்டு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் விளக்கமறியலில் இருந்து வருகின்ற நிலையில் மேலும் இரண்டு பேர் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தனர்.

சந்தேகநபரை அனைத்துப் பொலிஸ் நிலையங்கள் ஊடாகவும் தேடப்பட்டு வந்தநிலையில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு மானிப்பாயில் வைத்து சந்தேகநபரை மானிப்பாய் பொலிஸார் கைது செய்தனர். அவர் விளக்கமறியலில் இருந்து வருகின்றார்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை கடந்த வாரம் பருத்தித்துறை நீதிவான் மன்றில் இடம்பெற்றது. சந்தேகநபரை இனங்காட்டுவதற்கான அடையாள அணிவகுப்பு பருத்தித்துறை நீதிவான் முன்னிலையில் நடைபெற்றது. தனது வீட்டில் களவாடிய நபரை பூசகர் இனங்காட்டினார். இதனையடுத்து சந்தேகநபரை எதிரவரும் மார்ச் மாதம் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (வ-26,ரி)

# யாழ். பல்கலையை பெரும்பான்மையினருக்கு தாரைவார்க்கும் நிலைக்கு இடமளிக்கக்கூடாது

## சரவணபவன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 20

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முக்கிய பீடங்களுக்கு தமிழ் மாணவர்கள் தெரிவு செய்யப்படும் வீதம் குறைவடைந்து செல்கின்றது. எங்களது பல்கலைக்கழகத்தை பெரும்பான்மையினருக்கு நாங்களே தாரைவார்க்கும் நிலை ஏற்படக் கூடாது. நாம் விழிப்படைய வேண்டும். கல்வியில் மீண்டும் பழைய நிலையை அடைய வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

கோண்டாவில், மக்கள் நலன்பேணும் அமைப்பின் அலுவலகத் திறப்பு விழாவும், தையல் பயிற்சி நிலைய ஆரம்ப நிகழ்வும் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்றைய இளைஞர்கள் கல்வியிலும், தொழில்துறையிலும் முன்பு காட்டிய அக்கறையைக் காண்பிப்பதாகத் தெரியவில்லை. வெளிநாடு சென்று உழைக்க வேண்டும் என்ற மனநிலைதான் அவர்களிடம் வளர்ந்து செல்கின்றது. இது கல்வி மீதான ஈர்ப்பைக் குறைத்து விடுகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்படும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது. கலைப்பீடத்துக்கு மாத்திரமே தமிழ் மாணவர்கள் செல்கின்ற நிலை உருவாகி வருகின்றது. விஞ்ஞான, வணிக பீடங்கள் உள்ளிட்ட ஏனைய பீடங்களை சிங்கள மாணவர்கள் ஆக்கிரமிக்கத் தொடங்கியுள்ளனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு உள்வாங்கப்படும் சிங்கள மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்துச் செல்கின்றது. எமது பாரம்பரியம் - சொத்து - அடையாளமாக இருக்கின்ற யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தை சிங்களப் பெரும் பான்மையிடம் இழந்து விடுவோமோ என்ற அச்சம் இயல்பாகவே எழுகின்றது.

இது சாதாரண விடயம் அல்ல. எங்கள் கல்விப் புலத்தினர் கண்கொத்திப் பாம்பாக இதனை அவதானிக்க வேண்டும். நாங்கள் கல்வி நிலையில் மீண்டும் முன்னுக்கு வரவேண்டும். எங்கள் பல்கலைக்கழகத்தை எங்களது மாணவர்கள் நிரப்ப வேண்டும்.

இதேவேளை இங்கு பல இடங்களில் தொழில் பயிற்சி வழங்குகின்றார்கள். பலர் அதற்கு விண்ணப்பிக்கின்றார்கள். ஆனால் பயிற்சிக் காலம் முடியும் முன்னரே இளையோர்கள் இடைவிலகுகின்றனர். இது ஆரோக்கியமானது அல்ல. போரால் பாதிக்கப்பட்ட நாங்கள் தொடர்ந்தும் பாதிப்புக்களைச் சொல்லிக் கொண்டிருக்காமல் முன்னேற வேண்டும். பொருளாதாரத்தில் நாம் மேம்பட வேண்டும்.

பொருளாதாரம் - கல்வி இரண்டிலும் தமிழன் தலை நிமிர்ந்து, கடந்த காலத்தைப் போன்று மேம்பட்டு வாழ அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் - என்றார். (வ-5-8)

## கொள்ளைக் கும்பல் கடத்திய ஆட்டோ வல்வையில் மீட்பு

யாழ்ப்பாணம், பெப். 20

கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்பட்ட முச்சக்கர வண்டி வல்வெட்டித்துறைப் பகுதியில் அநாதரவான நிலையில் நின்றபோது மீட்கப்பட்டதாக வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

'இனந்தெரியாத மூவரால் நேற்று முன்தினம் தனது முச்சக்கரவண்டி கடத்திச் செல்லப்பட்டதாக அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முச்சக்கரவண்டியின் சாரதியால் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள முச்சக்கர வண்டி தரிப்பிடத்தில் 29 வயதுக்குட்பட்ட பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் கச்சேரிக்குப் போகவேண்டும் என்று குறித்த முச்சக்கரவண்டியை வாடகைக்கு அமர்த்தியுள்ளனர்.

கச்சேரியில் இருந்து அதே முச்சக்கர வண்டியில் அச்சுவேலி போகவேண்டும் என்று தெரிவித்து அச்சுவேலி சென்றடைந்தனர். பின்னர் தொண்டைமானாறு பாலத்துக்கு சென்றுள்ளனர். தொண்டைமானாறு பாலத்துக்கு முச்சக்கரவண்டி சென்றுகொண்டிருந்த போது, வளலாய்ப் பகுதியில் வைத்து முச்சக்கரவண்டியை மறித்து இந்த இடத்தில் விட்டால் போதும் எவ்வளவு பணம் என்று கொச்சைத் தமிழில் அந்த இளைஞர்கள் கேட்டுள்ளனர். அவர்களை இறக்கிவிட்டு மீற்றரை சரிசெய்துவிட்டு இவ்வளவு பணம் என்று கூறியபோது பின்னால் மறுபக்கத்தால் வந்த இளைஞன் இரும்புக் கொட்டனால் முச்சக்கரவண்டிச் சாரதியை தாக்கியுள்ளார்.

மற்றொரு இளைஞன் ரீசேட்டினால் சாரதியின் கழுத்தை நெரித்துக்கொண்டிருக்கும் போது, மற்றொருவர் அவரது பொக்கற்றில் இருந்த 10 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்தார். இவர்கள் மூவரின் பிடியில் இருந்து முச்சக்கரவண்டி சாரதி தப்பித்து ஓடியவேளை அவர்கள் மூவரும் அந்த முச்சக்கர வண்டியை கடத்திக்கொண்டு சென்றுவிட்டனர்.


கோப்புப் படம்

வல்வெட்டித்துறை உதயசூரியன் கடற்கரைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் பகல் 11 மணியிலிருந்து இரவு வரை அநாதரவான நிலையில் முச்சக்கரவண்டி ஒன்று நிற்பதாக அந்தப்பகுதி மக்களால்வல்வெட்டித்துறைப்பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் முச்சக்கரவண்டியைக் கைப்பற்றினர். அந்த முச்சக்கர வண்டியில் இருந்து பச்சை நிற ரீசேட்டும் கைப்பற்றப்பட்டது.

கடத்தப்பட்ட முச்சக்கரவண்டியே அவ்வாறு மீட்கப்பட்டது' என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை வல்வெட்டித்துறை மற்றும் அச்சுவேலி பொலிஸார், மேற்கொண்டு வருகின்றனர். தடயவியல் பொலிஸார் கைவிரல் ரேகை அடையாளங்களைச் சேகரித்தனர். (வ-10, 26)

## வவுனியாவில் முன்னாள் போராளி சடலமாக மீட்பு

வவுனியாவில் முன்னாள் போராளி ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று முன்தினமிரவு சடலமாக மீட்கப்பட்டார். அவர் கொலை செய்யப்பட்டாரா? என்பது தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப் படுகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா கோதண்ட நொச்சிக்குளம் பகுதியில் வசித்து வரும் இலங்கராசா இளங்கோவன் (வயது - 31) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார். அவர் மூன்று பிள்ளைகளின் தந்தை. விடுதலைப் புலிகள்இயக்கத்தில்இணைந்து செயற்பட்ட போது இவர் 'கோபு' என்ற பெயரில் அழைக்கப்பட் வர். அவரது மனைவி வவுனியாவில் உள்ளஆடைத்தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிகிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா பதில் நீதிவான் சம்பவ இடத்தில் விசாரணை நடத்தினார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட வைத்திய சாலை யில் வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் சடலத்தைப் பார்வையிட்டதுடன் கிராம மக்களுடனும் கலந்துரையாடினார். (வ-4)

# வாள்வெட்டுக் கும்பல் கோப்பாயில் அடாவடி

## 8 பேர் படுகாயம்; 3 வாகனங்களுக்கும் சேதம்

யாழ்ப்பாணம், பெப். 20

'கோப்பாய் பகுதியில் நேற்று மாலை வாள்கள், பொல்லுகளுடன் 5 மோட்டார் சைக்கிள்களில் வந்த 9 பேர் கொண்ட கும்பல் கள்ளுத் தவறணைக்குமுன்னால்நின்றவர்கள் மீது மேற்கொண்ட சரமாரியான தாக்குதலில் 8 பேர் படுகாயமடைந்தனர். 3 வாகனங்களும் கும்பலால் அடித்துச் சேதமாக்கப்பட்டன' என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் குற்றச்செயல்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார். எனினும் நேற்று வாள்வெட்டுக் கும்பலின் அடாவடி இடம்பெற்றுள்ளமை குறித்து மக்கள் விசனம் தெரிவித்தனர்.

'கோப்பாய் இராச வீதியும், கைதடி -மானிப்பாய் வீதியும் சந்திக்கும் பகுதியில் அமைந்துள்ள கள்ளுத் தவறணை முன்பாக நேற்றுக் காலையில் மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதன்போது ஒருவர் தாக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறானதொரு நிலையில் நேற்று மாலை இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. காலையில் நடைபெற்ற மோதல் சம்பவத்துக்கும், மாலையில் இடம்பெற்ற சம்பவத்துக்கும் தொடர்பு உள்ளதாக நம்பப்படுகிறது. அது தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுகின்றன.

மோட்டார் சைக்கிள்களில் நேற்று மாலை அந்தப் பகுதிக்கு வந்த கும்பல் கள்ளுத் தவறணையின் முன்பாக நின்றவர்கள், அந்தப் பகுதியில் நடமாடியவர்கள் 7 பேர் மீது தாக்குதல் மேற்கொண்டது. இதில் இருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இவ்வாறு தாக்குதல் இடம்பெற்ற பகுதியில் நின்ற ஹைஏஸ் வான், முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன அடித்துநொறுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அசம்பாவிதம் இடம்பெற்ற பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மீதும் கும்பல் தாக்குதல் நடத்த முயற்சித்தது.

சம்பவத்தில் காயமடைந்த மூவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். எமக்கும் மற்றும் சிறப்பு அதிரடிப் படையினருக்குத் தகவல் வழங்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன' என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-101)

# 'நாங்கள் விட்டில்கள் அல்ல' நூல் வெளியீடு

வவுனியா, பெப்.20

கவிஞர் ஜீ. எம். பரஞ்சோதி எழுதிய 'நாங்கள் விட்டில்கள் அல்ல' நூல் வெளியீடு வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நேற்று பி.ப. 3.30மணியளவில் தமிழ் மணி அகளங்கன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் தலைமை விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதனும், வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப. சத்தியலிங்கமும் கலந்துகொண்டனர். சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ. நித்தியானந்தன், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி மூத்த விரிவுரையாளர் ந. பார்த்தீபன், மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ். எஸ். வாசன், மூத்த எழுத்தாளர் தமிழ்மணி மேழிக்குமரன், கௌரவ விருந்தினர்களாக சேனாதிராசா, தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார், ஆகியோர் கலந்து கொண்டனர். முதற்பிரதியை ந. பார்த்தீபன் வெளியிட, தலைமை விருந்தினர் செல்வம் அடைக்கலநாதன் பெற்றுக்கொண்டார். வவுனியா நுண்கலை மாணவர்களின் வரவேற்பு நடனம், வேப்பங்குளம் சிறுவர் இல்ல அன்பகம் மாணவர்களின் நடன நிகழ்வு என்பனவும் நடைபெற்றன.

(ற-2)

# பாதுகாப்புச் செயலருக்கு இருதய சத்திர சிகிச்சை

கொழும்பு, பெப். 20

பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சிக்கு இருதய சத்திர சிகிச்சை மேற்கொள்ளப் பட்டதாகத் தெரியவருகிறது.

சிங்கப்பூரில் உள்ள மருத்துவமனை ஒன்றில் கருணாசேன ஹெட்டியாராச்சிக்கு இருதய சத்திரசிகிச்சை வெற்றிகரமாக இடம்பெற்றுள்ளது.

அவர் மருத்துவ விடுப்பைப் பெற்றிருப்பதால், பாதுகாப்பு அமைச்சின் பதில் செயலராக புத்தளம் மாவட்ட முன்னாள் செயலர் கிங்ஸ்லி பெர்னாண்டோ, நியமிக்கப்பட்டார். இவர் பல மாவட்டங்களில் மாவட்டச் செயலராகப் பணியாற்றி வந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-4)

திருநெல்வேலி
பழங்கிணற்றடி
வீரகத்தி விநாயகர் ஆலயம்
இன்று 20.02.2017
10 ஆம் திருவிழா

திருமஞ்சத் திருவிழா
சீரார் திருநெல் வேலியிலே
திகழும் சைவத்திறனோங்க
பேரார் புகழ் பழங் கிணற்றடியின்
பீடார் பிள்ளையாரவரை
நீரார் மலர்கள் நிதந்தூவி
நீங்கா திறைஞ்சி நீறணிந்தே
பாரார் நாமெல்லாருமொன்றாய்
பணிவோம் பணிவோம் பணிவோமே.

ஹரன் ரெக்ஸ்ரைல்
பலாலி வீதி, திருநெல்வேலி.

SPECIAL OFFER
ONLY FOR UNIVERSITY STUDENTS
50% DISCOUNT
FOR ALL INTERNATIONAL Diplomas
Offer Valid till 25th of Feb 2017
021-7 572 572
*Conditions Apply
INTERNATIONAL Diplomas — PEARSON BTEC
DITEC INTERNATIONAL Diploma in Information Technology
DiE Diploma in English
DiBM Diploma in Business Management
DiCA Diploma in Computerized Accounting
DiHN Diploma in Hardware & Networking
DiGD Diploma in Graphics Designing
DiSE Diploma in Software Engineering
DiWE Diploma in Web Engineering
DiCAD Diploma in Auto CAD
DiAE Diploma in Academic English
NEW BATCHES
WEEK DAYS & WEEK END
ESOFT METRO CAMPUS
NO.137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Tel : 021 222 4142 Hotline : 077 309 9 308
Shaping Lives. Creating Futures.
Sri Lanka's Largest Private Sector Higher Education Network


World Class British Degree @ICBT Jaffna Campus
Apply now for New Intake 2017
Accredited by EQAA European Quality Assurance Agency
ICBT HND QUANTITY SURVEYING
» Entry Qualifications
• G.C.E. A/L or Equivalent
• Certificate in related field
» Duration: 2 Years
★ All HND's are equal to NVQ Level 06
★ All HND's are mapped to British qualification frame work (NQF Level 5)
Why Study ICBT ?
• Qualified Lecturer Panel
• High Quality Learning Experience
• Cafeteria/Library/Computer Laboratory/Recreation Area/Modern Lecture Halls.
• Easy Payment schemes
BIRMINGHAM CITY University
BSc (Hons) Quantity Surveying
RICS Accredited
» Entry Qualifications
Higher National Diploma in Quantity Surveying or any other accepted programs.
UGC
» Duration: 1 Year
Week End Part Time Classes
Progression Route to RICS BSc + APC → MRICS DEGREE COMPLETION IN SRI LANKA
0770 746 553 | 0769 289 784
ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk
National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner Education Service Sector

## வீரகத்தி விநாயகருக்கு புதிய நிர்வாக சபை

யாழ்ப்பாணம்,பெப்.19
ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய நிர்வாக சபைத் தெரிவு ஊரெழு கிராம உத்தியோகத்தர் தலைமையில் கடந்த 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.
நிர்வாகசபைத் தலைவராக பொ.தர்மலிங்கமும், உப தலைவராக த.ரோகன்ராஜும், செயலாளராக இ.சற்குணதாஸும், உப செயலாளராக ஐ.ஸ்ரீநிதியும், பொருளாளராக க.நாகேந்திரனும், நிர்வாக சபை உறுப்பினர்களாக செ.சுதாகரன், பா.ரதீபன், கு.கௌசல்யன், இ.கௌதமன், வி.சசிகரன், கி.சுஜிகரன் ஆகியோரும் போசகராக கிராம உத்தியோகத்தர் லா.நடராசாவும், கணக்காய்வாளர்களாக இ.நந்தகுமாரனும், வி.சிவகுமாரும் தெரிவுசெய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

## முதியோர் சங்க பொதுக்கூட்டம்

யாழ், பெப்.20
ஜே-72 கிராம அலுவலர் பிரிவில் இயங்கும் முதியோர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று 20 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு குருநகர் ஆவே மரியா பாலர் பாடசாலையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-51)

# மகிந்த அணி சீண்டினால் ஐ.தே.கட்சி பதிலடி தரும்

## ரணில் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 20
கூட்டு அரசு முன்னெடுக்கும் அபிவிருத்திப் பணிகளை மகிந்த ஆதரவு எதிரணியினர் தடுத்து நிறுத்த முற்படுவார்களாயின் ஐக்கிய தேசியக் கட்சி வீதியில் இறங்கி அதற்குத் தக்க பதிலடி கொடுக்கும். எம்மைச் சீண்டிப் பார்க்க முயற்சிக்க வேண்டாம். நாம் வீதிக்கு இறங்கினால், தாங்க மாட்டீர்கள்.
இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மகிந்த அணியினருக்குக் கடுமையாக எச்சரிக்கை விடுத்தார்.
மாவனல்லை, ஹெம்மாதகம பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள நீர் வழங்கல் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு ஹெம்மாதகம நகரில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
வறட்சிக் காலநிலை நீடித்தாலும் அத்தியாவசியப் பொருள்களின் விலை ஒருபோதும் அதிகரிக்கப்படமாட்டாது. தேவையான அரிசி இறக்குமதி செய்யப்படும். அரிசிக்கான இறக்குமதிவரி குறைக்கப்பட்டுள்ளது. சந்தையில் அரிசியின் விலை எக்காரணம் கொண்டும் அதிகரிக்கப்படமாட்டாது.
நாட்டைக் கட்டியெழுப்பும்போது ஏற்படும் இடையூறுகளைத் தவிர்க்க நாம் வீதிக்கு இறங்கவும் தயாராக உள்ளோம். அடுத்த மாத இறுதிக்குள் அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திப் பணிகளை ஆரம்பிப்போம். புதிதாகக் கப்பல் நிறுத்தும் இடங்களை ஆரம்பிப்போம். சிமெந்து தொழிற்சாலையை ஆரம்பிப்போம். இவை தொடர்பில் நாடாளுமன்றில் மேலும் பல சட்ட வரைவுகளைக் கொண்டுவருவோம். இதில் ஒன்றையேனும் யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. அவ்வாறு எமது திட்டங்களைக் குழப்ப எவரேனும் முற்படுவார்களாயின் தக்க பதிலடி கொடுப்போம்.
நாட்டின் அபிவிருத்திப் பணிகள் அனைத்தும் இளையோருக்கு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்கவும் நாட்டின் அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டுமே முன்னெடுக்கப்படும். இந்தத் திட்டங்களைக் குழப்ப முற்படுபவர்கள் இளையோருக்குத் தொழில்வாய்ப்புக்களை வழங்காது தடுக்கவே முயற்சிக்கின்றனர். அரச தலைவர் மைத்திரிபால சிறி சேன தலைமையில் எதிர்வரும் 2020ஆம் ஆண்டுவரை ஐக்கியதேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து பலவேலைத் திட்டங்களை முன்னெடுக்கும் - என்றார். (வ-4)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



31.01.2017 அன்று
சர்வதேச பண்டாரநாயக்கா
ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில்
நடைபெற்ற பொதுப்பட்டமளிப்பு விழாவில்
கல்விமாணி பட்டத்தைப் பெற்ற
பரமானந்தர் இரவிக்குமார்
ஆசிரியர்அவர்களை மனதார
வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்கள்
பெற்று சீரும் சிறப்புடனும் வாழ மனதார
வாழ்த்துகின்றோம்.
பாடசாலைச் சமூகம்
Best Wishes யா/அல்லாரை அ.த.வித்தியாலயம்
மீசாலை.

அகம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்
எமது பாடசாலையில் கல்வி கற்பித்த ஆசிரியர்களான



திரு.ந.கிருஷ்ணகுமார்(J.P)
SP.Tr(Maths BA, BSc Maths)
PGDE (Merit) MA, MEd




திரு. அ.இ.தேவதாசன்
B.A (Hons) PGDE
Dip in sch Mgh

ஆகியோர் அதிபர் தரம் - III பரீட்சையில் சித்தியடைந்து
02.01.2017 தொடக்கம் திரு.தேவதாசன் அவர்கள் எமது
பாடசாலையிலும், திரு.ந.கிருஷ்ணகுமார் அவர்கள்
கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்திலும் பிரதி
அதிபர்களாக பதவி உயர்வு பெற்றதையிட்டு அகம் மகிழ்ந்து
வாழ்த்துகின்றோம்.
Best Wishes வாழ்த்துவோர்: அதிபர், ஆசிரியர்கள். Best Wishes
யா/புனித ஜேம்ஸ் மகளிர் பாடசாலை
யாழ்ப்பாணம்.

# சேதனக் கழிவுகளில் மின்சார உற்பத்தி மாணவனால் புதிய கலம் கண்டுபிடிப்பு

காத்தான்குடி, பெப்.20
உலகில் பெரும் பிரச்சினையாகக் காணப்படும் கழிவு முகாமைத்துவத்துக்கும், மின்சாரப் பற்றாக்குறைக்கும் தீர்வாக அன்றாட சேதனக் கழிவுகளில் இருந்து மின் சாரத்தை உற்பத்தி செய்யும் கலமொன்று மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி மாணவன் இம்ஹாத் முனாபாவால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
தேசிய விஞ்ஞான மன்றத்தால் நடத்தப்பட்ட விஞ்ஞான ஆராய்ச்சிகள் செயற்பாட்டுப் போட்டியில்,



தனது பாடசாலையைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வகையில் கலந்துகொண்ட குறித்த மாணவன், கழிவு முகாமைத்துவம், மின்சாரப் பற்றாக்குறை ஆகிய பிரச்சினைகளுக்கு முற்றுப் புள்ளியாக தனது விஞ்ஞானக் கண்டுபிடிப்பை முன்வைத்துள்ளார்.
மேற்படி போட்டியில் தேசியரீதியில் 5ஆம் இடத்தைப் பெற்ற குறித்த மாணவனுக்கு அண் மையில் கொழும்பு மொறட்டுவை சுபோதி கல்வி நிலையத்தில் இடம்பெற்ற சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலத்துக்கான சான்றிதழ் விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் ஏ.டீ. சுசில் பிரேமஜயந்தவால் வழங்கி வைக்கப்பட்டது. (ஐ-ய)

அறிவித்தல்
தெல்லியூர் நடராசா
கனகவேல்ராசா ஆகிய நான்
எனது தனிப்பட்ட வாழ்க்கையில்
சுதந்திரமாக இயங்குவதுடன்
என்சார்பில் செயற்பட யாரையும்
நியமிக்கவில்லை.
பொதுவாழ்க்கையில் சில
ஏற்பாடுகளைச் செய்துள்ளேன்.
தெ.ந.கனகவேல்ராசா
(ராஜன், சிறி..)

கூறுவிலை கோரல்
வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான கீழ்க்குறிப்பிடப்படும் பொருள்கள், சேவைகளுக்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன.
01. அச்சிடல்
02. பரீட்சை வினாத்தாள்கள் அச்சிடல்
03. வெற்றிக் கேடயங்கள், பதக்கங்கள்
04. காகிதாதிகள், எழுதுபொருள்கள்
05. உணவு, சிற்றுண்டி வகைகள்
06. ஒலி, ஒளி அமைப்பு வசதிகள்
07. வாகன சுத்திகரிப்பு
08. அலுவலர் தங்குவதற்கான வதிவிட வசதி
கூறுவிலை கோரல் படிவங்களைக் கைதடி வீதி, மருதனார்மடம், சுன்னாகத்தில் அமைந்துள்ள மாகாணக் கல்வித் திணைக்களத்தின் நிதிக்கிளையில் அலுவலக நேரத்தில் 20.02.2017 - 06.03.2017 வரை பெற்றுக் கொள்ளலாம்.
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம்,
வடமாகாணம்.
(AJA/780)(11,17)

வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம்
கரைச்சி, புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் எதிர்வரும் 09.04.2017 ஆம் திகதி சிறப்பாக நடைபெறவுள்ளமையால் அது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று (20.02. 2017) முற்பகல் 10.00 மணிக்கு ஆலய முன்றிலில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் உயர் திரு. சுந்தரம் அருமைநாயகம் அவர்களின் தலைமையில் கௌரவ பாராளுமன்ற உறுப் பின உயர் திரு.சிவஞானம் சிறீதரன் அவர்களின் பங்குபற்றுதலுடன் நடைபெறவுள்ளமையால் சம்பந்தப்பட்ட திணைக்கள தலைவர்கள், உபயகாரர்கள், தொண்டர்கள் மற்றும் உற்சவ காலப் பணிகளில் ஈடுபடுகின்ற அனைத்துத் தரப்பினரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.
வீ. இராமநாதன்
தலைவர்.
தி.பிரபாகரன்
செயலாளர்.

ஆடு, நாய் விற்பனைக்கு
சணல், ஜெமினாபாரி வகை ஆடுகளும், குட்டிகளும், அல்சேசன், பொம்மேரியன், டோமன் வகை பெரிய நாய்களும், குட்டிகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு - 077 101 6407

வீடு விற்பனைக்கு
மாதகல் தபால் கந்தோர் வளவில் இருக்கும் வீட்டுடன் கூடிய 4பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
077 815 9374/ 077 959 6725

சிறுநீரகம் தேவை
65 வயதுடைய ஆண் ஒருவருக்கு O குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத் தேவை.
076 868 7545

பணிநிலை வெற்றிடங்கள்
காப்புறுதித் துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு அடிப்படைச் சம்பளத்துடன் வேலை வாய்ப்புக்கள் வெற்றிடமாக உள்ளன.
கூட்டுறவு ஆயுள் காப்புறுதி நிறுவனம்
இல.570, 2ஆம் மாடி வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம்.
076 711 2102, 077 714 2955
மின்னஞ்சல் முகவரி:- bm-jfn@cooplife.lk

# வறட்சி தொடர்ந்தாலும் மின்வெட்டுக் கிடையாது

## மின்சக்தி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.20

நாட்டில் தற்போது நிலவி வரும் வறட்சியான கால நிலையில், மின்சாரப் பாவனையாளர்களின் முழுப் பங்களிப்பு அவசியம். அதேவேளை, எந்தச் சந்தர்ப்பத்திலும் மின்வெட்டு ஏற்படாது.

இவ்வாறு மின்சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

நீர் மின்சார உற்பத்தி தொடர்பில் அறிந்து கொள்ள காசல்ரி மற்றும் மவுசாக்கலை நீர்தேக்கங்களுக்குச் சென்றிருந்த போதே அமைச்சர், மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த பத்து வருட காலப்பகுதியில், இந்த வருடம்தான் நீர் நிலைகளில் அதிகளவில் நீர் மட்டம் குறை வடைந்துள்ளது. நாட்டின் சகல நீர் நிலைகளிலும் முப்பது சதவீத நீர் மட்டம் தற்போது குறைந்து காணப்படுகின்றது.

இந்த நிலை தொடர்ந்தால், எதிர்காலத்தில் இயந்திரங்கள் மூலமும், சூரிய சக்தி மூலமும், நீர் மின் உற்பத்தி தவிர்ந்த வேறு வழிகளிலும் மின் உற்பத்தியை முன்னெடுக்க நாம் தயாராக உள்ளோம்.

வறட்சியான கால நிலை தொடர்கின்றமையால் அரசும், பொதுமக்களும் இணைந்து பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டும்.

மின் பாவனையாளர்கள் சிக்கனமாக மின்சாரத்தைப் பயன்படுத்த வேண்டும்.

அத்தோடு, நகரங்களில் வீதி விளக்குகளின் பாவனைகளையும் குறைக்க வேண்டும் - என்றார். (ஐ)

## ஞான வைரவரின் கிராம ஊர்வலம் நாளை

யாழ்ப்பாணம், பெப்.20

கொக்குவில் தலையாழி சாமுண்டி சமேத ஞான வைரவர் ஆலயத்தின் கிராம ஊர்வலம் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்று ஆலய இந்து இளைஞர் மன்றமும், இந்திரா சனசமூக நிலையத்தினரும் அறிவித்தனர்.

அலங்காரத் திருவிழா கடந்த 6ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகியது.

நாளை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும் கிராமிய ஊர்வலமானது ஞானவைரவர் ஆலயத்திலிருந்து புறப்பட்டு சபாபதி வீதி, காங்கேசன்துறை வீதி, பழைய தபாற்கந்தோர் வீதி, அச்சுக்கூட வீதி, ஆடியபாதம் வீதி, பிரம்படி வீதி, சபாபதி வீதி வழியாக வலம் வந்து ஆலயத்தைச் சென்றடையும் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர். (வ)

## புதிய விடுதி திறப்பு

மானிப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு பிரத்தியேகமாக குடும்பநல உத்தியோகத்தர் விடுதி புதிதாகத் திறந்து வைக்கப்பட்டது. மானிப்பாய் பிரதேச வைத்தியசாலை நலன்புரி சங்க தலைவர் மருத்துவர் ஆ.காந்தநேசன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. (வ-50)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் குமாரசாமி
சிவகோசரி (சிவா)
(ஜோதி புடைவை உரிமையாளர் - சாவகச்சேரி)

ஆண்டுகள் ஐந்து நகர்ந்து
மறைந்திடினும்
ஆறுமோ வெந்துயர் அன்பு
அப்பாவே!
மாண்டுவிடவில்லை நீங்கள்
எம் மனங்களில்
மறையாது என்றும் வாழ்கிறீர்கள் -
எம்
உயர்வுக்கு உன்னத வழிகாட்டி
வாழ்வை
அர்ப்பணித்த பாசத்தின் தீபமே!
உங்கள் நினைவு எங்கள்
நெஞ்சங்களில் என்றும் நிலைத்து
வாழும்

தோற்றம் 03.09.1950
மறைவு 26.02.2011

குடும்பத்தினர்.
நுணாவில் கிழக்கு, கல்வயல் வீதி,
சாவகச்சேரி.

(A/A/795)(11,17)

# மனிதநேய நிறுவனத் தலைவர் வி. கையிலாசபிள்ளை மறைவு

## ஆறு. திருமுருகன் இரங்கல்

யாழ்ப்பாணம், பெப். 20

இலங்கை மனிதநேய அமைப்பின் தலைவரும், அகில இலங்கை இந்து மாமன்றம் மற்றும் திருக்கேதீஸ்வரம் அறங்காவலர் சபை ஆகியவற்றின் முன்னாள் தலைவருமாகிய வி.கையிலாசபிள்ளை கொழும்பில் நேற்றுக் காலமானார். அவரின் மறைவுச் செய்தியறிந்து மிகவும் கவலையடைவதாக, தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் ஆறு.திருமுருகன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

1934ஆம் ஆண்டு பிறந்த வி.கையிலாசபிள்ளை, அராலி சரஸ்வதி வித்தியாலயம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கற்றவர். பட்டயக் கணக் காளரான இவர் இலங்கைப் பங்குச் சந்தையின் தலைவராகவும் செயற்பட்டவர்.

இது தொடர்பில் ஆறு. திருமுருகன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், மிக இக்கட்டான காலகட்டத்தில் இந்து மாமன்றத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று அல்லும் பகலும் அயராது பணியாற்றிய பெருந்தகை. கொழும்பில் வறுமையில் வாடிய சைவச்சிறார்களுக்கு சக்தி இல்லத்தை தோற்றுவித்து அந்தப் பிள்ளைகளின் வாழ்வுக்குப் பேராதரவு நல்கியவர். மனிதநேய அமைப்பு ஊடாக நூற்றுக்கு மேற்பட்ட பல்கலைக் கழக மாணவர்களுக்கு மாதந்தோறும் உதவி வருபவர்.

வன்னிப் பெருநிலப் பரப்பில் உள்ள சிறுவர் இல்லங்கள், ஆதரவற்ற குடும்பங்களுக்கு பலவகையில் உதவிய மகத்தான மனிதத்தை நாம் இழந்து விட்டோம். ஈடுசெய்ய முடியாத தொண்டரின் பிரிவு மறக்க முடியாதது. திருக்கேதீஸ்வரம் இந்திய அரசின் உதவியுடன் கருங்கற்கோவிலாக இன்று உருவாக அவர் வித்திட்டவர். பேருதவி புரிந்த பெருந்தகையின் ஆத்மா சாந்தி பெற, சைவமக்கள் பிரார்த்திக்கக் கடமைப்பட்டுள்ளோம் - என்றுள்ளது. (வ-5)

## கண்ணீர் அஞ்சலி



AIA நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளையில்
பணியாற்றும் திரு. G.கணேசலிங்கம்
அவர்களது மாமியார்
திருமதி மகேஸ்வரி கார்த்திகேசு
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.
அன்னாரது ஆன்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றேன்.
ச.சந்திரகுமார்
"அன்பகம்" இணுவில் மேற்கு, இணுவில்.

## கண்ணீர் அஞ்சலி



நாகலிங்கம் குணரட்ணம்
(குணம் Transport உரிமையாளர்)
கொட்டடி சீனிவாசகம் வீதியைப்
பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்
கொண்டவரும் எனது சகோதரருமான
நாகலிங்கம் குணரட்ணம்
அவர்களின் மறைவையொட்டி ஆழ்ந்த
கவலையடைவதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றேன்.
லயன் நா.தனேந்திரன்
(யாழ்.மாவட்ட தேசோதயத் தலைவர்)

## 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 26.01.2017 வியாழக்கிழமை
சிவபதமடைந்த
அமரர்
நாகன் ஐயம்பிள்ளை

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டி நிகழ்வுகள் எதிர்வரும் (23.02.2017) வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் எதிர்வரும் (25.02.2017) சனிக்கிழமை எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இராமநாதன் வீதி,
கலட்டி, இருபாலை.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி பத்தினியம்மா (மல்லிகை) கந்தசாமி



காரைநகர், மல்லிகையைப் பிறப்பிடமாகவும், காரைநகர், பலகாட்டை வசிப்பிடமாகவும் தற்போது வவுனியா முதலாம் குறுக்குத் தெருவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்தினியம்மா (மல்லிகை) கந்தசாமி நேற்று (19.02.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காரைநகர் மல்லிகையைச் சேர்ந்த தில்லையம்பலம் தம்பதிகளின் அன்பு மகளும், காரைநகர் பாலக்காடு அருணாச்சலம்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும், சண்முகநாதன் ( UK), நாகறாஜேஸ்வரி (வவுனியா), பத்மராணி (வவுனியா), சிவயோகம் ( UK ) ஆகியோரின் அன்புத் தாயாரும், வினோதினி ( UK), காலஞ்சென்ற சண்முகராசா மற்றும் இராமச்சந்திரன் (இராமச்சந்திராஸ் வவுனியா), விக்கினேஸ்வரன் ( UK ) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான இராமநாதன் (மலேசியா), தங்கமுத்து (காரைநகர்), செல்லாச்சி (காரைநகர்), சரஸ்வதி (மலேசியா), கணபதிப்பிள்ளை (காரைநகர்) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கனகசபை, நடராசா, திருநாவுக்கரசு மற்றும் சோமசுந்தரம், பொன்னம்பலம், மங்கையற்கரசி ஆகியோரின் மைத்துனியும், தினேசன், மோகனரூபன், மோகனசந்திரன், விஜயலட்சுமி, இளங்கோவன், கௌதமி, காயத்திரி, அனுஷா, அனித்தா, அருண் ஆகியோரின் பேர்த்தியும், விதுஷன், இந்துசன், மதுசன், தர்சன், ஜனனி, அனோஜன், அனோஜிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2017) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் வவுனியா, முதலாம் குறுக்குத்தெரு, இல.68 இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராமச்சந்திராஸ்
(வவுனியா)

தகவல்:
சு.இராமச்சந்திரன் (மருமகன்)

(V/227)(11,17) 077 628 0365

## சிறைச்சாலையில் வாளி தூக்குகிறாராம் விமல்

*கவலைப்படுகிறார் சபாநாயகர்*

கொழும்பு,பெப்.20

வெலிக்கடைச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவை, நாடாளுமன்றில் சந்தித்த சபாநாயகர் கரு ஜெயசூரிய, சிறைச்சாலையில் விமலின் நிலவரம் குறித்து நலம் விசாரித்தார்.

அதற்குப் பதிலளித்த விமல் 'குளிப்பதற்கும் வாளியில் தண்ணீர் எடுத்துச் செல்ல வேண்டிய நிலையில் நான் இருக்கிறேன்' என்றுள்ளார்.

அண்மையில் வீரவன்சவை நாடாளுமன்றத்தில் சந்தித்த சபாநாயகர், விமலுடன் கலந்துரையாடியது குறித்து தகவல் வெளியிட்டுள்ளார் என்று சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது:

சிறைச்சாலையில் வசதிகள் எப்படி? உள்ளக வசதிகள் போதுமானதாக உள்ளதா? என்று சபாநாயகர் கரு ஜெயசூரிய விமலிடம் விசாரித்தார். அதற்குப் பதிலளித்த விமல், "நான் உள்ள அறையில் 40 இற்கும் அதிகமான சிறைக் கைதிகள் உள்ளனர். அனைவருக்கும் இரண்டு கழிப்பறைகளே உள்ளன" - என்றார்.

அப்படி என்றால் குளிப்பதற்கு ஷவர் உள்ளதா? என்று சபாநாயகர் வினவினார், அங்கு ஷவர் இல்லை. நீர் நிரப்பப்பட்ட தாங்கிகள் உள்ளன. வாளியில் நீர் எடுத்துக் கொண்டு வந்து குளிக்க வேண்டும். அந்தத் தாங்கியைத் தான் அனைத்துக் கைதிகளும் பயன்படுத்த வேண்டும்- என்றார் விமல். இவற்றைக் கேட்டுக் கேட்டுக்கொண்ட சபாநாயகர் அது தொடர்பில் கவனம் செலுத்துவதாகத் தெரிவித்தார். (ஐ)

## ரின்களில் வரவுள்ளது குடாநாட்டுப் பதநீர்

பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த ஆண்டில் கூடுதலான பதநீர் உற்பத்தியில் ஈடுபடுவதற்கு தயாராகி வருகின்றன. பதநீரை நவீன முறையில் ரின்களில் அடைத்து விநியோகிப்பதற்கும் ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.கணேசன் தெரிவித்தார்.

பதநீர் உற்பத்தியை அடுத்த மாதம் ஆரம்பிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பதனீர் உற்பத்தி இந்த ஆண்டில் அதிகரிக்கப்படும். கடந்த ஆண்டில் பதநீருக்கு பெரும் கிராக்கியும் பற்றாக்குறையும் ஏற்பட்டது.

நுகர்வோர் மற்றும் சுற்றுலாப் பயணிகள் இந்தப் பதநீரை அதிகமான விரும்பி பருகினார்கள். இதன் காரணத்தால்தான் உற்பத்தியை அதிகரிக்கவும் சங்கங்கள் முயற்சிகளை மேற்கொள்டுள்ளன. அத்துடன் பதநீர் பிறமாவட்டங்களுக்கும் சந்தைப்படுத்தப்படவுள்ளது என்று சமாசத் தலைவர் மேலும் தெரிவித்தார். (வ-17)

## புதிய நிர்வாகம் தெரிவு

வலி. வடக்கு பிரதேச செயலக பிரிவு பகிரங்க சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதிய சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த 11ஆம் திகதி நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் 2017ஆம் ஆண்டுக்கான தலைவராக த.மை.செல்வராசவும், செயலாளராக பொ.கணேஸ்வரலிங்கமும், பொருளாளராக வ.தங்கராசாவும், உபதலைவராக சு.தளையசிங்கமும், உப செயலாளராக நா.பாலசுப்பிரமணியமும் நிர்வாக உறுப்பினர்களாக செல்வி. ந.கனகசாந்தி, ம.நாராயணரும் தெரிவு செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

*இலங்கைப் பல்கலைக்கழகங்களில்*

# இந்து மதத்துக்கு மட்டுமே தனியான பீடம் கிடையாது

*பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவிப்பு*

யாழ்ப்பாணம்.பெப்.20

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் இந்து மதத்துக்கு மட்டுமே தனியான பீடம் இல்லை. மற்றைய மதங்களுக்கு தனியான பீடம் உள்ளது.

இவ்வாறு தெரிவத்தார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை.

கல்வயலூர் ஆர்.வி.கந்தசுவாமியின் நூல் வெளியீடு நல்லூர் துர்க்காதேவி மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களில் இந்து மதத்துக்கு மட்டுமே தனியான பீடம் கிடையாது. பௌத்த சமயத்தைப் பார்த்தால் பௌத்த பிக்குகள் படிப்பதற்கென்றும், பௌத்தம் படிப்பதற்கென்றும் அவர்களுக்கான பல்கலைக்கழகங்கள் மற்றும் அவர்கள் கற்பதற்கான பீடங்கள் இருக்கின்றன. கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய மதங்களுக்கும் பீடம் இருக்கின்றது. ஆனால் இந்து சமயத்துக்கென்று இதுவரை பீடமில்லை. நாங்களும் உரியவர்களுக்கு சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

எங்களுடைய சமயத்தை சரியாக வழிநடத்தக் கூடியவை ஆலயங்கள். ஆனால் இன்று எமது இளைஞர்கள் ஆலயம் சென்று வழிபடுவதென்பது மிக அரிதாகவே இருக்கின்றது.

எமது சமயவாழ்வு நல்ல நிலைக்கு வர வேண்டும் என்றால் இந்துக்களாகிய நாம் தான் அதனை வழிநடத்த வேண்டும். இப்பொழுது எந்தப் பத்திரிகையைப் பார்த்தாலும் கோயில் உண்டியலுடைப்பு, அம்மன் சிலை திருடப்பட்டுள்ளது என்றுதான் செய்திகள் வெளியாகின்றன. எமது இந்து மதம் ஏன் இவ்வாறானவற்றுக்குள் செல்கிறது என்று பார்க்க வேண்டிய பொறுப்பும் எங்களுக்குத்தானே இருக்கின்றது. எமது



சமயத்தைப் பாதுகாக்க வேண்டிய கடமை எம் ஒவ்வொருவருக்கும் உண்டு -என்றார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதியதிபர் ச.லலீசன் தெரிவித்ததாவது:

தற்போது எமது சமூகத்தில் உருவாகிக் கொண்டிருக்கும் வாள்வெட்டுக் கலாசாரம், திருட்டுச் சம்பவங்கள் என்பவை இல்லாது போகவேண்டுமானால் அனைவரும் ஆரம்பத்திலே நல்ல நூல்களைப் படிக்க வேண்டும். அனைவருக்கும் ஆரம்பத்திலேயே சமய விழுமியக் கல்வி போதிக்கப்பட வேண்டும்.

வாழ்வியல் கல்வியை எமது பிள்ளைகளுக்கு ஆரம்பத்திலே போதிக்க வேண்டும். ஆனால் இவ்வாறான கல்வி எம் பிள்ளைகளுக்குப் போதிக்கப்படுவதில்லை. இப்பொழுது உருவாகிக் கொண்டிருக்கும் வாள்வெட்டுக் கலாசாரம், திருட்டுச்சம்பவங்கள், சமூகப்பிறழ்வுகளுக்கு இவ்வாறு போதிக்கப்படாமைதான் காரணம்.

நல்ல நூல்களைத் தேடிப்படிக்கக் கூடிய சூழலை எம் மாணவர்களுக்கு உருவாக்க வேண்டிவர்கள் நாங்கள்தான். விநாயகர் வழிபாட்டால் மேன்புறும் ஊர் கல்வயல். மாட்சிமை மிக்க பெரியோர்கள் வாழ்ந்து மறைந்த ஊர் ஆன்மீகப் பொய்கை, கட்டுரைத் தொகுப்பிலும் இவை பொதிந்து நிற்பது பெருமையே -என்றார். (வ-ரி)

## கண்டியில் ஐவருக்குத் தூக்கு

கண்டி, பெப்.20

கண்டி - ஹசலக்க வராபொல பிரதேசத்தில் 22 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட ஐவருக்கு கண்டி மேல் நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்தது.

கண்டி மேல்நீதிமன்ற நீதிபதி யூ.பி.கரலியத்த கடந்த வெள்ளியன்று இந்தச் தூக்குத் தண்டனை விதித்தார். மேலும் குறித்த ஐவருக்கும் மற்றுமொரு குற்றச்சாட்டின் அடிப்படையில், ஒருவருக்கு தலா 10 வருடம் சிறைதண்டனையும் விதிக்கப்பட்டது.

ஹசலக்க வராபொல பிரதேசத்தில் 22 வருடங்களுக்கு முன்னர் நபர் ஒருவரை அடித் துக் கொலை செய்தும், மேலும் மற்றுமொரு நபரை அடித்துப் பலத்த காயங்களுக்கு உள்ளாகிய சம்பவங்கள் தொடர்பிலான வழக்கு விசாரணையிலேயே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், கொலைக்கான ஆதாரங்கள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படாத காரணத் தால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இது தொடர்பில் வராபொல பொலிஸார் தொடர் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை அன்று அந்தக் கொலைக்கான சாட்சியங்கள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டன.

கொலைக் கான ஆதாரங்கள் நீதிமன்றில் நிரூபிக்கப்பட்டதால், சந்தேகநபர்கள் ஐவரும் குற்றவாளிகள் எனத் தீர்ப்பானது. இந்த நிலையில் குறித்த சந்தேக நபர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளதால், ஏனைய நால்வருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. (ஐ-ய)

## சாவகச்சேரி வைத்தியசாலையின் நோயாளர் விடுதிகளில் இடநெருக்கடி

*நிலத்திலிருந்து சிகிச்சை பெறும் அவலம்*

தென்மராட்சி, பெப். 20

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பொது மருத்துவப் பிரிவு விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறவேண்டிய நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், அங்கு பெரும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. அதனால் நோயாளர்களுக்கு நிலத்தில் தங்க வைக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்படுகின்றது.

தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த வாரம் பெய்த மழையையடுத்து பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறவரும் நோயாளர்கள், விடுதிகளில் தங்க வைக்கப்படுகின்றனர். அதனால் பொது மருத்துவ ஆண், பெண், சிறுவர் விடுதிகளில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கடந்த ஒரு வாரப்புள்ளி விவரப் பிரகாரம், தினமும் 40 இற்கும் மேற் பட்ட நோயாளர்கள் விடுதிகளில் சேர்க்கப்படுகின்றனர். அவர் களில் டெங்குக் காய்ச்சல், உண்ணிக் காய்ச்சல், வைரஸ் காய்ச்சல் போன்றவற்றால் பீடிக்கப்பட்டு மூன்று தினங்களுக்கு மேல் காய்ச்சல் நிலை குறையாத நோயாளர்கள் விடுதிகளில் தங்க வைக்கப்படுகின்றனர்.

விடுதிகளில் டெங்கு நோயாளர் களுக்கென தனியான கட்டில் வசதிகள் இருந்த போதிலும், டெங்கு நோயால் பீடிக்கப்பட்டு வருவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அவர்கள் ஏனைய கட்டில்களில் தங்க வைக்கப்படுகின்றனர். அத னால் பெரும் இடநெருக்கடி ஏற்பட்டு, நிலத்தில் தங்க வைக்கப் பட்டுள் ளனர்.

இது தொடர்பாக விடுதிகளின் பொறுப் பதிகாரிகளிடம் தொடர்பு கொண்ட போது, 'தென்மராட்சிப் பிரதேசத்தில் ஏற்கனவே டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில், கடந்த வாரம் தொடக்கம் தென்மராட்சிப் பிரதேசம் மட்டுமல்ல பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு, பூநகரி போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த நோயாளர்களும், விடுதிகளில் டெங்கு நோயாளர்களுக்கான கட்டில்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். ஒவ்வொரு விடுதியிலும் தலா 24 கட்டில்கள் வீதம் உள்ளதால், அதற்கு மேல் சேர்க்கப்படும் நோயாளர்கள் நிலத்தில் தங்க வைக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்படுகிறது. கடந்த ஜனவரி மாதத்தில் விடுதிகளில் டெங்கு நோயால் பீடிக்கப்பட்ட 42 ஆண்களும், 34 பெண்களும், உண்ணிக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 13 பேரும் சிகிச்சை பெறறனர். இந்த மாதத்தில் நேற்றுமுன் தினம் வரை டெங்கு நோயால் 38 பேரும், உண்ணிக் காய்ச்சலால் 3 பேரும் பீடிக்கப்பட்டுள்ளனர்-என்றார். (ஐ-9)

## ஒப்பந்த அடிப்படையிலான நியமனங்களால் இ.போ.சபை ஊழியர்களுக்கு பெரும் பாதிப்பு

கொழும்பு,பெப்.20

எதிர்வரும் காலங்களில் ஒப்பந்தங்களின் அடிப்படையில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு ஊழியர்களைத் தெரிவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதனால் அவ்வாறு தெரிவு செய்யப்படும் ஊழியர்கள் பெரும் பாதிப்பை எதிர்கொள்வர் என்று இலங்கைப் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது. இது தொடர்பில் இலங்கைப் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சங்கத்தின் செயலாளர் சேபால லியனகே தெரிவித்ததாவது:

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு ஒப்பந்தங்களின் அடிப்படையில் ஊழியர்கள் நியமிக்கப்பட்டால், பல்வேறு சிக்கல்களை எதிர் நோக்கும் நிலைவரும். இந்த நடவடிக்கை ஊழியர்களின் திறன் மற்றும் தொழில் முறைமையை மாற்றியமைக்கும்.

அதேவேளை, ஒப்பந்தங்கள் அடிப்படையில் ஊழியர்களை நியமிப்பது தொடர்பிலான விடயங்கள், தனியார் தொழிற்றுறை சார்ந்தவர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் அறிய முடிகிறது. இது ஊழியர்களுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்-என்றார்.(ஐ)




ரூ.32 மில்லியன் செலவில் அமைக்கப்பட்ட

# ஏற்று நீர்ப்பாசனத்தால் எந்தப் பயனும் இல்லை

## மாயவனூர் விவசாயிகள் விசனம்

கிளிநொச்சி, பெப்.20

கிளிநொச்சி, வட்டக்கச்சி, மாயவனூரில் வடக்கு மாகாண விவசாய அமைச்சு அமைத்த புழுதியாற்று ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தால் எந்தப் பயனும் இல்லை என்று விவசாயிகள் விசனம் தெரிவித்தனர்.

"மாயவனூர் விவசாயிகளின் வாழ்வாதாரம் உயர்த்தப்படும் என்று தெரிவித்து இந்த ஏற்று நீர்ப் பாசனம் உருவாக்கப்பட்டது. அது இன்று இயங்காத நிலையில் உள்ளது. அதில் பொருத்தப்பட்டுள்ள இயந்திரத்துக்கு அதிகளவு எரிபொருள் (டீசல்) செலவாகின்றது. அந்தளவுக்கு எமது பொருளாதாரம் இல்லை. திட்டத்தின் ஆரம்பத்தில் அதிக எண்ணிக்கையான விவசாயிகள் பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்டனர். இப்போது 10 முதல் 15 பேர் வரையானோரே பயிர்ச் செய் கையில் ஈடுபடுகின்றனர்.

மின்சாரம் மூலம் இயங்கும் இயந்திரம் பொருத்தப்பட்டால் பயன்மிக்கதாக இருக்கும். உரிய அதிகாரிகளிடம் பல முறை இது தொடர்பாகக் கூறினோம், எமது கோரிக்கை ஏற்கப்படவில்லை.

எரிபொருளுக்கு அதிக பணம் செலவு செய்து விவசாயம் செய்யும்நிலையில்நாம்இல்லை. விவசாயத்தைக் கைவிட்டுள்ளோம். அதிகாரிகள் தாம் நினைத்தவாறுதான் நாம் விவசாயம் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். விவசாயிகளின் நலன் குறித்துச் சிந்திக்கவில்லை" என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

ஏற்றுநீர்ப்பாசனம் மூலம் பயன் பெறுவோரில் 9 பேர் தெரிவு செய்யப்பட்டு, நீர் வழங்கும் பொறுப்பு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. எரிபொருள் (டீசல்) பெறுவது பெரும் பிரச்சினையாக உள்ளது. மோட்டார் வசதிசெய்துகொடுத்தால் இலகுவாக இருக்கும். ஒழுங்கான நீர் விநியோகம் இன்மையால் ஏற்று நீர்ப்பாசனத்தை நம்பி விவசாயம் செய்வோரின் எண்ணிக்கை குறைந்துள்ளது. தங்களது கிணறுகளில் உள்ள நீரைப் பயன்படுத்தியே பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்றனர்.

மின் மோட்டர் வசதி ஏற்படுத்தி தர வேண்டும் என்று ஒரு மாதத்துக்கு முன்னர் அரச தலைவர், வடக்கு முதலமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ஆகியோரிடம் கடிதம் மூலம் கோரினோம். எந்த நடவடிக்கையும் இது வரை எடுக்கப்படவில்லை. அவர்கள் விரைவில் நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகின்றோம்" என்று கமக்கார அமைப்பில் இருந்து 15 தினங்களுக்கு முன்னர் பதவி விலகிய முன்னாள் தலைவர் நித்தியானந்தம் தெரிவித்தார்.

இது தொடர்பாக விவசாய அமைச்சிடம் கேட்டபோது நீர்ப்பாசனத் திணைக்களமே இது தொடர்பாக ஆராய்ந்து வருகின்றது என்று பதிலளிக்கப்பட்டது. நீர்ப்பாசனத்திணைக்களத்தினருடன் தொடர்பு கொள்ள முயன்றபோதும் அது பயனளிக்கவில்லை.

"2014ஆம் ஆண்டுக்குரிய மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியில் இருந்து 32 மில்லியன் ரூபா செலவில் விவசாய அமைச்சு புழுதியாறு ஏற்றுநீர்ப்பாசனத் திட்டத்தை உருவாக்கியது. 2014ஆம் ஆண்டு ஜூன் மாதம் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் திட்டத்தை மக்கள் பாவனைக்குக் கையளித்தார்.

மாயவனூர் விவசாயிகள் விவசாயத்துக்கு நீர் இன்றிச் சிரமப்படுகின்றனர் என்று எனக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

அதையடுத்து இந்த ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் அமைக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படும் நீரால் தலா ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் 100 விவசாயிகள் விவசாயம் செய்ய முடியும்"- என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சர் தெரிவித்தார். (ற-21,6)

தென்னிலங்கை மீனவரின்

# சட்டவிரோத வாடிக்கெதிராக பிரதேச செயலர் வழக்குத் தாக்கல்

முல்லைத்தீவு, பெப்.20

முல்லைத்தீவு, கருநாட்டங்கேணியில் அத்துமீறி வாடி அமைத்துள்ள தென்னிலங்கை மீனவர்களுக்கு எதிராகக் கரைதுறைப் பற்று பிரதேச செயலரால் முல்லைத் தீவு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கருநாட்டுக்கேணியில் போரின் முன்னர் உள்ளூர் மீனவர்களின் இறங்கு துறையாக இருந்த பிரதேசத்தை உள்ளடக்கி எந்த அனுமதியும் பெறாது தென்னிலங்கை மீனவர் ஒருவர் அடாத்தான முறையில் வாடி அமைத்துள்ளார்.

மீள்குடியமர்வு நடைபெற்ற 2012ஆம் ஆண்டு இந்த வாடி அமைக்கப்பட்டது. உள்ளூர் மீனவ அமைப்புக்கள் அது தொடர்பாகத் தமது ஆட்சேபனையைத் தெரியப்படுத்தினர். தென்னிலங்கை மீனவர் தொடர்ந்தும் வாடியமைத்திருந்ததால் இந்த விடயம் பிரதேச செயலரினதும், கடற்றொழில் திணைக்களத்தினரதும் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

வாடி பிரதேச செயலரின் அனுமதி பெறப்படாது அமைக்கப்பட்டது. அதை அகற்றுமாறு பிரதேச செயலர் அறிவித்திருந்தபோதும் அதற்கு உடன்பட தென்னிலங்கை மீனவர் மறுத்துள்ளார்.

கடந்த 16ஆம் திகதி பிரதேச செயலாளரால் வாடி உரிமையாளருக்கு எதிராக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. எதிர்வரும் 15ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (ற-101)

# சைட்டம் கல்லூரிக்கு பொன்சேகா ஆதரவு

கொழும்பு, பெப். 20

மாலம்பே தனியார் மருத்துவக் கல்லூரி இலங்கையில் நடத்தப்படுவது தொடர்பில் கருத்து முரண்பாடுகள் காணப் படும் நிலையில் அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா அந்தக் கல்லூரிக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

அரசு மருத்துவக் கல்லூரிகளை நடத்த போதுமான நிதி இல்லாவிட்டால் தனியாருக்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று அவர் கூறி னார்.

புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி மத்திய நிலைய திறப்பு விழா களனியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட அமைச்சர் சரத் பொன்சேகா, நிகழ்ச்சியின் நிறைவில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்தார். அதன்போதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

அரசுக்கு நிதி இருந்தால் அனைத்து வகையிலான கல்லூரியும் நிர்வகிக்க வேண்டும். அது சிறந்தது. மாணவர் ஒருவர் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைவதற்கு பெரும் அர்ப்பணிப்பை செய்கின்றார். அனைவருக்கும் அவ்வாறு இயலாது.

பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகாத மாணவர்களுக்கும் பல்கலைக்கழக உயர்கல்வியைத் தொடர்வதற்கான சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும். அரசுக்கு அது முடியாவிட்டால் அதற்கு முன்வருபவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். சைட்டம் மருத்துவக் கல்லூரி அவசியம் என்று தம்மைப்பற்றி வர்ணித்து பாடல் பாடிய மாணவி ஒருவரை கைபிடித்த சைட்டம்கல்லூரியைச் சேர்ந்த ஒரு தலைவர் இன்று சைட்டம் வேண்டாம் என்று கூறுகின்றார்.

அரசியல்வாதிகளும் சில வேளைகளில் சுயநலமாக செயற்படுகின்றனர். யாரைப் பற்றிச் சொல்கிறேன் என்பதை அனைவரும் அறிவார்கள். கடந்த காலத்தில் தன்னை ராஜா என்று போற்றித் துதிபாடிய ஒருவர் இன்று சைட்டம் விவகாரத்தில் பல்டி அடித்துள்ளார்- என்றார். (ற-4)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
மு/மல்லாவி மத்திய கல்லூரியின்
2016 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தர
பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற
மாணவர்களைப்
பாராட்டி வாழ்த்துகிறோம்.


கணேசமூர்த்தி கலைஅமுதன்
3C
பொறியியல் தொழில் நுட்பம்
மாவட்ட நிலை - 01


மகாலிங்கம் சுமித்தா
2AB
விஞ்ஞானப் பிரிவு
மாவட்ட நிலை - 04


சஜீபரன் அஜீவிதா
B2C
விஞ்ஞானப் பிரிவு
மாவட்ட நிலை - 18


அரவிந்தன் குந்தவை
A2B
விஞ்ஞானப் பிரிவு
மாவட்ட நிலை - 22


மோகன் டிலக்சன்
BCS
உயிரியல் தொழினுட்பப் பிரிவு
மாவட்ட நிலை - 10


யோகேஸ்வரன் துவாரகா
2AB
கலைப்பிரிவு
மாவட்ட நிலை - 08

| ஜெகதீஸ்வரன் தர்மீகன் | சஜீபரன் அபராயுதன் | நாகேஸ்வரன் நிந்துஜா | செந்தில்ராஜன் பிரகாஸ் |
|---|---|---|---|
| A2B | 3C | 2CS | 3C |
| கணிதப்பிரிவு | கணிதப்பிரிவு | விஞ்ஞானப் பிரிவு | கணிதப்பிரிவு |
| மாவட்ட நிலை - 04 | மாவட்ட நிலை - 13 | மாவட்ட நிலை - 38 | மாவட்ட நிலை - 21 |

| பேரம்பலம் லாவன்யா | கிருஷ்ணகுமார் லக்ஷா | செந்தில்குமரன் டுசாந்தினி |
|---|---|---|
| A2B | ABC | A2B |
| கலைப்பிரிவு | கலைப்பிரிவு | கலைப்பிரிவு |
| மாவட்ட நிலை - 21 | மாவட்ட நிலை - 34 | மாவட்ட நிலை - 49 |

வாழ்த்துவோர்:
பாடசாலை கல்லூரிச் சமூகம்

# மகிந்தவால் மீண்டும் இலங்கைக்கு ஆபத்து

## புதுடில்லி எச்சரிக்கை

கொழும்பு,பெப்.20

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, மீண்டும் அரசியலுக்குள் பிரவேசித்தால், இலங்கைக்குப் பெரும் ஆபத்து காத்திருக்கிறது. மகிந்தவால் நாட்டுக்கு மட்டுமல்லாது, இலங்கை அரசியலுக்குள்ளும் பெரும் பிளவுகள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன என்று இந்தியா எச்சரித்துள்ளது.

இலங்கையில் தற்போது நிகழும் அரசியல் மாற்றங்கள் தொடர்பில் இந்திய அரசுமிகுந்த அவதானத்துடன் உள்ளது.

இவ்வாறு த ஹிந்து நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையின் அரசியலில் நிகழ்கின்ற மாற்றங்கள் தொடர்பில் இந்திய அரசு மிகுந்த அவதானத் துடன் உள்ளது. முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச மீண்டும் இலங்கை அரசியலுக்குள் பிரவேசிப்பது குறித்தும் கவனம் செலுத்தியுள்ளது.



மகிந்த மீண்டும் அரசியலில் பிரவேசித்திருப்பதன் ஊடாக, இலங்கை அரசி யல் வட்டாரத்தில் பல மாற்றங்கள் ஏற்படும். பல பிளவுகளும் ஏற்படும். இலங்கையின் தற்போதைய அரசியல் சூழ்நிலைகள் மற்றும் சம்பவங்களைக் கருத்தில் கொண்டு ஆராயும்போது இந்த விடயம் தெளிவாகின்றது.

மகிந்த ராஜபக்சவுடன் இருக்கும் அரசியல் உறுப்பினர்களுக்கிடையிலும் பிளவுகள் ஏற்படலாம். அவர்களுக்கிடையில் கட்சி மாற்றங்களும் இடம்பெறலாம். இவற்றை இந்தியாவின் அரசியல் அவதானிகள் கண்காணித்த வண்ணம் உள்ளனர்.மகிந்த மீண்டும் இலங்கை அரசியலுக்குள் பிரவேசித்தால் நாட்டுக்குப் பெரும் ஆபத்து காத்திருக்கிறது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவின் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியின் இலங்கை தொடர்பான முக்கிய பிரதிநிதியான ராம் மாதவ், கடந்த 10 ஆம் திகதி இலங்கை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை கொழும்பில் சந்தித்தார்.

அந்தச் சந்திப்பில் இரு நாட்டினதும் விவகாரங்கள் மற்றும் நான்காவது இந்து சமுத்திர மாநாடு தொடர்பிலும் பேசப்பட்டன.

ராம் மாதவின் பயணத்தை அடுத்து இந்திய அயலுறவுச் செயலாளர் எஸ். ஜெய்சங்கர் இலங்கைக்குப் பயணித்துள்ளார்.

அவரது சந்திப்பிலும் இலங்கையின் தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பில் கலந்தாலோசிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது- என்றுள்ளது. (ஐ)

# கருணாவின் புதிய கட்சிக்குள் பிளவு

கொழும்பு, பெப்.20



புதிய அரசியல் கட்சியொன்றை ஆரம்பித்துள்ள, முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) அரசியல் ரீதியாக பல சிக்கல்களை எதிர்கொண்டுள்ளார்.

அவர் ஆரம்பித் துள்ள புதிய கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது என்று சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளி யிட்டுள்ளது.

தமிழ் ஐக்கிய சுதந்திர முன்னணி என்ற பெயரில் புதிய கட்சி ஒன்றை கருணா அண்மையில் ஆரம்பித்திருந்தார். தனது கட்சி தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள கருத்தாலேயே இந்தச் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'எனது தலைவர் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவே. எனது கட்சி மகிந்தவுக்கு அரசியல் ரீதியில் உதவிகளை வழங்கும்' என்று கருணா கருத்து வெளியிட்டிருந்தார்.

கருணா இவ்வாறு கருத்து வெளியிட்டமையால், அவரது புதிய கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது. முன்னாள் போராளிகள் சிலர், கருணாவின் அரசியல் கட்சியில் இணைந்திருந்த னர். எனினும் மகிந்த மீதான கருணாவின் விசுவாசத்துக்கு அவர்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். அதன் காரணமாக கருணா கடும் சிக்கல் நிலைக்கு முகங் கொடுத்துள்ளார். முன்னாள் போராளிகளால் கரு ணாவின் கட்சிக்குள் பிளவு ஏற்படலாம் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆலோசனைக்கு அமைவாகவே, கருணா புதிய கட்சி ஆரம்பித்தார் என்று ஊடகங்கள் சில தகவல் வெளியிட்டிருந்தன. (ஐ)

## மரண அறிவித்தல்

### திருமதி நல்லநாயகி ரிக்கிரிபண்டா



தோற்றம் :- 07.03.1922
மறைவு :- 15.02.2017

யாழ்ப்பாணம், நல்லூர், சட்டநாதர் சிவன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லநாயகி ரிக்கிரி பண்டா 15.02.2017 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மீனாட்சி, தியாகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ரிக்கிரிபண்டாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திசநாயக்கா (பிரதம எழுதுநர்), குடா பண்டா (உதவிப் பணிப்பாளர் பொது நிர்வாக அமைச்சு) மற்றும் பராசக்தி (ஓய்வுநிலை பிரதம தாதிய உத்தியோகஸ்தர்), சறோஜினி தேவி (ஜேர்மனி), லீலாவதி, சோமாவதி (பிரான்ஸ்), சந்திரலீலா (ஜேர்மனி), பொடி பண்டா (பிரான்ஸ்), விமலா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயந்தி, பத்மாவதி, சத்தியமூர்த்தி, காலஞ்சென்றவர்களான மரியதாஸன், தர்மரெத்தினம் மற்றும் ஜெகநாத், பெர்னாண்டோ, மல்லிகா, செந்தில்நாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், பிறேமலதா, சுஜித்திரா, லோஜினி, அம்பாலிகா, கஜன், பிறேம ஜயந்த, பிரியதர்ஷினி, சத்தியபரன், சதீஸ்பரன், சத்தியப்பிரியா, விஜிதா, சுதாகர், இளந்திரையன், காலஞ்சென்ற சாளினி, மித்திரன், விஷோபா, சோவியா, ஜீவநாத், கஜந், கஜானா, ஷிஜந், டனி, ஷர்மிளா, டிலான், சொக்கைனா, துஷி, துஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அர்ச்சனா, பிரஷானா, லக்ஷனா, செனஜித், டாறக், ஆருஷி, ஆஷிரா, ஆஷிதா, அபிலாஷ்,அக்ஷயா,கவேஷ், நித்திக்க றன்வில,சகீர்த்தன், ஜதுர்ஷிகா, ஆதீஷ், ஆகாஷ், சாருக்ஷன், றஜித், அஜித், அஜோனா, அறிஸ்ரனி, திவ்யா, அயலின், அஸ்வின், ஜியானா, அஜின், அரோன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.02.2017) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் Maison Funeraire, 1 Place du Parc aux Charrettes, 95300 pontoise France இல் நடைபெற்று பூதவுடல் Crematorium et Parc memorial duval d'oise, 35 Avenue de Verdun, 95310 saint Quen - 1 Aumone, France இல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.94, பருத்தித்துறை வீதி,
சட்டநாதர் சிவன் கோயிலடி,
கல்வியங்காடு.

தகவல்:
குடும்பத்தினர்.

(C/28349)(11,17)

021 321 8339, 077 377 2216

# நாட்டின் உண்மையான அபிவிருத்திக்கு ஊடகங்களின் பங்களிப்பும் அவசியம்

## அரச தலைவர் எடுத்துரைப்பு

கொழும்பு,பெப்.20

நாட்டைப்பற்றிச் சிந்தித்துச் செயலாற்றுவதற்கான பொறுப்பு அனைத்து ஊடகங்களையும் சார்ந்தது. அதற்கமைவாக நாட்டின் உண்மையான அபிவிருத்திச் செயற்பாடுகள் குறித்து ஊடகங்கள் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

-இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

வெலிகம நகரசபைக் கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற தென் மாகாண அரச அதிகாரிகளின் கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

அரசியல்வாதிகளுக்கும், அரச அதிகாரிகளுக்கும் இடையில் காணப்படும் பிரிவினை, நாட்டின் எதிர்காலச் செயற்பாட்டுக்குத் தடையாகும். பாரம்பரிய அரசியல் கலாசாரம் மற்றும் எண்ணங்களிலிருந்து விடுபட்டு அனைவரும் நாட்டின் நலன்கருதி, திறந்த மனப்பான்மையுடன் செயலாற்ற வேண்டும்.

நாட்டில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு முன்னர், நாம் மாற வேண்டும், நாட்டுக்கும், மக்களுக்கும் தேவையான மாற்றங்களை ஏற்படுத்திக் கொடுக்கும் அதேவேளை, அரச சேவை யிலும் தெளிவான மாற்றமொன்றை ஏற்படுத்த அரச அதிகாரிகள் தயாராக வேண்டும். நாட்டின் அபிவிருத்திச்செயற்பாடுகளின் போது, அனைவரும் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும்.

அரச சொத்துக்கள் மற்றும் வளங்களின் பயன்பாட்டின் போது, தமது நிறுவனத்தின் சொத்துகளைத் தமது தனிப்பட்ட சொத்தாகக் கருதி சில நிறுவனத் தலைவர்கள் செயற்படுகின்றனர். அதே வேளை நிறுவனங்களுக்கிடையே காணப்படும் போட்டித்தன்மை காரணமாக, நாட்டின் அபிவிருத்திச் செயற்பாட்டுக்கு எந்தவிதப் பாதிப்புக்களும் ஏற்படக் கூடாது.

ஊடகச் செயற்பாடுகளின்போது, வர்த்தக நோக்கம் மற்றும் மக்களைக் கவரும் தன்மையைக் கருத்தில் கொண்டு எதிர்மறையான செய்திகளை மாத்திரம் வெளியிடும் வகையில் ஊடகங்கள் செயற்படக்கூடாது-என்றார்.

அபிவிருத்திச் செயற்பாடு களில் அரச அதிகாரிகளின் பின்னணி தொடர்பில், தென் மாகாண அரச அதிகாரி களைத் தெளிவுபடுத்துவதற்காக இந்தக் கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டது.

2030ஆம் ஆண்டளவில் வறுமையற்ற வலுவூட்டப்பட்ட இலங்கையை உரு வாக்குவதில், அரச அதிகாரிகளின் செயற் பணியும், அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களும்' எனும் தொனிப்பொருளில் சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சின் மூத்த விரிவுரையாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன சிறப்பு விரிவுரை ஆற் றினார்.

இந்தக் கலந்துரையாடலில் தென் மாகாண ஆளுநர் ஹேமகுமார நாணயக்கார, முதலமைச்சர் ஷான் விஜய லால் டி சில்வா, தென் மாகாண அமைச்சர்களான யு.ஜீ.டீ. ஆரியதிலக, எச். டபிளியு. குணசேன, சந்திமா ராசபுத்ர, வீரசுமன வீரசிங்க ஆகியோர் உள்ளிட்ட தென் மாகாண சபை உறுப்பினர்களும், தென் மாகாண அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ஐ)

# சைட்டத்துக்கு ரஷ்யா ஆதரவு

கொழும்பு,பெப்.20
இலங்கையில் அரச மருத்துவத் துறையினர் மற்றும் மருத்துவ மாணவர்கள், எதிர்ப்புத் தெரிவித்து வரும் சைட்டம் என்ற மாலபே தனியார் மருத்துவக்கல்லூரியின் பணிகளை ரஷ்ய தூதுவர் அலெக்சாண்டர் கார்சேவா வரவேற்றுள்ளார்.
ரஷ்யா, சைட்டம் கல்லூரிக்கு பேராசியர்களைப் பணிக்கு அனுப்புகிறது. ரஷ்யாவில் முன்னணி என்.என்.எஸ்.எம்.ஏ என்ற மருத்துவக்கல்லூரியின் பேராசிரியர்கள் அங்கு கற்பிக்கின்றனர். அத்துடன் ரஷ்ய மருத்துவர்களும் அந் தக் கல்லூரியில் பணியாற்றுகின்றனர்.
இந்த நிலையில் இலங்கையில் தனியார் மருத்துவக்கல்லூரியின் நடவடிக்கைகளை முன்னேற்ற வேண்டியது அவசியம் என்று ரஷ்யத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# மகளிர் தினத்தன்று கொழும்பில் மாபெரும் போராட்டம்

## மகிந்த அணி ஏற்பாடு

கொழும்பு,பெப்.20
பன்னாட்டு மகளிர் தினமான எதிர்வரும் மார்ச் 8 ஆம் திகதி கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுப்பதற்கு மகிந்த ஆதரவுக் கூட்டு எதிரணியின் மகளிர் அணி தீர்மானித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
கூட்டு அரசின் சில செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படும். ஆர்ப்பாட்டத்தில் நாடு முழுவதிலும் இருந்து பெருந்திரளான பெண்கள் பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
கூட்டு எதிரணியில் அங்கம் வகிக்கும் மகளிர் உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெறும்" என்றும் மகிந்த அணி மகளிர் பிரிவுத் தலைவியும் நாடாளுமன்ற உறுப்பினருமான பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்தார். (ஐ)

# வறிய மக்கள் உழைப்பை சுரண்டும் நிதி நிறுவனங்கள்

## வாழ்வின் எழுச்சித் திட்ட பணிப்பாளர் சுட்டிக்காட்டு

மட்டக்களப்பு, பெப்.20
நிதி நிறுவனங்கள் அதிக வட்டிக்குக் கடன்களை வழங்கி, வறிய மக்களின் உழைப்பைச் சுரண்டுகின்றன.
இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட வாழ்வின் எழுச்சித் திட்டப் பணிப்பாளர் பி.குணரட்ணம் தெரிவித்தார்.
மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற பிரதேச மகா சங்க நிர்வாகத் தெரிவுப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
வறிய மக்கள் கடனுக்காக அறவிடப்படும் வட்டி வீதத்தை முதலில் விசாரித்து அறிந்து கொண்டு கடன் பெற வேண்டும். எந்த நிறுவனங்கள் கடன் வழங்கினாலும், மக்கள் விரைந்து சென்று கடனைப் பெறுவதில் ஆர்வம் காட்டுகின்றனர். பின்னர் கடனை மீளச் செலுத்த முடியாமல் பரிதவிக்கின்றனர். சிலர் விரக்தி நிலைக்கும் சென்று விடுகின்றனர்.
உடலை வருத்தி உழைத்த பணத்தை வட்டியாகச் செலுத்தி, தமது குடும்பத்தை மேலும் வறுமை நிலைக்குத் தள்ளும் நிலைமையை மக்கள் உணர்ந்து கொண்டு அதிலிருந்து விடுபட வேண்டும்.
கொழுத்த இலாபம் பெறும் சில நிதி நிறுவனங்கள் பெரும்பாலும் கிராமப்புற மக்களை இலக்கு வைத்தே தமது தொழிலைச் செய்கின்றன.
ஏட்டிக்குப் போட்டியாக உருவாகின்ற சில தனியார் கம்பனிகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் சாதாரண மக்கள் மத்தியில் புகுந்து குறிப்பிட்ட பணத்தை வாராந்த, மாதாந்த, காலாண்டு, அரையாண்டுக் கடன்களாக வழங்கி அவற்றுக்கு அதிகூடிய வட் டியை அறவிட்டு மக்களைச் சுரண்டிப் பிழைக்கின்றன.
மறைமுகமான முறையில் வறிய மக்கள் மீதான இந்தச் சுரண்டல் இலேசாக இடம் பெறுகின்றது. இது தொடர்பாக மக்கள் விழிப்படைய வேண்டும் - என்றார். (ஐ-ய-46)

# கவலையில் கோத்தபாய



கொழும்பு,பெப்.20
எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவது குறித்து தனக்கு இன்னமும் யோசனை இல்லை என்று முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.
எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் நான் போட்டியிடவுள்ளதாக, வெளிநபர்களே கூறுகின்றார்கள். நான் இதுவரையில் அவ்வாறான ஒன்றையும் கூறவும் இல்லை. அவ்வாறான ஒன்று குறித்து எனக்கு யோசனை இல்லை. தற்போதைய அரசு என்னைப் பழிவாங்குவதால், நான் கடுமையான வருத்தத்தில் உள்ளேன் எனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# அமெரிக்காவுடனான பாதுகாப்பு உடன்படிக்கை மீண்டும் புதுப்பிக்க கூட்டு அரசு திட்டம்

கொழும்பு,பெப்.20
அமெரிக்காவுடன் இலங்கை ஏற்படுத்திக் கொண்ட பாதுகாப்பு உடன்படிக்கை 10 வருடங்களைக் கடந்துள்ளதால், மீண்டும் அதனைப் புதுப்பிப்பதற்கு தற்போதைய கூட்டு அரசு திட்டமிட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
இந்தப் பாதுகாப்பு உடன்படிக்கை 2007 ஆம் ஆண்டு முன்னாள் அரசதலைவலர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில், முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவால் கைச்சாத்திடப்பட்டது.
எனினும் அந்த உடன்படிக்கை 10 வருடங்களுக்கு மட்டுமே நடைமுறையில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்து. தற்போது அந்த உடன்படிக்கையின் காலம் முடிவடைந்துள்ளது. எனவே அதனை மீண்டும் கூட்டு அரசு ஏற்படுத்திக் கொள்ளத் திட்டமிட்டுள் ளது.
அயலுறவுத்துறை அமைச்சு அதற்கான முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.
இந்த உடன்படிக்கை மூலம் இலங்கைக் கடற்பரப்புக்குள் வருகைதரும் அமெரிக்கக் கப்பல் மற்றும் இராணுவத்தினருக்கு உணவு மற்றும் தங்குமிடம் உட்பட அனைத்து வசதிகளையும் இலங்கை வழங்கும் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# இலங்கையர் 6 பேருக்கு குவைத்தில் தூக்கு

கொழும்பு,பெப்.20
இலங்கையைச் சேர்ந்த 6 பேருக்கு போதைப் பொருள் மற்றும் கொலைக் குற்றச்சாட்டுகளில் குவைத்தில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் 6 பேரும் குவைத் மத்திய சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று அந்த நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
தூக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ள அறுவர் மீதும் போதைப்பொருள் மற்றும் கொலைக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.
கொலை செய்யப்பட்ட நபர்களின் உறவினர்களுக்கு இழப்பீட்டுத் தொகை (குருதிக் கொடுப்பனவு) பெற்றுக் கொள்ள விருப்பம் வெளியிட்டால், தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் வாழ்நாள் முழுவதும் சிறைத் தண்டனையை அனுபவிக்க முடியும்.
எனினும் போதைப் பொருள் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் அவ்வாறான மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளமுடியாது.
கொலைக் குற்றச்சாட்டுத் தொடர்பில் சில காலங்களுக்கு முன்னர் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த இலங்கையர் ஒருவருக்காக தூதுவர் அலுவலகம் ஊடாக பணம் சேகரிக்கப்பட்டு, இழப்பீடு வழங்கி மன்னிப்புப் பெற்றுக் கொள்வதற்காக ஆவணங்கள் சமர்ப்பிக் கப்பட்டன.
இது தொடர்பிலான மேலதிக நடவடிக்கைகள் இலங்கை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.
குவைத் அரசு 2013ஆம் ஆண்டில் இருந்து 2016 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்குள் தண்டனை நிறைவேற்றுவதைத் இடை நிறுத்தியிருந்தது. இந்த வருடத்தில் இருந்து அந்தச்சட்டத்தை நடைமுறைப் படுத்தியுள் ளது.
அண்மையில் குவைத் அரச குடும்பத்தின் உறுப்பினர்கள் உட்பட 7 பேருக்கு தூக்கு நிறைவேற்றப்பட்டது- என்றார். (ஐ)

# மரண அறிவித்தல்

பிறப்பு
04 . 01 . 1951



இறப்பு
17 . 02 . 2017

## சோமசுந்தரம் நகுலேஸ்வரம்பிள்ளை

**(சமாதான நீதிவானும், தொழிற்சட்ட ஆலோசகரும், ஓய்வு பெற்ற உதவித் தொழில் ஆணையாளர் - தொழிற் திணைக்களம், வவுனியா)**

யாழ். நெடுந்தீவு கிழக்கினை பிறப்பிடமாகவும், சுன்னாகத்தை வசிப்பிடமாகவும், வவுனியா திருநாவற்குளத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் நகுலேஸ்வரம்பிள்ளை 17.02.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேமசுந்தரம் (ஓய்வுபெற்ற அதிபர்) - சோதிப் பிள்ளை தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்ற கதிரமலை மற்றும் நவமணி தம்பதியரின் மருமகனும், சோதிமதி அவர்களின் பாசமிகு கணவரும், திருமகள் (வைத்தியர், வவுனியா பொது வைத்தியசாலை), யசிவன் (மிருக வைத்தியர், பிராந்திய முகாமையாளர், CIC Feeds, Northrn Animal Clinic, கோண்டாவில்), அரவிந்த் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருவருட்செல்வன் (வைத்தியர், வவுனியா பொது வைத்தியசாலை), விஜயதர்சினி (அரச கால்நடை வைத்தியர், கால்நடை வைத்திய அலுவலகம் நல்லூர்), சோபனா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமனும், மகேஸ்வரி (விசுவமடு), கேதீஸ்வரம்பிள்ளை (வைத்தியர், வெல்லவாய), கமலேஸ்வரி (விசுவமடு), கோணேஸ்வரம் பிள்ளை (கனடா), காலஞ்சென்ற சிவகணேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், திருக்கார்த்திகன், ராகவர்சினி, சப்தகன், சேயோன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2017) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பத்தினியார் மகிழங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.51, முதலாம் ஒழுங்கை, திருநாவற்குளம், வவுனியா.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(வி). 226) (13) T.P.: 024 222 3638 / 071 871 1206

# புதுக்குடியிருப்புச் சந்தியில் இரு கடைகள் எரிந்து நாசம்

*23 லட்சம் ரூபாவுக்கு அதிகமான பொருள் இழப்பு எனத் தெரிவிப்பு*

முல்லைத்தீவு, பெப்.20

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் நேற்று முன்தினம் நள்ளிரவு ஏற்பட்ட தீ விபத்தால் இரு கடைகள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன. சுமார் 23 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் தீயில் நாசமாகியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

புதுக்குடியிருப்புச் சந்தியில் உள்ள உணவகம் ஒன்றும், உதிரிப்பாக விற்பனை நிலையம் ஒன்றுமே எரிந்து நாசமாகியுள்ளன. புதுக்குடியிருப்பு பிரதேச சபையிடம் தீயணைப்பு வாகனங்கள் இல்லாததால் நீர்த் தாங்கியில் இருந்த நீரைப் பயன்படுத்தியே பொதுமக்கள் தீயை அணைத்தனர்.

உணவகத்தின் பின்புறத்தில் பற்றியெரிந்த தீ ஏனைய கடைகளுக்கு பரவாது தடுக்க போத்தல்களில் இருந்த நீரே பயன்படுத்தப்பட்டது. சற்றுநேரத்தின் பின்னர் அங்கு வந்த பொலிஸார் நீரிறைக்கும் இயந்திரத்தை உபயோகித்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

உணவகத்தின் பின்புறம் முற்றாக நாசமானது. அருகில் இருந்து உதிரிப்பாக விற்பனை நிலையத்தின் பின்புறம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த புதிய சைக்கிள்கள், உதிரிப்பாகங்கள் என 23 லட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான பொருள்கள் நாசமாகியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

தீ விபத்துக்கான காரணம் நேற்று மாலை வரை கண்டுபிடிக்கப்படவில்லை. பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். விபத்துக்கான காரணத்தைக் கண்டறியும் வரை அங்குள்ள பொருள்களை அகற்ற வேண்டாம் என்று பொலிஸார் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர். (ற-21,7)





## காணி தொடர்பான பிரச்சினைகளுக்கு சிறப்பு நடுவர் சபை

அச்சுவேலி,பெப்.20

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் மக்கள் மத்தியில் ஏற்படும் காணி தொடர்பான பிணக்குகளை விசாரணை செய்து இணக்கம் காண்பதற்கு சிறப்பு நடுவர்சபைகள்செயற்படவுள்ளன. நடுவர் சபைகள் தற்பொழுது பிரதேச செயலக பிரிவு வாரியாக செயற்படுகின்றன. அவற்றுக்கு மேலதிகமாக காணிகள் தொடர்பான பிணக்குகளை கையாளுவதற்கு இந்தச் சிறப்பு நடுவர் சபை செயற்படவுள்ளது.

காணிகள் தொடர்பான பிரச்சினைகள் தற்பொழுது பிரதேசசெயலகபிரிவு வாரியாக செயற்படும் நடுவர் சபைகளே கையாண்டு வருகின்றன. காணிதொடர்பானநடுவர் சபைகள் செயற்படத் தொடங்கியதும் அவற்றாலேயே காணி தொடர்பான பிரச்சினைகள் கையாளப்பட வுள்ளன.

காணி தொடர்பான சிறப்பு நடுவர்சபைக்கு தேவையான ஆளணி மாவட்ட நிலையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அவர்களுக்கு காணிப் பிரச்சினைகள் தொடர்பான மேலதிக அறிவுநிலை சார்ந்த பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்களின் பெயர்கள் வர்த்தமானியில் அறிவித் தல் செய்யப்பட்ட பின்னர் அவர்களுக்கு நியமனக் கடிதங்கள் கையளிக்கப்பட்ட வுள்ளன.

கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்ட காணி தொடர்பான சிறப்பு நடுவர் சபைக்கு ஓய்வூதியநிலை நிர்வாக அலுவலர்கள், ஓய்வு நிலை காணி அலுவலர்கள் உள்ளடங்கலாக காணி தொடர்பான மேலதிக அறிவு ஆற்றல் கொண்ட ஆளணியாக 42 பேர் மட்டில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று அறியப்படுகின்றது.

காணி தொடர்பான விசேட மத்தியஸ்தசபைகளின் செயற்பாடு தொடர்பாக அறிவிக்கும் வரை தொடர்ந்து காணிகள் தொடர்பான பிணக்குகளை பிரதேச செயலக பிரிவு வாரியாக செயற்படும் நடுவர் சபைகளே கையாளும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-11)

## அர்ஜுன் மகேந்திரனால் சிங்கப்பூருக்கு அபகீர்த்தியாம்

கொழும்பு, பெப்.20

சிங்கப்பூரைச் சேர்ந்த இலங்கை மத்திய வங்கியின் ஆளுனர் அர்ஜுன் மகேந்திரனின் நடவடிக்கைகள் தமது நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளன என்று அந்த நாட்டு உள்விவகார அமைச்சர் கே. ஷண்முகம் தெரிவித்தார்.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தனிப்பட்ட பயணமொன்றை மேற்கொண்டு சிங்கப்பூர் சென்றுள்ளார். அவருடனான தனிப்பட்ட ரீதியான சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (ற-4)

# பிலக்குடியிருப்பு மக்களுக்கு தீர்வு வழங்க வேண்டும் அரசு

*வலியுறுத்துகின்றது ஜே.வி.பி.*

கிளிநொச்சி, பெப்.20

இராணுவம் கையகப்படுத்தியுள்ள தமது சொந்தக் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தித் தொடர் போராட்டத்தில் ஈடுபடும் பிலக்குடியிருப்பு மக்கள் தொடர்பாக நாடாளுமன்றில்கவனம்செலுத்தப்படும்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்தது.

அந்தக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரம் கிளிநொச்சியில் நேற்று முன்தினம் செய்தியாளர் சந்திப்பு நடத்தினார். அதிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கூட்டு அரசின் அமைச்சரவைப் பேச்சாளர் ஒரே இரவுக்குள் பிலக்குடியிருப்பு மக்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்று கூறுகின்றார்.

போர் முடிந்து 8 ஆண்டுகளாக இந்த மக்கள் தமது பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று கோரி வருகின்றனர். கூட்டு அரசு பதவியேற்றபின்னர் மக்களின் காணிகள் அவர்களிடம் கையளிக்கப்படும் என்று கூறினார்கள். அவ்வாறு எதுவும் நடக்கவில்லை.

இந்த அநீதியான செயற்பாட்டை மக்கள் விடுதலை முன்னணி வன்மையாக எதிர்க்கின்றது. எதிர்வரும் நாள்களில் நடைபெறவுள்ள நாடாளுமன்ற அமர்வுகளில் பிலக்குடியிருப்பு மக்கள்பிரச்சினை தொடர்பாகக் கவனம் செலுத்தப்படும். இதுவரை காலம் இடமபெறாத வகையில் ஒரு நடவடிக்கையை மக்கள் விடுதலை முன்னணி மேற்கொள்ளும்.

பிலக்குடியிருப்பு மக்களின் பிரச்சினையை அரசு தீர்க்கா விட்டால் அதுவடக்கு,கிழக்குமுழுவதுமான பிரச்சினையாக உருப்பெறும். நாடு தழுவிய போராட்டமாக வெடிக்கும் நிலையை ஏற்படுத்தும்.உடனடியாகபிலக்குடியிருப்பு மக்களின் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசிடம் கோருகின்றோம் - என்றார். (ற-21,35)

CO OP INSURANCE
Reg No. PB 5116

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2016 இல் இலங்கை காப்புறுதி நிறுவனத் தினால் இலங்கை முழுவதும் நடத்தப்பட்ட புரட்டாதிமாத ஆயுள் காப்புறுதி போட்டியில் எமது கூட்டுறவு ஆயுள் காப்புறுதி நிறுவனத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களும், வெளிநாட்டு சுற்றுலாவிற்கு தகுதி பெற்று இருப்பவர் களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்



Congratulations

**செல்வி செ.கனிஸ்ரா**
Executive - Designated



Congratulations

**திரு.த.சிந்துஜன்**
Executive - Designated

**பதவி உயர்வு பெற்ற இவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்**

எமது நிறுவனத்தில் வியாபார அபிவிருத்தி முகாமையாளராக பதவியுயர்வு பெற்ற திரு.க.கணாதிபன் மற்றும் உதவி விற்பனை முகாமையாளராக பதவி உயர்வுபெற்ற செல்வி ஆ.அனுஸ்ரெலா இவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



Congratulations

**திரு.க.கணாதிபன்**
(வியாபார அபிவிருத்தி முகாமையாளர்)
(Business Development Manager)



Congratulations

**செல்வி ஆ.அனுஸ்ரெலா**
(உதவி விற்பனை முகாமையாளர்)
(Asst.Sales Manager)



Congratulations

**திரு.பேர்னாட் அலன் கியூமர்**
(Branch Manager Jaffna)

இவர்களின் சிறப்பான முன்னேற்றத்துக்காக சிறப்பாக வழிநடத்திச் சென்று கொண்டிருப்பவரும், யாழ்க் கிளையானது இலங்கையிலுள்ள கிளைகளில் முதல் ஐந்து இடங்களில் ஒன்றாக தக்கவைத்து, இன்னும் பல சாதனைகளை செய்ததோடு சிறப்பாக அனைவரையும் ஊக்கப்படுத்தி, வழிநடத்திச் செல்லும் எமது கிளை முகாமையாளர் திரு.பேர்னாட் அலன் கியூமர் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்: முகாமையாளர்கள் மற்றும் அலுவலர்கள், நலன்புரிசங்க உறுப்பினர்கள்.**

**570, வைத்தியசாலை வீதி, 2 ஆம் மாடி யாழ்ப்பாணம்.**
**021 222 8071**

## புதுக்குடியிருப்பு போராட்டத்துக்கு வணிகர் கழகத்தினரும் ஆதரவு

முல்லைத்தீவு, பெப். 20

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்பாகவுள்ள தமது பூர்வீக காணிகளை விடுவிக்க கோரி 17 நாள்களாகத் தொடர் அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணி உரிமையாளாகளுக்கு புதுக்குடியிருப்பு வணிகர் கழகத்தினர் தமது முழு ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு வணிகர் கழகத்தின் தலைவர் செ. சிவச்சந்திரன் தெரிவித்தாவது :

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்னால் கடந்த 3ஆம் திகதி முதல் தங்களுடைய காணிகளை விடுவிக்க கோரி தொடர் அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்களுக்காக கடந்த நான்கம் திகதி முழுமையாக கடைகளை அடைத்து எமது ஆதராவை தெரிவித்திருந்தோம். அவர்களுடைய போராட்டதுக்கு மேலும் வலுச்சேர்கும் வகையில் நாங்களும் இன்று அவர்களுடன் இணைந்து அடையாள உணவுதவிர்ப்பு போராட்டத்தில் இணைந்து கொள்ளவுள்ளோம். அவர்களுடைய அகதி வாழ்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து அவர்களுடைய காணிகளில் அந்த மக்கள் சென்று வாழ வேண்டும். அதவரைக்கும் அவர்கள் முன்னெடுக்கும் அறவழிப் போராட்த்துக்கு புதுக்குடியிருப்பு வனிகர்கழத்தின் முழுமையான ஆதரவை அவர்களுக்கு நாங்கள் கொடுப்போம்.- என்றார். (ற-7)





யாழ்ப்பாணத்தின் பாசையூர், குருநகர் மீனவர்களின் வலைகளில் அண்மைக் காலமாக பெரியளவிலான சுறாக்கள் சிக்குகின்றன. நேற்றுமுன்தினம் குருநகர் மீனவர் ஒருவரின் வலையில் 7 அடி நீளமும், 150 கிலோ எடையும் கொண்ட சுறா சிக்கியது. அது ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ந-21)

# மறு அறிவித்தல்வரை மூடப்பட்டது வவு. பொதுப் பூங்கா

## அங்கிருந்த ஊஞ்சல் பாறி விழுந்து சிறுவன் காயமுற்றதையடுத்து

வவுனியா, பெப்.20
வடக்கு முதலமைச்சரால் அண்மையில் மக்கள் பாவனைக்குக் கையளிக்கப்பட்ட வவுனியா நகர சபைக்குச் சொந்தமான சிறுவர் பூங்கா தற்காலிகமாக மூடப்பட்டது.

பூங்காவில் அமைக்கப்பட்டிருந்த ஊஞ்சலில் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தபோது அது அடியோடு பாறி விழுந்தது. இந்தச் சம்பவத்தையடுத்தே பூங்கா மறு அறிவித்தல் வரை மூடப்பட்டது என்று அறிவிக்கப்பட்டது. உலக வங்கியின் நிதி ஒதுக்கீட்டில், வவுனியா நகர சபையினால் 9 மில்லியன் ரூபா செலவில் இந்தப் பூங்கா அமைக்கப்பட்டது. கடந்த 3ஆம் திகதி வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக் னேஸ்வரன் பூங்காவைத் திறந்து மக்கள் பாவனைக்குக் கையளித்தார்.



பூங்காவில் அமைக்கப்பட்டிருந்த ஊஞ்ச லில் 3 சிறுவர்கள் நேற்றுமுன்தினம் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது அந்த ஊஞ்சல் அடியோடு பாறி விழுந்தது. ஒரு சிறுவன் காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

ஊஞ்சல் சரியான முறையில் அமைக்கப்படாததாலேயே பாறி விழுந்தது என்று அங்கிருந்த மக்கள் குற்றஞ் சாட்டினர்.

"இந்தப் பூங்கா நகரசபை முன்னாள் செயலரின் பதவிக் காலத்திலேயே அமைக்கப்பட்டது. இந்தச் சம்பவம் நடந்ததும் சிறுவர்கள் விளையாடும் அனைத்து உபகரணங்களையும் சோதனைக்குட்படுத்துமாறு பணித்துள்ளேன்" - என்று நகர சபைச் செயலாளர் ஆர்.தயாபரன் கூறினார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன் நேற்று பூங்காவைப் பார்வையிட்டார். பாறி விழுந்த ஊஞ்சலையும் ஆராய்ந்தார். பூங்காவின் சீரமைப்பு ஒப்பந்தகாரர்களுடன் கலந்துரையாடினார்.

அங்குள்ள அனைத்து விளையாட்டு உபகரணங்களையும் சோதனையிடும் வரை பொதுப் பூங்காவை மூட் வேண்டும் என்று தெரிவித்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் நகர நபைச் செயலாளருடன் தொலைபேசியில் உரையாடி அதற்குரிய அனுமதியையும் பெற்றார். திருத்த வேலைகள் செய்து அறிக்கை சமர்ப்பிக்கும் வரை பொதுப் பூங்கா மறு அறிவித்தலை மூடப்படுகின்றது என்ற அறிவித்தல் பலகை நேற்றுக் காலை முதல் காட்சிப்படுத்தப்பட்டது.

"நகர சபை முன்னாள் செயலாளர் பதவியில் இருந்தபோது பூங்கா சீரமைப்புப் பணிகள் நடைபெற்றன. நகர சபைக்குப் புதிய செயலாளரை நியமிக்கும் வரை உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் கீழ் சில மாதங்கள் சீரமைப்புப் பணிகள் நடைபெற்றன. அனைத்துத் தரப்பினரும் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும்"- என்று பொதுமக்கள் தெரிவித்தனர். (ந-21)

## களஞ்சியம் பற்றாக்குறை நெல் கொள்வனவு சிக்கலில்

யாழ்ப்பாணம், பெப்.20
கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள நெல் களஞ்சியங்கள் அனைத்திலும் நெல் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு விளைச்சலை கொள்வ னவு செய்ய முடியாதுள்ளது.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் நெல் அறுவடை ஆரம்பித்துள்ளது. நெல்லைத் தனியாருக்கு விற்கும் போது குறைந்த விலைக்கே விற்க வேண்டியுள்ளது என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே மாவட்டச் செயலர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:
விவசாயிகள் எதிர் நோக்கும் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக நெல் சந்தைப் படுத் தும் சபையின் ஊடாக அரசு நெல்லைக் கொள்வனவு செய்வதே. அவ்வாறு கொள்வனவு செய்வதில் இக்கட்டான நிலமை காணப்படுகின்றது.

நெற்களஞ்சியம் போதாமை முக்கிய விடய மாகும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பெரிய நெற்களஞ்சியங்கள் கிடையாது. சிறு சிறு களஞ்சியங்கள் 7 உள்ளன. அவை அனைத் திலும் நெல் களஞ்சியப் படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டுக்கான உற்பத்தியைக் கொள்வனவு செய்ய முடியாத நிலமை காணப் படுகின்றது.

களஞ்சியங்களில் உள்ள நெல்லைச் சந்தைப்படுத்த முயற்சிகள் நடைபெறுகின்றன. அவை சந்தைப்படுத்தப் பட்டதும் கிடைக்கும் களஞ்சிய வசதிகளுக்கு ஏற்ப கொள்வனவு இடம்பெறும். - என்றார். (ந-101)

## பிலக்குடியிருப்புப் போராட்டத்துக்கு ஆதரவாக மாணவர்கள் போராட்டம்

முல்லைத்திவு, பெப்.20
இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ள தமது காணிகளை விடுவிக்க வேண்டும் என்றுபிலக்குடியிருப்பு மற்றும் புதுக்குடியிருப்பு மக் கள் தொடர்ச்சியாக நடத்தும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து புதுக்குடியிருப்புப் பாடசாலைகளின் மாணவர்கள் இன்று சங்கிலித் தொடர் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

பிலக்குடியிருப்பு மக்கள் தமது நிலங்களை விடுவிக்க வேண்டும் என்று வற்புறுத்தி கடந்த 20 நாள்களாகத் தொடர் போராட்டம் நடத்துகின்றனர். அத்துடன் புதுக்குடியிருப்பு மக்கள் கடந்த 17 நாள்களாக போராட்டம் நடத்துகின்றனர். அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து இன்று வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளின் மாணவர்களும் ஒரு மணி நேரக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பில் உள்ள 8 பாடசாலைகளின் மாணவர்களும் இன்று சங்கிலித் தொடர் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். புதுக்குடியிருப்பு நகரப் பகுதியில் இருந்து புதுக்குடியிருப்பு மக்களின் போராட்டம் இடம் பெறும் இடமான புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் வரை மாணவர்கள் கை கோர்த்து சங்கிலி வடிவில் போராட்டத்தில் இடுபட உள்ளனர்.

இந்தப் போராட்டமும் காலை 7.30 மணி முதல் 8. 30 மணி வரையான ஒரு மணி நேரத்தில் நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ந-21)



பிலக்குடியிருப்பு மக்கள் தமது வாழ்வியல் காணிகளை இராணுவம் விடுவிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி கடந்த 20 நாள்களாக தொடர் அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். போராட்டத்தால் பாடசாலை சென்று கல்வி கற்க முடியாத நிலையில் 54 மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் உளவியலை மேம் படுத்தும் வகையில் வளவாளர்களால் ஆற்றுப்படுதும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. மனநிலை வெளிப்படும் வகையில் மாணவர்கள் ஒவியங்களையும் வரைந்தனர். (ந-7)

## சிறு தானிய செய்கையில் ஈடுபடக் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.20
பெரும்போக நெற்செய்கை அறுவடை முடிந்ததும் விவசாயிகள் சிறு தானிச்செய்கையில் ஈடுபட வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண விவசாயப் பிரதிப் பணிப்பாளர் அ.செல்வராசா தெரிவித்தார்.

தற்போது அநேக இடங்களில் நெல் அறுவடை நடக்கின்றது. அறுவடையின் பின்னர் விவசாயிகள் சிறுதானியச் செய்கையில் ஆர்வம் காட்ட வேண்டும்.

பயறு, கௌபி, உழுந்து, நிலக் கடலை, எள் போன்ற சிறுதானியங்களைப் பயிரிட வேண்டும்.

சிறுதானியச் செய்கையை ஊக்குவிக்கும் வகையில் விவசாயத் திணைக்களம் கடந்த ஆண்டு இறுதியில் விவசாயிகள் சிலருக்கு மானிய விலையில் எள் வழங்கியது.- என்று அவர் குறிப்பிட்டார். (ந-17)



உக்ரைன் தேசிய மிருகக்காட்சிச் சாலையில், கடல் வாழ் உயிரினமான சீல் ஒன்று கிற்ரார் இசைக்கருவியை இயக்கப் பழக்கப்பட்டுள்ளது. பன்னாட்டு ஊடகங்கள் பலவும் இது தொடர்பான காணொலியைப் பதிவுசெய்து வெளியிட்டுள்ளன. சமூக வலைத்தளங்களிலும் குறித்த காணொலி விரைவாகப் பரவி வருகிறது. (ம)

## ஓ.பி.எஸ். - ஆளுநர் நேற்றுத் திடீர் சந்திப்பு

சென்னை, பெப். 20
தமிழக ஆளுநர் வித்யாசாகர் ராவ், முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் இடையிலான சந்திப்பொன்று நேற்றுக் காலை நடைபெற்றது.

தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி மீதான அமைச்சரவைக்கான நம்பிக்கை வாக்கெடுப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது. அடிதடி, கூச்சல்கள், குழப்பங்களுக்கு குறைவில்லாமல் நடந்த சட்டப் பேரவைக் கூட்டத்தில் எதிர்க்கட்சியினர் இல்லாமல் நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெற்றது. பெரும்பான்மையை முதல்வர் பழனிச்சாமி நிரூபித்தார். இந்த நிலையில், இந்த வாக்கெடுப்பு அமைதிப் பொறிமுறைக்குப் புறம்பாக நடைபெற்றது. இதனால் தீர்மானத்தை இல்லாமல் செய்து மறு வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று ஓ.பி.எஸ். வலியுறுத்தினார் என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)

# மறுவாக்கெடு நடக்கவேண்

## ஸ்டாலின் வலியுறுத்தல்



சென்னை, பெப். 20
முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அமைச்சரவை மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு மீண்டும் நடந்தாக வேண்டும் என்று தி.மு. கழகத்தின் செயல் தலை வரும் தமிழக சட்டசபையின் எதிர் கட்சித் தலைவருமான ஸ்டாலின் வலியுறுத்தினார்.

தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அமைச்சரவை மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது. இரு தடவைகள் சபை ஒத்திவைக்கப்பட்டு பிற்பகல் 3.30 மணியளவில் பெரும்பான்மை ஆதரவை நிரூபித்தார் எடப்பாடி பழனிச்சாமி.

இந்த வாக்கெடுப்பின் போது, முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வமும் அவருக்குச் சார்பான அ.தி.மு. கழக சட்டமன்ற உறுப்பினர்களும் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர். தி.மு. கழகத்தின் செயல் தலைவரும் தமிழக சட்டசபையின் எதிர்க்கட்சித் தலைவருமான ஸ்டாலினும் இரகசிய வாக்கெடுப்பை வலியுறுத்தினார். இல்லாது விடில் சட்டமன்ற உறுப்பினர்கள் தமது தொகுதிகளுக்கு சென்றுவந்த பின்னர் வாக்கெடுப்பு நடத்தலாம் என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பான கூச்சல்களும், குழப்பங்களும் தொடர்ந்து நடைபெற்றன. இதனால் தி.மு. கழகத்தினர் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். காங்கிரஸ் தானாக வெளிநடப்புச் செய்தது. பின்னர் வாக்கெடுப்பு நடைபெற்றது. இதில் 122 சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன்
யை நிரூபி
பழனிச்சாமி
வாக்களித்த
தி.மு. கழகத்
றப்பட்ட பின்
நடந்ததால்
நிராகரிக்க
ஓ.பி.எஸ். வ
ஸ்டாலினும்
கருத்தை
குறிப்பிட்டார்.
சட்டசபையில்
சதிகாரத்தை
னார். அ.தி.
ஓர்தலைப்
கொண்டார்.
இது தொடர்
தலைவர் பிர
மிக விரை
முறையிடவு
ஸ்டாலின்
தார்.

# வழிபாட்டுத்தலத் தாக்குதல்; பதிலடி கொடுக்கிறது பாக்.

இஸ்லாமபாத், பெப். 20
பாகிஸ்தான் செவான் நகரில் உள்ள இஸ்லாமிய வழிபாட்டுத் தலத்தின் மீது கடந்த வியாழக்கிழமை நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 100 பேர் உயிரிழந்தனர். ஐ.எஸ். அமைப்பு தாக்குதலுக்கு பொறுப்பேற்றதை அடுத்து ஆயுததாரிகளுக்கு எதிரான தனது போரை கடும்முனைப்புடன் தொடங்கியுள்ளது பாகிஸ்தான்.

தாக்குதலுக்கு பாகிஸ்தான் தலைமை அமைச்சர் நவாஸ் ஷெரீப் தனது கண்டனத்தை உடனடியாகவே தெரிவித்தார். ஆயுததாரிகளுக்கு எதிரான கடும் தேடுதல் நடவடிக்கைக்கும் தாக்குதலுக்கும் அவர் உத்தரவிட்டார். இதனையடுத்து அடுத்த 24 மணி நேரத்தில் கிட்டத்தட்ட 70 ஆயுததாரிகள் பாகிஸ்தானின் பலமாகாணங்களிலும் கொல்லப்பட்டனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் தெரிவித்தன. இந்த நிலையில், அயல்நாடான ஆப்கானிஸ்தான் எல்லைக்குள் ஊடுருவி ஆயுததாரிகளின் நிலைகள் மீது பாகிஸ்தான் இராணுவம் கடும்தாக்குதலை நடத்தியது. ஆயுததாரிகளின் பயிற்சி முகாம்கள் நிர்மூலமாக்கப்பட்டன. தனது எல்லைக்குள் புகுந்து நடத்திய இந்தத் தாக்குதலுக்கு ஆப்கானிஸ்தான் கடும் கண்டனத்தை வெளியிட்டது. (ம)





## உணவு ஒறுப்பு போராட்டத்துக்கு ஸ்டாலின் அழைப்பு

சென்னை, பெப். 20
தமிழக சட்டசபையில் தி.மு. கழகத்தினர் தாக்கப்பட்டதைக் கண்டித்தும், எதிர்க்கட்சிகள் இல்லாமல் புதிய அமைச்சரவை மீது நடத்தப்பட்ட நம்பிக்கை வாக்கெடுப்பைக் கண்டித்தும் தமிழகத்தின் பல்வேறு இடங்களிலும் நாளைமறுதினம் உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்த அழைப்பு விடுத்தார் தி.மு. கழகத்தின் செயல் தலைவரும், தமிழக சட்டசபையின் எதிர்க்கட்சித் தலைவருமான ஸ்டாலின்.

சென்னை - அண்ணா அறிவாலயத்தில் தி.மு. கழகத்தின் கூட்டமொன்று நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்துவது தொடர்பில் முடிவெடுக்கப்பட்டது. காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை இந்தப் போராட்டம் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம)

# ஊடகங்கள் அமெரிக்க மக்களின் எதிரிக

அமெரிக்க ஊடகங்கள் எனக்கு எதிரிகள் அல்ல, மக்களின் எதிரிகள் என்று அந்தநாட்டு அதிபர் டொனால்ட் ட்ரம்ப் குறிப்பிட்டார்.

அமெரிக்காவின் புதிய அதிபராக கடந்த ஜனவரி மாதம் ட்ரம்ப் பதவியேற்றார். தேர்தல் பரப்புரை தொடங்கி தற்போது வரை அமெரிக்காவின் முன்னணி ஊடகங்கள், ட்ரம்பின் செயற்பாடுகளை கடுமையாக விமர்சித்து வருகின்றன. குறிப்பாக சிரியா உள்ளிட்ட 7 முஸ்லிம் நாடுகளின் அகதிகள், பயணிகள் அமெ



டுப்பு
டும்

# புதிய கண்டம் கண்டுபிடிப்பு

வொஷிங்டன், பெப். 20
உலகில் புதிதாக ஓர் கண்டம் இருக்கிறது என விஞ்ஞானிகளின் ஆய்வில் கண்டறியப்பட்டது. இந்தத் தகவலை அமெரிக்காவின் வார இதழ் ஒன்று வெளியிட்டது.
நியூசிலாந்துக்கு அருகே கடலுக்குள் மூழ்கிய நிலையிலேயே இந்தக் கண்டம் கண்டுபிடிக்கப்பட்டது. சிலான்டியா என்று குறித்த கண்டத்துக்கு பெயரிடப்பட்டது. நியூசிலாந்தின் பரப்பளவை விட மூன்று மடங்கு பெரியதாக இந்தக் கண்டம் காணப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பான ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)



## 41 ஆயுததாரிகள் உயிரிழப்பு

சிரியாவில் ஆயுததாரிகளுக்கு இடையே இடம்பெற்ற உட்பூசலில் 41 பேர் உயிரிழந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன. அல் அக்சா என்ற ஆயுதக் குழுவுக்கிடையில் ஏற்பட்ட மோதலிலேயே 41 பேரும் சாவடைந்தனர். இட்லிப் மாகாணத்தில் இந்த மோதல் இடம்பெற்றது என்று மனித உரிமைக்கான சிரிய அரசின் கண்காணிப்புக் குழு தகவல் வெளியிட்டது. (ம)



## பேருந்து தடம்புரண்டதில் 19 பேர் பரிதாபச் சாவு

### ஆர்ஜென்ரீனாவில் துயரம்

பியூனஸ் ஏர்ஸ், பெப். 20
ஆர்ஜென்ரீனாவின் அகான் காகுவா மலைப்பகுதியில் சென்ற பேருந்து ஒன்று தடம்புரண்டதில் 19 பேர் உயிரிழந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன.
ஆர்ஜென்ரீனா - சிலி எல்லையில் உள்ள மென்டோசா மாகாணத்திலேயே சுற்றுலாத் தலமான அகான் காகுவா மலைப் பகுதி உள்ளது. 30 பேருடன் சென்ற பேருந்தொன்று நேற்றுமுன்தினம் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 19 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களில் 3 பேர் குழந்தைகள். சாவடைந்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்தவர்கள். 11 பேர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம)





இந்தோனேசியாவின், ஜாவா மாகாணத்தின் சிடகற்ரன் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்த அடைமழை காரணமாக அங்கு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. ஏராளமான வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. சிறுவன் ஒருவன் தனது வீட்டுக்குள் உட்கார்ந்திருக்கும் இருக்கையின் பாதிப்பகுதி நீருக்குள் மூழ்கியுள்ள நிலையிலும் அவன் வேறுவழியின்றி அந்த இருக்கையிலேயே அமர்ந்திருக்கிறான். இந்தப்படம் ஜாவா வெள்ளப்பெருக்கின் அபாயத்தன்மையை வெளிப்படுத்துவதாக அமைந்தது. (ம)

...தரவுடன் பெரும்பான்மை
...ப நிரூபித்தார் எடப்பாடி
...னிச்சாமி. 11 பேர் எதிராக
...க்களித்தனர்.
...ழ. கழகத்தின் வெளியேற்
...பட்ட பின்னர் வாக்கெடுப்பு
...ந்ததால் அதை ஆளுநர்
...ாகரிக்க வேண்டும் என்று
...பி.எஸ். வலியுறுத்தினார்.
...ாலினும் அவ்வாறான ஓர்
...த்தை நேற்றுக் காலை
...ிப்பிட்டார்.
...சபையில் சபாநாயகர் எதேச்
...காரத்தைப் பயன்படுத்தி
...ார். அ.தி.மு. கழகத்துக்கு
...தலைப் பட்சமாக நடந்து
...ாண்டார்.
...து தொடர்பில் குடியரசுத்
...லவர் பிரணாப் முகர்ஜியை
...க விரைவில் சந்தித்து
...றையிடவுள்ளேன் என்றும்
...ாலின் மேலும் தெரிவித்
...ர். (ம)

## ஹிட்லரின் அலைபேசி ஏலத்தில்

ஜெர்மனின் சர்வாதிகாரி ஹிட்லர் பயன்படுத்திய அலைபேசி அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள ஏல விற்பனை நிலையமொன்றில் வைக்கப்பட்டுள்ளது.
இரண்டாம் உலகப் போரில் இந்த அலைபேசியைப் பயன்படுத்தியே ஹிட்லர் தனது அதிகாரம் மிக்க உத்தரவுகளைப் பிறப்பித்தார் என்று நம்பப்படுகிறது. 1945ஆம் ஆண்டு ஜேர்மனின் பெர்லின் நகரில் ரஷ்ய சிப்பாய்கள் அதை மீட்டெடுத்து பிரிட்டனிடம் ஒப்படைத்தனர். தற்போது அது நியூயோர்க்கின் அலெக்சான்டர் ஏலவிற்பனை நிலையத்தில்வைக்கப்பட்டுள்ளது. இந்த அலைபேசி இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 9 கோடி ரூபாவுக்கு ஏலம் போகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)





கிம் ஜோங் நாம்



கிம் ஜோங் உன்

## கிம் ஜோங் நாமின் கொலையில் கிம் ஜோங் உன் மீது சந்தேகம்

கோலாலம்பூர், பெப். 20
வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னின் சகோதரர் கிம் ஜோங் நாம், மலேசியாவின் கோலாலம்பூர் நகரில் கொலை செய்யப்பட்டிருந்த நிலையில், இந்தக் கொலையின் பின்னணியில் வடகொரியாவின் கிம் ஜோங் உன்னே இருக்கலாம் என்று சந்தேகத்தை வெளிப்படுத்தியது தென்கொரியா.
கடந்த 13 ஆம் திகதி திங்கட்கிழமை கிம் ஜோங் நாம் சடலமாக மீட்கப்பட்டார். இந்தக் கொலையின் பின்னணியில் இந்தோனேசியப் பெண் சிட்டி ஆய்சா, அவரது மலேசியக் காதலர், வியட்நாம் பெண் டொன் தி ஹுவாங் மூவரும் ஏற்கனவே கைது செய்யப்பட்டிருந்தனர். இந்த நிலையில் வடகொரியாவைச் சேர்ந்த ரி ஜாங் சோல் என்பவரும் கைது செய்யப்பட்டார். அவரிடமும் தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.
கிம் ஜாங் நம் படுகொலை செய்யப்பட்டார் என்பது உறுதிப்படுத்தப்பட்டால் வடகொரிய அதிபரின் காட்டுமிராண்டித்தனமும், பதவி வெறியும் நிச்சயம் வெளிப்படும் என்று தென்கொரிய அதிபர் தெரிவித்தார். (ம)

# ...ிகள் என்றார் ட்ரம்ப்



...ரிக்காவில் நுழைய ட்ரம்ப் தடை விதித்ததை ஊடகங்கள் கடுமையாக கண்டித்தன.
இந்த விவகாரம் தொடர்பாக அதிபர் ட்ரம்ப், தனது கீச்சகத்தில்(ருவிற்றர்), நியூயோர்க் டைம்ஸ், என்.பி.சி. நியூஸ், சி.பி.எஸ்., சி.என்.என். ஆகிய ஊடகங்கள் எனக்கு எதிரி அல்ல. அவை மக்களின் எதிரிகள். வெள்ளை மாளிகையில் குழப்பம் நீடிப்பதாக ஊடகங்கள் செய்தி வெளியிடுகின்றன. இதில் துளியும் உண்மையில்லை. நான் கட்டுக்கோப்பாக ஆட்சி நடத்துவது எதிர்க்கட்சிக்கும் ஊடகங்களுக்கும் பிடிக்கவில்லை. அதனால் என்மீது சேற்றை வாரி இறைக்கிறார்கள். எனது ஆட்சியை மக்கள் விரும்புகிறார்கள். எனப் பதிவிட்டார். (ம)

# மக்கள் வங்கியின் யாழ்.ஸ்ரான்லி வீதி கிளை நவீனமயப்படுத்தப்பட்டது

## தன்னியக்க வங்கிச் சேவை அலகு ஆரம்பம்






மக்கள் மயப்பட்டதான வாடிக்கையாளர் சேவைகளை இலகு படுத்தும் விதமாக யாழ்ப்பாணம் மக்கள் வங்கியின் ஸ்ரான்லி வீதிக்கிளை தன்னியக்க வங்கிச் சேவை அலகை ஆரம்பித்து வைத்துள்ளது.

இதன்படி 'மக்கள் வங்கியின் எதிர்கால நவீனத்துவ வங்கி முறைமைக்கு முன்னுரிமை எனும் தொனிப்பொருளின்' கீழாக வடக்கு மாகாணத்திலே முதன்முறையாக தொடுதிரையுடனான தன்னியக்க பண வைப்பு இயந்திரம்,தன்னியக்க பணப்பரி மாற்று இயந்திரம் மற்றும் பட்டியல் கொடுப்பனவு இயந்திரம் ஆகியவற்றின் செயற்பாடுகள் மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி என்.வசந்தகுமாரால் நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாக தொடக்கி வைக்கப்பட்டது.

இந்தச்சேவையை ஆரம்பித்ததன்மூலமாக வாடிக்கையாளர்கள் 24 மணிநேரமும் பணக்கொடுக்கல் வாங்கல்களை மேற் கொள்ளவும், மின்சாரக் கட்டணம்,ரெலிகொம்,தொலைபேசிக் கட்டணம் மற்றும் நீர் வடிகாலமைப்பு சார் பட்டியல்களை இலகு முறையிலே செலுத்தக்கூடியதான வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது.

# டி.எவ்.சி.சி. வங்கியின் வர்தன சஹாய சேவை ஆரம்பம்

## சிறு கைத்தொழிற் பிரிவுகளுக்கு ஆதரவு வழங்க ஏற்பாடு

சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகம் சார் செயற் பாடுகளுக்கு குறிப்பாக சிறு கைத்தொழிற்பிரிவுக்கு தமது ஆதரவை அளிக்கும் விதமான 'வர்தன சஹாய' என்ற சேவையினை ஆரம்பித்துள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

இந்தச் சேவையானது சிறுகைத்தொழிற்துறையின ருக்கான புதிய சேவையாக விளங்குவதுடன் கடன் பெறல், லீசிங், வங்கி உத்தரவாதங்கள் உள்ளிட்டதான பன்முக நிதிச் சேவைகளை அளிக்கும் முழுமையான நிதித் தீர்வாக விளங்குகின்றது.

சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக நிதியீட்டத்தில் உறுதி யான நம்பிக்கையை வாடிக்கையாளர்கள் மத்தியிலே ஏற்படுத்தியுள்ளதான இந்தச்சேவையானது முக்கிய பயனுறுதியாக சிறுகைத்தொழில் வாடிக்கையாளர் களுக்குதனிப்பயனாக்கப்பட்டதான நெகிழ்வுத்தன்மை மிகுந்த நிதித் தீர்வுகளை வாடிக்கையாளரின் தேவையை பூர்த்தி செய்யும் நோக்குடன் வழங்கு கின்றமை நோக்கத்தக்கது.

அத்துடன் நிதி உதவிகளை அளிப்பதற்கு மேலதிகமாக வங்கியானது ஆலோசனைச் சேவைகளை மேலதிக பெறுமதிச் சேர்க்கையாக நாடு முழுமைக்குமாக பரந்துபட்ட ரீதியிலே தொழில்முயற்சியாளர் களுக்கான அபி விருத்தி நிகழ்ச்சித்திட் டங்களாக அளிக்கின் றமை குறிப்பிடத்தக் கது.

இந்தச் சேவை குறித்து கருத்துரைத்த டி.எவ். சி.சி வங்கியின் பிரதிப் பிரதம நிறைவேற்று அதிகாரி லக்ஷ்மன் சில்வா,

"வங்கியானது அரசின் 'சுவசக்தி' 'கடன்' திட்டத் துடன் இணைந்ததாக இந்த திட்டத்தினை ஆரம்பிப்பதில் மிகுந்த பெருமிதம் கொள் கின்றது. இதன் மூலம் நாட் டின் சிறுகைத்தொழிற் துறைக்கு உதவ வேண்டும் என்ற வங்கியின் கடப்பாட் டினை மீள உறுதிசெய்ய முடிந்துள்ளது. சுவசக்தி கடன் திட்ட வரிசையில் பங் கேற்கும் நிதி நிறுவனம் என்ற வகையில்கடன்களை அளிப் பதன் ஊடாக வங்கியானது 'வர்தன சஹாய' திட்டத்தின் கீழாகவும் சிறு கைத் தொழிற்றுறை முயற்சியா ளர்களுக்கான கடன்களை அளிக்கும்.

மேலும் தனிப் பயனாக்கப் பட்ட நிதித்தீர்வுகள் மற்றும் சேவைகளை அளிப்பதன் ஊடாக நீண்டகால உற வினை கட்டமைத்துக் கொண் டுள்ள வங்கி துரித வளர்ச் சியடைந்துவரும் தமது வாடிக்கையாளர் தளப் பரம் பலுடன் வலுவான உறவாடலை உருவாக்கி வந்துள் ளதுடன் தமது வாடிக்கையாளர்களுக்கு புத்தாக்கம் மற்றும் பொறுப்புணர்வுமிக்க நிதித் தீர்வுகளை அளித்து, அவர்கள் தொடர்ச்சியாக மேம்படுவதை தமது கடப் பாடாகக் கொண்டுள்ளது" - என்றார்.

> "வங்கியானது ஆலோசனைச் சேவைகளை மேலதிக பெறு மதிச் சேர்க்கை யாக நாடு முழு மைக்குமான பரந்துபட்ட ரீதி யிலே தொழில் முயற்சியாளர் களுக்கான அபி விருத்தி நிகழ்ச் சித் திட்டங் களாக அளிக் கின்றமை குறிப் பிடத்தக்கது.

# வர்த்தக நடவடிக்கைகளுக்கு மத்திய வங்கியின் நிதிச் சபை கட்டுப்பாடு

*முறிகள் விநியோகம் தொடர்பிலான குற்றச்சாட்டுகள் குறித்து நடவடிக்கை*

மத்திய வங்கியின் முறிகள் விநியோகம் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சார்ந்து பேர்ப்பச்சுவல் றஸ்ரீஸ் நிறுவனம் மற்றும் அதனுடன் தொடர்புப்பட்ட இரண்டு நிறுவனங்களின் வர்த்தக நடவடிக்கைகளுக்கு மத்திய வங்கியின் நிதிச் சபை கட்டுப்பாடு விதித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

மத்தியவங்கியின் நிதிச்சபை விதித் துள்ள கட்டுப்பாடுகளை ஆட்சேபனைக்கு உட்படுத்தி குறித்த நிறுவனங்கள் தாக்கல் செய்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த விடயம் தெரியவந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தவிர, இதற்கு முன்பதாக சர்ச்சைக்குரிய முறிகள் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் தமது நிறுவனங்களின் கொடுக்கல் வாங்கல்களை மட்டுப்படுத்தும் வகையிலே மத்திய வங்கியின் நிதிச் சபையினால் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 7 ஆம் திகதி மேற்படி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள தகவல் மனுவில் குறித்துக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் இந்த மனுவிலே இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் உள்ளிட்ட 13 பேர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் பேர்ப்பச்சுவல் றஸ்ரீஸ் நிறுவனம் மற்றும் அதனுடன் தொடர்புப்பட்டதான பேர்ப்பச்சுவல் எஸட் முகாமைத்துவ தனியார் நிறுவனம் மற்றும் பேர்ப்பச்சுவல் கெபிட்டல் ஹோல்டிங் போன்ற நிறுவனங்கள் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளதாகவும் தகவல் தெரிவிக்கப்படுகின்றது.

# அதிவேக நெடுஞ்சாலைகளின் இரண்டாம் கட்ட உருவாக்கப்பணிகள் ஆரம்பம்

## அரச வங்கிகளிடம் இருந்து நிதிமூலங்களை பெறத் தீர்மானம்



மத்திய அதிவேக நெடுஞ் சாலைகளின் இரண்டாம் கட்ட நிர்மாணப்பணிகளை முன்னெடுப்பதற்குத்தேவை யான நிதிமூலமான 23 பில்லியன் ரூபா தொகை மதிப்பீட்டினை இரண்டு அரச வங்கிகளிடமிருந்து பெற் றுக்கொள்ள அரசுதீர்மானம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாகநாட்டின்பொருளா தார வளர்ச்சிக்குத் தேவை யானதாக கருதப்படுகின்ற வெவ்வேறு பகுதிகளை ஒன்றுடன் ஒன்று இணைப் பது என்ற எண்ணக் கருவின் அடிப்படையிலே இந்தச் செயற்பாடுகள் முக்கியத்துவம் வாய்ந் ததாக கருதப்படுவதாக கூறப்படுகிறது.

இதன் பிரகாரம் 23.2 பில்லியன் ரூபாவை தேசிய சேமிப்பு வங்கி மற்றும் மக் கள் வங்கி ஆகியவற்றிட மிருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்படவுள்ள மேற்படி நிதித் தொகை யானது மீரிகம முதல் குரு நாகல் வரையான 39.29 கிலோ மீற்றர்கள் தொலை வைக் கொண்டதான அதிவேக நெடுஞ்சாலை களின் 2ஆம் கட்டப் பணி களைமுன்னெடுக்கப்பயன் படுத்தப்படவுள்ளமைநோக் கத்தக்கது.

# அரிசி விற்பனையில் இருவேறுபட்ட விலைகள் வேண்டாம்

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு அரிசி வகைகளுக்கு இரு வேறு பட்ட நிர்ணய விலைகளின் விதிப் பனவு தேவையற்றது என அகில இலங்கை கமநல சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தவிர,அரசுடன் இடம்பெற்றதான கலந்துரையாடலின்போது அரிசி விற்பனையாளர்கள் வெள்ளை அரிசி ஒரு கிலோ 78 ரூபாவாக வும் நாட்டரிசி ஒரு கிலோ 80 ரூபாவாகவும், சம்பா அரிசி ஒருகிலோ 95 ரூபாவாகவும் விற்பனை செய்வதற்கான கோரிக்கையை விடுத்துள்ள தான தகவல் அகில இலங்கை கமநல சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் நாமல் கருணாரத்த வால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, சந்தையில் உள் ளூர் அரிசிக்குப் பதிலீடாக வெளி நாட்டுஅரிசிவகைகளைவிற்பனை செய்கின்றனர்.

இந்தச்செயற்பாடுகள்நுகர்வோரை ஏமாற்றும் செயற் பாடு. இவற்றைத் தடுப்பதற்கு அரசு சிறப்புத் திட் டங்களை முன்னெடுக்க வேண் டும். அவற்றைச் சிறந்த முறை யிலே நடைமுறைப்படுத்த வேண்டும். அரிசி வகைகளுக்கு ஒருபோதும் இரண்டு நிர்ணய விலைகளை விதிக்க வேண்டா மெனவேண்டுகோள்விடுக்கிறோம் என அகில இலங்கை கமநல சம்மேளனம் கோரிக்கை விடுத் துள்ளது.





(நேற்று வெளியான கட்டுரையின் தொடர்ச்சி)

# போராட்டக் களத்தில் ஒரு முழுநாள்...

டிலீப்

**நேரம் இரவு 11 மணி**

அந்தப் பெண்கள் உறங்குவதற்கு ஆயத்தமானார்கள். எனக்கும், பத்திரிகை நண்பர்களுக்கும் பாயும், போர்வையும் தந்தார்கள். பத்திரிகை நண்பர்கள் இரு வர், போராட்டம் ஆரம்பத்திலிருந்தே அங்கே முழு நாளும் தங்குவதால் அவர்களுக்குரிய 'கோட்டா' ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தது.

**நேரம் நள்ளிரவு 12 மணி**

நானும் பத்திரிகை நண்பர்களும் நித்திரைக்குத் தயாரானோம். கூடாரத்தினுள் எல்லோரும் நித்திரை. பெண்களும், சிறுவர்களும் மாத்திரமே உறங்குவதற்குப் போதுமானதாக அது இருந்தது.
ஆண்களும், இளைஞர்களுமாக சுமார் பத்துப் பேர், வீதியின் கரையில் படுத்திருந்தார்கள். தார் ஊற்றிய வீதிக்கும் - வாய்க்காலுக்கும் இடைப்பட்ட 4 அடி நீளமான மண்ணிலேயே ஆண்கள் படுத்திருந்தனர். பாயைவிரித்துவிட்டு, தாரில் தலை முட்டாதவாறு பார்த் துக் கொண்டனர். ஒருவர் மாத்தி ரம் விழித்திருந்து காவல் காத்தார். நானும் பத்திரிகை நண்பர்களும் நித்திரைக்குச் சென்றோம்.



**நேரம் இரவு 1.15 மணி**

திடீரென எழுப்பினார்கள். மழை பெய்கின்றது. நான் எழும்புவதற்குள்ளேயே மழையில் போர்வைக்குள் உள்வாங்கப்படாத எனது தலை நனைந்து விட்டது. கூடாரத்துக்குள் ஓடிச் சென்று ஒதுங்கினோம். கூடாரத்துக்குள் படுத்திருந்த பெண்களும், குழந்தைகளும் எழும்பி விட்டார்கள்.
ஒட்டுமொத்தப் பேரும் இப்போது கூடாரத்துக்குள். மழை வெளியில் பலமாகப் பெய்தது. அதை விடக் கொஞ்சம் குறைவாகக் கூடாரத்துக்குள்ளும் பெய்தது. குழந்தைகளின் அழுகைச் சத்தமும், அங்கு நின்றிருந்தவர்களின் அவலச் சத்தமும், அமைதியைக் கெடுத்தன.
தொடர்ந்து மழை பெய்தால் தாக்குப் பிடிக்க முடியாது என்பது அங்கிருந்த எல்லோருக்கும் தெரியும். வீதியில் இருந்து வழிந்துவரும் தண்ணீர் கூடாரத்துக்குள் வருகின்றது. போதாக் குறைக்கு கூடாரத்துக்குள்ளும் ஒழுக்கு வேறு. இயற்கை அந்த மக்களை வஞ்சிக்க விரும்பவில்லைப்போல். 15 நிமிடங்களில் வருண பகவான் வழி விட்டுக் கொடுத்தார்.
ஆண்கள் பழையபடி வீதி அருகே படுத்தனர். பெண்கள் சிறுவர்கள், மழையால் ஒழுகிய தண்ணீருக்கு மேல் கூடாரத்துக்குள் படுத்துக்கொண்டனர்.
மீளவும் கண்மூடி நித்திரைக்குச் சென்ற நேரம், திடீரென விழித்துக் கொண்டேன். தலைக்குமேலால் ஏதோ கூவிக் கொண்டு சென்றது. அந்த முதன்மை வீதியால் 'ஜுப்' ரக வாகனம் ஒன்று சீறிக் கொண்டு சென்றது. நாம் படுத்திருந்த பகுதியை அது வேகமாகக் கடந்ததால் திடுக்கிட்டு எழும்ப வேண்டிய நிலை.



**நேரம் காலை 6 மணி**

நானும், பத்திரிகை நண்பர்களும் அலுப்பை முறித்துக் கொண்டு எழும்பினோம். கூடாரத்தினுள் உறங்கியிருந்தவர்களுள் பாதிப்பேர் ஏற்கனவே எழுந்திருந்தனர். காலைத் தேநீர் வைப்பதற்கான ஆயத்தமும் நடந்து முடிந்திருந்தது. காலைச் சாப்பாடு தயாரிக்க வேண்டாம்என்று அறிவுறுத்தல் கொடுக்கப்பட்டது. வெளியில் இருந்து வரும் என்று தெரிவித்ததாகச் சொன்னார்கள். பெண்கள், ஆண்கள் ஓரிரண்டு பேர் ஒன்றாகக் கூடாரத்திலிருந்து 30 மீற்றர் தூரத்தில் உள்ள பற்றைகளுக்குள் ஒதுங்கினர். காலைக் கடன்கள் அங்குதான். மலசலகூடம் ஒன்று தற்காலிகமாக அங்கு நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. அது முடியும் வரையில் இந்தப் பற்றை மறைப்புக்கள்தான் மலசலகூடம். அதற்கு எதிராக - வீதியின் மறுபக்கத்தில்ஒருகிணறு. அதனைச்சுற்றி மறைப்பு. அங்கேதான் குளியல். இந்த இடரான வாழ்க்கையை 7 வருடங்களுக்கு முன்னரே அனுபவித்த அனுபவம் இருக்கின்றது என்றும் இப்போது சிலர் பேசிக்கொள்கின்றனர்.

**நேரம் காலை 7 மணி**

தேநீர்வழங்கப்பட்டது. அதனுடன்கூடவே பிஸ்கட்டும் வழங்கப்பட்டது. எல்லோரும் எழுந்து விட்டார்கள். பழையபடி தறப்பாளை எடுத்து ஒதுக்கி, கூடாரத்தை ஒழுங்குபடுத்தும் வேலைகள் மும்முரமாக நடந்தன. பிளாஸ்ரிக் கதிரைகள் கூடாரத்தினுள் போடப்பட்டன. நேற்றைய தினம் சாப்பாடு தயாரித்த பாத்திரங்களைக் கழுவித் துப்புரவு செய்யும் வேலை நடந்தது. எந்த வேலையும் யாருக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. அறிவிக்கப்படாத சுழற்சி முறையில் அவர்கள் அவற்றைச் செய்து கொண்டனர்.
சிறுவர்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக விளையாடிக் கொண்டிருந்தனர். 'இங்க நடக்கிறதைப் பார்க்கேக்க 2009 கடைசிச் சண்டைக்குப் பிறகு தங்க வைக்கப்பட்ட நலன்புரி நிலைய ஞாபகம்தான் வருகின்றது' என்றார் ஒருவர்.

**நேரம் காலை 8 மணி**

மீண்டும் கார்மேகம். மழை வரக் கூடாது என்பது அங்கிருந்தவர்களின் பிரார்த்தனையாக இருந்தது. 'லக்பிம' சிங்கள ஊடகத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே வந்தார்கள். பெண் ஊடகவியலாளர் ஒருவரும் அவரது படப்பிடிப்பாளரும் அங்கிருந்த மக்களுடன் பேசத் தொடங்கினர். அந்த ஊடகவியலாளர் தமிழ் மொழியிலும் பரிச்சயம் என்பதால் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களுடன் பேசினார்.
அங்கிருந்தவர்களின் பிரார்த்தனை பொய்யாகியது. மழை மண்ணில் வந்து முத்தமிட்டது. மீண்டும் பழையபடி எல்லோரும் கூடாரத்துக்குள் ஒதுங்கினர். 20 நிமிடங்கள் கொட்டித் தீர்த்தது மழை. குளிப்பதற்குச் சிலர் ஆயத்தமாகினர். ஏனைய சிலர் தமது கடமைகளை முடித்துக் கொண்டு அங்கு வந்து அமர்ந்தனர். "15 நாளில் பிள்ளைகளின்ர பழக்க வழக்கம் மாறிப் போச்சுது. பல்லுத் தீட்ட வருகுதுகள் இல்லை. பல்லுத் தீட்டாமல் சாப்பிடுகுதுகள்" என்று ஒரு குடும்பப் பெண் திட்டுவது காதில் விழுந்தது.





**நேரம் முற்பகல் 9 மணி**

வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் அங்கே வந்தார். போராட்டத்தில் ஈடுபட்டுள்ள 5 பெண்கள் அங்கிருந்து குடிதண்ணீர் கான்களுடன் கால் நடையாகப் புறப்பட்டார்கள். நல்ல தண்ணீர் எடுப்பதற்கு அரைக் கிலோ மீற்றர் செல்ல வேண்டும்.

(மிகுதி நாளை தொடரும்)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழ் அதிகாரிகள் வெட்கி தலை குனிய வேண்டிய விடயம்

**போ**ர் ஓய்ந்தபிறகும் தமிழ் மக்களின் அவலம் நீங்கியபாடில்லை; அதுவும் போரால் பாதிப்புக்குள்ளான தமிழ்ப்பெண்கள் மீதான படையினரின் கொடூரம் ஒருபுறமிருக்க, அரச உதவிகளைப் பெற்றுக் கொள்ள முனையும் பெண்கள், பாலியல் ரீதியில் அதிகாரிகளால் துன்புறுத்தப்படுகிறார்கள். இதில் குடும்ப தலைமைத்துவப் பெண்களே அதிகமாக பாலியல் ரீதியில் இம்சிக் கப்படுகிறார்கள்.

இவ்வாறு மனித உரிமைக்காகப் போராடி வரும் இயக்கங்கள் குற்றஞ்சாட்டி வருவது வழமையாக இருப்பதனால் பலரும் அதனை அசட்டை செய்து வந்துள்ளார்கள். குறிப்பாக அரசுத் தலைவர்களுக்கு படையினர் மீதான குற்றச்சாட்டுக்கள் என்றாலே ஒவ்வாமையாக இருக்கிறது. ஆனால் இப்போது வெளிப்படையாக இதனை கூறியிருப்பவர் வேறுயாரும் அல்லர். இந்த நாட்டின் அரச தலைவராக இரண்டு தடவைகள் பதவி வகித்தவரும், தேசிய ஒற்றுமை மற்றும் இணக்கப் பாட்டுப் பணிமனையின் தலைவராக இப்போது பதவி வகிப்பவருமான சந்திரிகா குமாரணதுங்க அம்மையார் ஆவார்.

இலங்கையிலுள்ள வெளிநாட்டு ஊடகர்கள் மத்தியில் அண்மையில் கருத்துத் தெரிவித்தபோதே அம்மையார் இதனைத் தெரிவித்துள்ளார்.

போர்க்கொடுமையிலிருந்து தப்பித்து உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்ற தமிழ்ப் பெண்கள் படையினரால் மட்டுமல்ல தமது சொந்த இனத்து அதிகாரிகளாலேயே இப்போது பரவலாக பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாகி வருகிறார்கள் என்றார் அவர். இராணுவ ரீதியிலான பாலியல் வன்கொடுமைகளை விரிவாக எடுத்துக் கூறாது போனாலும் 2010 ஆம் ஆண்டு (போர் முடிந்த அடுத்த வருடம்) இளம் தமிழ்த்தாய் ஒருவர் இராணுவத்தினரின் கூட்டு வன்கொடுமைக்கு ஆளாகியதையும் 25 வருட காலம் அவர்களுக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டமையையும் சந்திரிகா சுட்டிக் காட்டியுள்ளார்.

போருக்குப் பின்னர் நிகழ்ந்திருந்த கொடுமை இதுவென்றால் போரின் இறுதிக் கட்டத்தில் எவ்வாறெல்லாம் தமிழ்ப்பெண்கள் படையினரின் வன்கொடுமைக்காளாகியிருப்பார்கள்என்று எண்ணிப் பார்க்கவும் முடியாது. அதுவும் பெண் போராளிகளாகவும் இயக்க அலுவலர்களாகவும் செயற்பட்டிருந்த தமிழ் இளம் பெண்களின் கதி எவ்வாறு இருந்திருக்கும்? புலிகளின் ஊடகப் பணியாளராக இருந்த இசைப்பிரியா என்ற இளம் தமிழ்ப் பெண் எவ்வாறு துன்புறுத்தல்களுக்கு உள்ளாகியிருந்தார் என்பதைக் கெலும் மக்ரேயின் சனல் – 4 என்ற ஆவணப் படத்தில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால், அரசு தரப்பிலும் அதிகாரிகள் மட்டத்திலும் இதுவும் இவைபோன்றவையும் பொய்யானவை என்று விசாரணையின்றியே புறந்தள்ளப்பட்டு விட்டன. ஆனால், இவையும் இவைபோன்ற சாட்சியங்களும் புறந்தள்ளப்படாமல் விசாரிக்கப்பட்டு உண்மைகள் நிலை நாட்டப்பட வேண்டும். அதற்காகவே விசாரணைப் பொறிமுறையில் பன்னாட்டு நீதிபதிகளின் பங்களிப்பு இருக்க வேண்டும் என்ற கோரிக்கை தமிழ்த் தரப்பினரால் வலியுறுத்தப்படுகின்றது.

சந்திரிகா அம்மையாரின் கருத்தில் வெளியாகியுள்ள இன்னுமொரு விடயம், அரச உதவி கேட்டு முன்வரும் போரால் பாதிக்கப்பட்ட குடும்பத் தலைமைத்துவப் பெண்களிடம் அதிகாரிகள் அதுவும் தமிழ் அதிகாரிகளே பாலியல் லஞ்சம் கேட்டு துன்புறுத்தல் புரிகிறார்கள் என்பதாகும். இதில் உண்மை இருக்காதென்று சொல்லி மழுப்பிவிட முடியாது. மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தமை போல் இவர்கள் நடந்து கொள்வார்களானால் அது தமிழ் அதிகாரிகள் தொடர்பில் வெட்கித் தலைகுனிய வேண்டிய விடயமாகும். ஓர் ஆவணத்தில் கையெழுத்து வாங்குவதானாலும் இந்த நடைமுறையில் இராணுவ அதிகாரிகள் முதல் வெவ்வேறு நிலை அதிகாரிகளிடமும் கிராம அலுவலகர் ஈறாக இவர்கள் செல்ல வேண்டியிருக்கிறது. இந்த நடைமுறையில் பெருமளவு பாலியல் துன்புறுத்தல்கள் இடம்பெறுகின்றன என்கிறார் அவர்.

பாதிக்கப்பட்டுள்ள பெண்களுக்கு வாழ்வாதாரம் வழங்கப்பட்டு அவர்கள் பலமுள்ளவர்களாக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் பாதுகாப்பாக இருப்பதாக உணர்வார்கள். வன்கொடுமைகளில் இருந்தும் தப்ப முடியும் என்பது அவர் நம்பிக்கை.

போரால் உறவுகளை, குடும்பத் தலைவர்களை இழந்துள்ள பெண்களுக்கு அதிகாரிகள் தம் உறவினர்கள் போல் நேசத்துடன் சகல உதவிகளையும் வழங்கவேண்டும். அவர்களை பாலியல் கொடுமைக்கு ஆ பிடித்து மனித உரிமை ஆணையம் போன்ற அதிகார அமைப்புக்களுடன் தகவல் வழங்கி நடவடிக்கை எடுப்பது அவசியம். இப்படியான புல்லுருவிகளாலேயே தமிழ்ச்சமூகம் சீர்குலைந்து நிற்கின்றது.

# அரசமைப்புக்கான 13ஆவது திருத்தம் இனப்பிரச்சினைக்கு தீர்வாகமாட்டாது

■ கந்தப்பு பரமேஸ்வரன்



13 ஆவது அரசமைப்புச் சீர்திருத்தம், இலங்கையில் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக முன்வைக்கப்பட்ட அதிகாரப் பகிர்வு சார்ந்த ஒரு நடவடிக்கையாகும். இது 1987 இல் ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும், இந்தியத் தலைமை அமைச்சர் ராஜீவ் காந்திக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம், இலங்கை அரசமைப்பில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் ரீதியான தந்திரோபாய நடவடிக்கையாகும். ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு தற்போது 30 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் எதிர்நோக்கப்படும் சவால்களில் அரசமைப்பு ரீதியான பிரச்சினைகள் முக்கியமானதாகும். 1948 இல் ஒற்றையாட்சி நாடாகவே இலங்கை சுதந்திரம் பெற்றது. 1972 இல் உருவாக்கப்பட்ட முதலாவது குடியரசு அரசமைப்பில், ஒற்றையாட்சி என்ற சரத்து சேர்க்கப்பட்டிருந்தது. இன்றுவரை பல்வேறு அரசமைப்புச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் ஒற் றையாட்சி எனும் பதம் அதே கட்டமைப்பிலேயே இருக்கிறது. இந்த 13 ஆவது அரசமைப்புத் திருத்தமும், ஒற்றையாட்சிக் கட்டமைப்பின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டதாகும். முழுமையான ஒற்றையாட்சிக் கட்ட மைப்பை, பல்லின சமூகங்கள், இனங்களைக் கொண்ட உலக நாடுகளில் காணமுடியாது. குறிப்பாக இஸ்ரேல், ஜப்பான் நாடுகளில் ஒற்றையாட்சி காணப்படுகின்ற போதிலும், உச்ச அளவிலான அதிகாரப் பகிர்வு நடைமுறை காணப்படுவதனால், இந்த நாடுகளில் அனைத்து இன மக்களினது வேணவாக்களும் நிறைவேற்றப்படுகிறது.

ஒற்றையாட்சி நாடாகிய ஐக்கிய இராச்சியம், 1988 இல் அதிகாரப் பகிர்வுச் செயன்முறையை செயற்படுத்தியது. அதுவே இன்று கூட்டாட்சி முறையை நோக்கிச் செல்லும் மாற்றத்தைப் பெற்றுள்ளது.

### சிங்கள ஆட்சியாளர்களால் புறந்தள்ளப்பட்ட தமிழ்த் தலைவர்களது கோரிக்கைகள்

இலங்கையில் நாம் ஒற்றையாட்சி, கூட்டாட்சி எனும் எண்ணக் கருக்களை இனங்களது உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டே புரிந்து வைத்திருக்கின்றோம். தென்னிலங்கையில் ஆட்சியிலிருக்கும் முதன்மைக் கட்சிகளும் சரி, ஏனைய கட்சிகளும் சரி, ஒற்றையாட்சியின் கீழ் இலங்கை இருப்பதையே விரும்புகின்றன. இதனை நாடு சுதந்திரமடைந்த காலத்திலிருந்து காணமுடிகின்றது. பிரித்தானிய காலனித்துவ ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெறுவதற்காக அன்று சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் இனங்கள் ஒன்றிணைந்து போராடியதன் பயனாக இலங்கை சுதந்திர நாடாக ஆனதை, பெரும்பான்மை இன ஆட்சியாளர்கள் மறந்துவிடவோ மறைத்து விடவோ முடியாது. இலங்கையில் சிறுபான்மை இனங்களினது அரசியல் வேணவாக்களை நிறைவு செய்யக்கூடிய வகையில் அரசமைப்புச் சீர்திருத்தம் காணப்படாத காரணத்தினால், மூன்று பத்து ஆண்டு காலப் போர் நாட்டின் அனைத்து இனங்களையும் பாதித்தது.

தமிழ் மக்களது அரசியல் வேணவாக்கள் குறித்து பல்வேறு கால கட்டங்களில் தமிழ்த் தலைவர்கள் கருத்துக்களை முன்வைத்து வந்தபோதிலும், தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் அவற்றை நிராகரித்திருந்தனர்.

குறிப்பாக சோல்பரி ஆணைக் குழு கருத்துக்களைக் கோரிய சந்தர்ப்பத்தில், தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி பொன்னம்பலம், சிங்களப் பெரும்பான்மைக் கட்டமைப்புக்குள், சிறுபான்மையினரின் கோரிக்கைகள், வேணவாக்கள் நிறைவேற்றப்படமாட்டாது என்பதனாலேயே ஐம்பதுக்கு ஐம்பது எனும் கோரிக்கையை முன்வைத்தார். அதாவது சட்டசபையின் பிரதிநிதித்துவத்தில் 50 சதவீதம் சிங்களவரும் 50 சதவீதம் இதர இனங்களிலிருந்தும் அமைய வேண்டும் என்பதாகும். இதனைத் தொடர்ந்து 1949 இல் தந்தை செல்வநாயகம் கூட்டாட்சி முறையை இலங்கைக்கு முன்மொழிந்தார். 1972 வரையும் இந்தக் கோரிக்கை சிங்கள அரசுகளால் பரிசீலிக்கப்படவில்லை. இவை மறுக்கப்பட்ட பின்னணியிலேயே, 1974ஆம் ஆண்டு தமிழ்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து வட்டுக்கோட்டையில் தனித் தமிழீழம் எனும் கொள்கைப் பிரகடனத்தை வெளியிட்டனர். இதன் பின்னணியில் இனரீதியான முரண்பாடுகள் வலுப்பெற்று ஈற்றில் இனம் சார்ந்த போராக அது தலையெடுத்தது. 1980களில் இலங்கை அரச தரப்பும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஆரம்பித்த தமிழ் விடுதலை இயக்கங்கள் பலவும் கெரில்லா முறையிலமைந்த போராட்டத்தில் ஈடுபட்டிருந்தன. தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து ஆரம்பிக்கப்பட்ட போராட்டம், 1990களில் மரபு வழியான படைக்கட்டமைப்பைக் கொண்ட, முப்படைகளைக் கொண்ட இராணுவ கட்டமைப்பாக விடுதலைப் புலிகள் எழுச்சி பெற்றிருந்தனர். இதன் பின்னணியில் உலகநாடுகள் பலவும் மறைமுக அங்கீகாரத்தை வழங்கியிருந்தன. இதன் ஒருவடிவமே பன்னாட்டுஅனுசரணையுடனான பேச்சுவார்த்தையில் அரச தரப்பையும் விடுதலைப் புலிகள் அமைப்பையும் உள்ளடக்கிய திம்பு முதல் ஒஸ்லோ வரையான சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆகும். சமாதானப் பேச்சுக்களும், போர் முனைப்புக்களும் மாறி மாறி இலங்கைத் தீவை வலம் வந்தன. இதற்கான பிரதான காரணம், சிறுபான்மையினங்களுக்கான அரசியல் உரிமைகள் வழங்கப்படுவதைப் பேரினவாத ஆட்சியாளர்கள் விரும்பவில்லை. காலப்போக்கில் உலகியல் பூகோள அரசியல் மாற்றத்தின் காரணமாக, தமிழர்களின் போராட்டம் பயங்கரவாதம் எனும் முத்திரை பதிக்கப்பட்டு ஈற்றில் இலங்கை அரசுக்குப் பல பன்னாட்டு நாடுகளின் ஒத்துழைப்புடன் இறுதிப் போர், 2009ஆம் ஆண்டு இடம்பெற்று தமிழர்களின் எதிர்பார்ப்புக்கள் நசுக்கப்பட்டு விட்டன.

(அரிசியில் மட்டுமல்ல, அத்தியாவசியப் பொருள்கள் அனைத்தும் கடைக்குக்கடை வெவ்வேறுபட்ட விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. இதனால், அன்றாடம் நாட்கூலிக்கு வேலைக்குச் சென்று உழைத்து வரும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட மக்கள்தான் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.)



# எதற்கும் மனமிருந்தால் இடமுண்டு

எஸ்.மல்லிகா

உலகிலுள்ள அனைத்துச்உயிரினங்களுக்கும் பொதுவான ஒன்று- பசி. அதிலும், ஏழை மக்களின் பசி அதி கனதி வாய்ந்தது. வறுமையில் கிடந்துழலும் இந்த மக்களின் ஒருநாள் வாழ்க்கை கழிவதென்பதே பெரிய விடயம். ஆனால், இவர்களின் வயிற்றில் அடித்து இலாபம் சம்பாதிக்கின்றனர் அரிசி வியாபாரிகள்.

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கப் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் அடிப்படையில், அரிசி விற்பனை தொடர்பில் கட்டுப்பாட்டு விலைகள் அரசினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில், சம்பா அரிசி கிலோ 80 ரூபா, நாட்டு அரிசி 72 ரூபா, பச்சை அரிசி 70 ரூபா என விலைகள் நிர்ணயிக்கப்பட்டன. இந்தக் கட்டுப்பாட்டு விலைகள் கடந்த புதன்கிழமை முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. ஆனால், யாழ். மாவட்டத்திலுள்ள மொத்த மற்றும் சில்லறை அரிசி வியாபாரிகளில் 99 வீதமானோர் குறித்த கட்டுப்பாட்டு விலைகளுக்கு அரிசி விற்பனை மேற்கொள்வதில்லை.

### அரசு நிர்ணயித்த விலைக்கு அரிசி வாங்கிட இயலவில்லை

யாழ். மொத்த மற்றும் சில்லறை வியாபாரிகள் அனைவரும் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அரிசியை விற்பனை செய்ய வேண்டும். இதனை மீறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மாவட்டப் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை விற்பனையாளருக்கு எச்சரிக்கை விடுத்தது. அத்துடன், இது தொடர்பில் கவனம் செலுத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்யுமாறும் பொதுமக்களைச் அதிகார சபை அறிவுறுத்தியிருந்தது. ஆனால், வியாபாரிகள் இந்தச் சட்டதிட்டங்களை அனுசரித்துச் செயற்படவில்லை. பழைய விலையிலேயே அரிசியை விற்பனை செய்கின்றனர்.

இந்த நிலையில், அரிசி வாங்குவதற்காக முதியவர் ஒருவர் பலசரக்குக் கடைக்குச் சென்றுள்ளார். அந்தக் கடையில் விலைப்பட்டியல் இல்லை. ஆதலால், ஒரு கிலோ நாட்டு அரிசியின் விலையைக் கடைக்காரரிடம் அவர் கேட்டதும், 105 ரூபா என்றார் கடைக்காரர். விலையைக் கேட்டுத் திகைத்துப் போன முதியவர், “அரிசி விலையை அரசு குறைச்சிருக்கெல்லோ தம்பி. பேப்பரிலையும் றேடியோவிலையும் விலை நிர்ணயத்தை அறிவிச்சபடி இருக்கினம். ஆனால், நீரோ 105 ரூபா என்று சொல்லுகிறீர்? நாங்கள் ஏழையள். ஆரிட்டை இதைப் பற்றிச் சொல்லுறது?" என்று கோபத்துடன் கூறியபடி கடையிலிருந்து வெளியே வந்தார். அவரிடம் நடந்ததைக் கேட்டறிந்துவிட்டு, சம்பந்தப்பட்ட கடைக்காரரிடம் விசாரித்தபோது, நாங்கள் கொள்வனவு செய்த விலை 95 ரூபா. ஏற்றி இறக்கிய கூலி என அனைத்தையும் வைத்து 105 ரூபா விற்கிறோம். உடனே விலைக் குறைப்புச் செய்தால், எங்களுக்கு இழப்பீடு தருவது யார்? என்றார் கடைக்காரர்.

### அரசின் விலைக்குறைப்பு புறந்தள்ளப்பட்டதால் பாவனையாளர்கள் விரக்தி நிலையில்

“பொருள்களின் விலையை அரசு கூட்டினால் அறிவித்தல் வந்த மறு நொடியே அதிகரிக்கிறீர்கள். ஆனால், குறையுங்கோ என்று சொன்னால் மட்டும் ஏன் கேட்கிறீர்கள் இல்லை? உங்கடை பிரச்சினை தொடர்பில் வர்த்தக அதிகார சபையிடமோ அல்லது பாவனையாளர் சங்கத்திடமோ கதையுங்கோ. அநியாயத்துக்கு விலையைக் கூட்டி வித்து, எங்கடை வயித்திலை அடிக்காதையுங்கோ" என்று குமுறினார் அருகில் நின்ற இன்னொரு முதியவர். அவரது தோற்றத்தைப் பார்த்தவுடனேயே புரிந்தது அவர் ஒரு பரம ஏழை என்று. ஒரு கிலோ அரிசி வாங்குவதற்கென 75 ரூபா கையில் வைத்திருந்தார். ஒரு கிலோ அரிசியின் விலை 105 ரூபா என்று கடைக்காரர் சொன்னதும், அரிசி வாங்காது திரும்பிவிட்டார்.

இவ்வாறு அரிசி விலை விடயத்தில் ஏழை மக்கள் மட்டுமல்ல, நடுத்தர மற்றும் பணக்காரர்கள் கூட அதிருப்தி வெளியிட்டுள்ளனர். விலைக்குறைப்புச் செய்த பின்னரும் வியாபாரிகள் அதிக விலையில் அரிசி விற்பனை செய்கின்றனர். ஆனால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ கண்டும் காணாமலும் இருக்கின்றனர். வியாபார நிலையங்களைத் திடீர்ச் சுற்றிவளைப்புச் செய்து, பொதுமக்களிடம் விசாரணை மேற்கொண்டு, அதிக விலையில் அரிசியை விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கலாம் தானே என்று அவர்கள் ஆதங்கப்படுகின்றனர்.


இதேபோன்று ஆயிரக்கணக்கான வியாபாரிகள் தத்தமக்கு இசைந்த விலையில் அரிசியை விற்பனை செய்துகொண்டிருக்கின்றனர். இவர்கள் தமது கடைகளில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்துவதுமில்லை.

இதிலும், கிராமங்களிலுள்ள சில்லறை விற்பனைக் கடைகளில் மக்கள் கொள்வனவு செய்யும் பொருள் களின் நிறையிலும் மாற்றங்கள் (நிறை குறைவு) உள்ளதாகப் பொதுமக்கள் கூறுகின்றனர். இது தொடர்பில் வர்த்தக சங்கத்துக்கு முறைப்பாடு செய்தபோது, சிறிய பெட்டிக் கடைகள்தானே என்று அவர்கள் அலட்சியம் செய்துவிட்டு இருப்பதாகவும் அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு அரிசி மட்டுமல்ல, அத்தியாவசியப் பொருள்கள் அனைத்தும் கடைக்குக் கடை வெவ்வேறுபட்ட விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. ஒரு கிலோ சீனியின் கட்டுப்பாட்டு விலை 93 ரூபா என அரசு அறிவித்துள்ளது. ஆனால், 110, 120 ரூபா என ஒரு கிலோ சீனியை இந்த உள்ளூர்ப் பெட்டிக் கடைகளில் விற்பனை செய்கின்றனர். பருப்பு முதலான பொருள்களின் விற்பனையிலும் இதே நிலைதான். இதனால், அன்றாடம் நாட்கூலிக்கு வேலைக்குச் சென்று உழைத்து வரும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மக்கள்தான் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். உழைக்கும் பணம் முழுவதுமே பொருள்கள் வாங்கப் போதாத நிலையில், கடன் வாங்கும் நிலைக்கு இவர்கள் தள்ளப்படுகின்றனர்.

இதேவேளை, அரசினால் அறிவிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலைகளில் பொருள்களைச் சந்தையில் கொள்வனவு செய்ய முடிவதில்லை. இதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய அமைப்புச் சுட்டிக்காட்டியுள்ளது. ஆனால், அரசு இத்தகைய வியாபாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை. மெத்தனப் போக்குக் காட்டுகின்றது. இதனால் ஏழை மக்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

தனி ஒருவனுக்கு உணவில்லை எனில், சகத்தினை (உலகம்) அழித்திடுவோம் என்று பாடினான் பாரதி. ஆனால், இன்று எத்தனையோ ஏழை மக்கள் பசிக் கொடுமையினால் நொந்து நூலாகுகின்றனர். இந்த ஏழைகள் நிலையைக் கருத்திற் கொண்டாவது, அரிசி மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு விலைக் குறைப்புச் செய்து உதவக் கூடாதா? இது குறித்து அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா? அரசின் அத்தகைய நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வர்த்தகர்கள் செயற்பட முன்வருவார்களா? எதற்கும் மனமிருந்தால் இடமுண்டு.



## வாசகர் திருமுகம்

### டெங்கு நோய் ஆபத்து வீட்டுக் கதவைத் தட்டும் வரை வாளாவிருக்காதீர்!

சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம்; அடிக்கு மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்; ஆட்டைக்கடித்து மாட்டைக்கடித்து கடைசியில் மனிதரைக் கடித்ததாம் புலி என்பவையெல்லாம் முன்னெச்சரிக்கை, சலியாத இடைவிடாத முயற்சி என்பனவற்றை வலியுறுத்த அமைந்த பயனுள்ள முதுமொழிகள்.

நாடு சுதந்திரமடைந்ததைத் தொடர்ந்து ஐம்பதுகள், அறுபதுகளில் யாழ். குடாநாட்டு மக்களை வன்னிப் பிரதேசத்தில் குடியமர்த்த தமிழ் அரசியல் தலைமைகள் ஆர்வங்காட்டிச் செயற்பட்ட போதிலும், யாழ்.குடாநாட்டு மக்களை வன்னிப்பகுதியில் குடியேறவிடாது கிலிகொள்ளச் செய்த மலேரியா நோயை முற்று முழுதாக முழு நாட்டிலிருந்தே ஒழித்துக் கட்ட முடிந்தமைக்குக் காரணம், மலேரியாவின் பயங்கரத் தன்மை குறித்த அச்சமும், அதன் தாக்கம் குறித்த பொதுமக்களது விழிப்புணர்வுமே. அத்தகையதொரு பயங்கர அச்சநிலை, வன்னிப்பிராந்தியத்தைத் தாண்டி யாழ். குடாநாட்டையும் அண்மைக்காலமாக தீவிரமான விதத்தில் அச்சுறுத்தி வருகிறது. அந்த அச்சம் நியாயமான ஒன்றே என்பதை மிக அண்மைய நாள்களாக யாழ்.குடாநாட்டுப் பொதுமக்கள் மத்தியில் வெகு வேகமாகத் தனது சுயரூபத்தைக் காட்டிவரும் டெங்குநோய் நிரூபித்து வருகின்றது. அநியாயச் சாவுகளையும் ஏற்படுத்த ஆரம்பித்துள்ளது. இது விடயத்தில் சுகாதாரத் துறை முடிந்த வரையான, தீவிர தடுப்பு முயற்சிகளை–வருமுன் காக்கும் நோக்கிலான டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை- முன்னெடுத்து வருவதைப் பாராட்டியே ஆகவேண்டும். ஆனால் பொதுமக்களாகிய நாம் டெங்குநோய் ஆபத்து எமது வீட்டுக் கதவுகளைத் தட்டும் வரை நாம் ஏன் கவலைப்பட வேண்டும் என்ற போக்கில் உண்டு, குடித்து, உறங்கி வருகிறோம் என்பது மனதை நெருடுகிறது. இந்த விடயத்தில் பொதுசன ஊடகங்களின் பங்கு குறிப்பாகப் பத்திரிகை ஊடகங்களின் பங்களிப்பு மிக முக்கியமானது; அவசியம் தேவைப்படும் ஒன்று. ஒட்டுமொத்த வடபகுதி மக்களுக்கும் அபாய அறிவிப்பு விடுத்து, டெங்கு நோய்த் தாக்கம் பரவாது கட்டுப்படுத்த சுற்றுச்சூழல் சுகாதாரப் பாதுகாப்புக் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வூட்டிச் செயற்பட வைப்பிக்கும் பெரும் பொறுப்பு பத்திரிகை ஊடகங்களைச் சார்ந்ததே. இது குறித்த அறிவுறுத்தல்களைத் தொடர்ச்சியாகப் பலதடவைகள் விடுத்துள்ளோமே எனக் கருதாமல், இத்தகைய பொதுமக்களை அறிவுறுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிக்கு மீண்டும் மீண்டும் முக்கியத்துவம் வழங்கி பத்திரிகை ஊடகங்கள் செயலாற்ற வேண் டியது இன்றைய காலத்தின் மிக முக்கிய தேவை. உதயனிடமிருந்து இதற்காக ஒத்துழைப்புக் கிட்டும் என்பது எமது நம்பிக்கை.

*நாவற்குழி வாழ்இளைஞர்கள்*

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** சிறு செயலும் கூட கடினமாக தோன்றும். உறவினரின் கருத்தை விமர்சிக்க வேண்டாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற விடா முயற்சி தேவைப்படும். லாபம் சுமாராக இருக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**இடபம்:** மனதில் உற்சாகம் அதிகரிக்கும். பணிகளை பொறுப்புணர்வுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். லாபம் அதிகரிக்கும். பெண்கள ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**மிதுனம்:** கருணைமிக்கவராக விளங்குவீர்கள். அவமதித்து பேசியவரும் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் வியத்தகு முன்னேற்றம் உண்டாகும். ஆதாயம் உயரும். பிள்ளைகள் விரும்பியதை வாங்கித் தருவீர்கள்.

**கடகம்:** மனதில் குழப்பம் ஏற்பட்டு மறையும். முக்கியமான செயல் நிறைவேற தாமதமாகலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்க நேரிடும்.

**சிங்கம்:** உங்களைக் குறை சொல்ல சிலர் காத்திருப்பர். நிதானமுடன் பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். உடல் நிலை சீராக இருக்கும்.

**கன்னி:** ஆன்மிக சிந்தனையுடன் செயற்படுவீர்கள். எதிர்மறையாக இருந்த செயல்கூட நன்மையாக மாறும். உழைப்பினால் தொழில், வியாபாரத்தில் லாபம் காண்பீர்கள். கொடுக்கல், வாங்கல் சீராகும்.

**துலாம்:** வேண்டாத நபரை பொது இடத்தில் சந்திக்க நேரிடலாம். தொழில், வியாபாரம் செழிக்க விடாமுயற்சியுடன் பணிபுரிவது அவசியம். லாபம் சுமார். உடல்நலனில் அக்கறை தேவை.

**விருச்சிகம்:** புதிய நண்பர்கள் உங்களிடம் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் லாபம் பன்மடங்கு அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை பெற்று மகிழ்வர். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**தனுசு:** எதிர்பார்த்த பணி நிறைவேற்றுவதில் தாமதம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். வெளியூர் பயணத்தை, பயனறிந்து மேற்கொள்வது நல்லது.

**மகரம்:** மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். தொழில்,வியாபாரத்தில் அபரிமிதமான முன்னேற்றம் ஏற்படும். ஆதாயம் உயரும். பணியாளர்கள், நிர்வாகத்தினர் மத்தியில் செல்வாக்குடன் திகழ்வர்.

**கும்பம்:** மகிழ்ச்சியான மனநிலையில் செயற்படுவீர்கள். தொழில்,வியாபாரத்தில் எதிர் பார்த்த வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் சலுகை பெற்று மகிழ்வர். மாணவர்கள் கல்வி வளர்ச்சி காண்பர்.

**மீனம்:** வெற்றி மனப்பான்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் லாபம் படிப்படியாக உயரும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள், தாய்வீட்டினரின் அன்பை பெறுவர்.

# கேரளாவில் நடிகை பாவனாவை, காரில் கடத்தி பாலியல் தொல்லை



நடிகை பாவனாவை மர்ம கும்பல் காருடன் கடத்திச் சென்று பாலியல் தொல்லை கொடுத்ததோடு, அவரை மிரட்டவும் செய்த சம்பவம் கேரளாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

தென்னிந்திய திரையுலகில் முன்னணி நடிகையாக வலம் வருபவர் பாவனா. இவர் தமிழில் தீபாவளி, சித்திரம் பேசுதடி, அசல், ஜெயம் கொண்டான் உட்பட பல படங்களில் நடித்துள்ளார். மலையாளத்திலும் ஏராளமான படங்களில் நடித்து வருகிறார். தற்போது இவர், நடித்து வரும் ஒரு படத்தின் படப்பிடிப்பு திருச்சூர் அருகே நடந்து வருகிறது. இதில் பங்கேற்று விட்டு நடிகை பாவனா கடந்த வெள்ளிக்கிழமை இரவு காரில் திருச்சூரில் இருந்து கொச்சிக்கு திரும்பிக் கொண்டிருந்தார்.

கார் கொச்சியை அடுத்த அங்கமாலி அருகே சென்றபோது, இன்னொரு காரில் வந்த கும்பல் திடீரென பாவனாவின் காரை வழி மறித்தனர். அவர்கள் பாவனாவை மிரட்டி காருக்குள் ஏற்றிக்கொண்டனர். பின்னர் கார்ச் சாரதியை மிரட்டி பாவனாவின் காரை தொடர்ந்து ஓட்டும்படி எச்சரித்தனர். அவர், காரை ஓட்டத் தொடங்கியதும் அந்த கும்பல் பாவனாவை மிரட்டியதோடு, அவருக்கு பாலியல் தொல்லையும் கொடுத்தனர். இதை அந்த கும்பல் செல்போனில் படம் எடுத்து கொண்டனர். அவர்களிடமிருந்து தப்பிக்க நடிகை பாவனா போராடினார். மேலும் செல்போன் மூலம் நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு தகவல் கொடுக்க முயன்றார்.

இதற்குள் கார் கொச்சியை நெருங்கியது. பாலாரி வட்டம் சந்திப்பை அடைந்தபோது, அந்த கும்பல் காரை நிறுத்தி கீழே இறங்கிக் கொண்டனர். பின்னர் அவர்கள், இன்னொரு காரில் ஏறி தப்பிச் சென்றனர். மர்மக் கும்பலின் நடவடிக்கையால் அதிர்ச்சியில் உறைந்து போன நடிகை பாவனா, கொச்சி பகுதியில் வசித்து வரும் ஓர் இயக்குநரின் வீட்டுக்குச் சென்றார்.

அவரிடம் மர்ம கும்பலால் காரில் கடத்தப்பட்ட தகவலையும், தனக்கு நேர்ந்த கொடுமையையும் கூறி அழுதார். அவர் உடனே இதுபற்றி பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தார். பொலிஸாரின் விசாரணையில், நடிகை பாவனாவின் கார் சாரதி மார்ட்டீன் மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளது. பாவனா கடத்தப்பட்டதற்கு காரணம் என்ன? முன் விரோதத்தில் இந்த சம்பவம் நடந்ததா? இதற்கு முன்பு பாவனாவிடம் சாரதியாக வேலை பார்த்தவருக்கு இச்சம்பவத்தில் தொடர்பு உண்டா? என்ற கோணத்திலும் விசாரணை நடந்து வருகிறது. இந்த விசாரணையில் நேற்று கார்ச்சாரதி உட்ட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வாழ்க்கையில கஷ்டம் வரும் போதெல்லாம் மேலே இருக்கிறவன் பார்ப்பான்... மேலே இருக்கிறவன் பார்ப்பான் என்று நினைச்சா...



அவன் பார்த்துக்கிட்டு மட்டும்தான் இருக்கான்... என்னத்த சொல்ல

வடைக் கடையில ஒரு தட்டு நிறைய சூடான வடை இருந்திச்சி. வடை எவ்வளவு என்று கேட்டேன்? ஐந்து ரூபா என்றான். இன்னொரு வடையை எடுத்து இது எவ்வளவு என்டன்...
பாப்பா தட்டில உள்ள எல்லா வடையும் ஐந்து ரூபாதான்...



ஐந்து ரூபாய் கொடுத்துட்டு தட்டில உள்ள எல்லா வடையையும் எடுத்தா... கிறுக்கன் அடிக்க வாறான்...

ஒருவர்: அவர் திடீர் பணக்காரர் ஆன பிறகும் கூட ஆள் மாறவே இல்லையங்க!
மற்றொருவர்: அப்படியா, பரவாயில்லையே ..!
ஒருவர்: அட நீங்கவேற.. அவர் எனக்கு தர வேண்டிய நூறு ரூபாய் கடனை இன்னும் திருப்பி தரவேயில்லை என்று சொல்லவந்தேன்.



கோழிக் குஞ்சு தாயிடம் கேட்டது...
"மனிதர்கள் தங்கள் குழந்தைகள் பிறந்ததும் பெயர் வைக்கிறார்கள். நமக்கு ஏன் பெயர் வைப்பதில்லை" அதற்கு கோழி சொன்னதாம்
"நாம் இறந்த பின் பெயர் வைப்பார்கள்,
சிக்கன் 65
சிக்கன் ஃபிரை,
சில்லி சிக்கன்,
சிக்கன் குருமா,
சிக்கன் கறி, என்று....

## சுடோக்கு எண் விளையாட்டு

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | 4 | 6 | 8 | 7 | 2 | 3 | 1 |
| 1 | 6 | 8 | 3 | 2 | 5 | 9 | 7 | 4 |
| 3 | 2 | 7 | 9 | 4 | 1 | 5 | 6 | 8 |
| 6 | 4 | 3 | 8 | 7 | 9 | 1 | 5 | 2 |
| 7 | 9 | 2 | 1 | 5 | 4 | 3 | 8 | 6 |
| 5 | 8 | 1 | 2 | 6 | 3 | 7 | 4 | 9 |
| 2 | 7 | 9 | 4 | 3 | 8 | 6 | 1 | 5 |
| 4 | 1 | 5 | 7 | 9 | 6 | 8 | 2 | 3 |
| 8 | 3 | 6 | 5 | 1 | 2 | 4 | 9 | 7 |


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | 4 | | 9 | | | | |
| | 9 | | | | 2 | | 5 | 7 |
| | | | 8 | | | 2 | | |
| | | 9 | | | 4 | | | 2 |
| 6 | | 8 | | | 1 | | 3 | |
| | | | 9 | | | | | |
| 4 | 8 | | | 1 | | | | 6 |
| | 7 | 2 | | | | | | 8 |
| 9 | | 1 | | 5 | 8 | | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண் டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



கண்ணீரும் கவலையும்
நம்மை கொன்றுவிடும்
நம்பிக்கை மட்டுமே
நம்மை வாழவைக்கும்

# 2017 பெப்ரவரி மாத பலன்



## மீனம்

நீதி, நேர்மை, உண்மை என்று எப்போதும் பாடுபடும் மீன ராசியினரே! நீங்கள் எதிர்ப்புக்களை எளிதில் வெல்லுவீர்கள். இந்தக் காலகட்டத்தில் ராசியாதிபதி குரு அஷ்டம ஸ்தானத்தில் மறைந்திருந்தாலும் ராசியில் செவ்வாய் சுக்கிரன் சஞ்சாரம் இருப்பதால் எந்தவொரு சின்ன விடயம்கூட லாபமாக நடந்து முடியும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும் அதனால் கௌரவம் உண்டாகும். பூமி, வாகனம் மூலம் ஆதாயம் உண்டாகும். பணவரத்து கூடும். தொழில் ஸ்தானாதிபதியும் ராசிநாதனுமான குருவும் தைரிய அஷ்டமாதிபதியுமான சுக்கிரனும் பரிவர்த்தனை பெற்றிருக்கிறார்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட கூடுதல் லாபம் கிடைக்கும். வங்கியில் இருப்பு கூடும். வாங்கிய கடனை திருப்பிச் செலுத்தி மன நிம்மதி அடைவீர்கள். தொழில் தொடர்பான பயணங்களில் வெற்றி கிடைக்கும். செயல் திறமை மூலம் கடினமான பணியையும் சிறப்பாகச் செய்து முடித்து மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கப் பெறுவீர்கள். அதிகாரம் செய்யும் பதவிகள் தேடிவரும். குடும்பாதிபதி செவ்வாய் ராசியில் சஞ்சரிப்பதால் குடும்பத்தில் மகிழ்ச்சியும், அமைதியும் உண்டாகும். சுபகாரியம் நடக்கும். திருமண முயற்சி மேற் கொண்டவர்களுக்கு சாதகமான பலன் கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே சந்தோசம் நிலவும். கஷ்டமில்லா சுக வாழ்க்கை இருக்கும். உறவினர்கள் நண்பர்கள் ஆதரவும் கிடைக்கும். நெடுநாளைய சங்கடம் தீரும். பெண்களுக்கு எல்லாவற்றிலும் லாபம் கிடைக்கும். மரியாதை அந்தஸ்து கூடும். எதிர்ப்புகள் விலகும். மன மகிழ்ச்சி உண்டாகும்.

கலைத்துறையினர் வாக்கு வன்மையால் சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகலாம். புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள். பயணங்கள் செல்ல நேரலாம். புத்தி சாதுரியத்தால் மேல் அதிகாரிகள் கொடுத்த வேலையை சிறப்பாக செய்து முடிப்பார்கள். அரசியல்துறையினருக்கு இருந்த குழப்பம் நீங்கும். மனவருத்தம் நீங்கும். தேவையான பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். எதிலும் கவனமாக இருப்பது நல்லது. வெளியூர் பயணங்கள் மனதிற்கு மகிழ்ச்சி தரும். கவலை வேண்டாம். கடன் விவகாரங்களில் யோசித்து செயற்படுவது நல்லது. மாணவர்கள் கல்வியில் கூடுதல் மதிப்பெண் கிடைக்க எடுக்கும் முயற்சிகளில் சாதக மான பலன் கிடைக்கும். ஆசிரியர்களின் பாராட்டும் கிடைக்கும்.

**பரிகாரம்:**
குல தெய்வத்தை பூஜை செய்து வணங்க எல்லாக் காரியமும் வெற்றியாக முடியும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**அதிர்ஷ்ட கிழமைகள்:**
ஞாயிறு, செவ்வாய், வியாழன்.

# உடல் எடையை குறைக்கும் பச்சை மிளகாய்

நாம் சாதாரணமாகப் பயன்படுத்தும் பச்சை மிளகாயில் ஏகப்பட்ட நன்மைகள் இருப்பதாக மருத்துவ ஆய்வு ஒன்று பட்டியலிட்டிருக்கிறது. அதனால் உணவில் காரத்திற்காக இரசாயனம் சேர்க்கப்பட்ட மசாலா மிளகாய்த் தூளை சேர்ப்பதற்குப் பதிலாக உடலுக்கு பல நன்மைகளைக் கொடுக்கும் பச்சை மிளகாயைச் சேர்த்துக்கொள்ளலாம்.


பச்சை மிளகாய் காய்ந்து சிவந்து வற்றலாக மாறி விட்டால் இந்த மருத் துவக் குணங்களும் காணாமல் போய்விடும். அதனால் பச்சை மிளகாயே உணவுக்கும் உடலுக்கும் நல்லது. பச்சை மிளகாயில் அன்டி ஒக்சிடன்ட்கள் மிக அதிக அளவில் உள்ளன. நமது உடலுக்கு பாதுகாவலன்போல இது உதவுகிறது. இயங்கக்கூடிய உறுப்புகளுக்கு ஏற்படும் பாதிப்பிலிருந்து காக்கிறது. மேலும் நோய் எதிர்ப்பு சக்தியை அளித்து புற்றுநோயிலிருந்து காப்பாற்றுகிறது. இளமையை நீடிக்க வைக்கும் வல்லமையும் பச்சை மிளகாய்க்கு உண்டு.

இதில் விற்றமின் சி அதிக அளவில் உள்ளது. மிளகாயைப் பயன்படுத்தும்போது மூக்கடைப்பு சரியாவதை நாம் அனுபவபூர்வமாக உணர்ந்திருப்போம். இதில் விற்றமின் ஈ-யும் அதிகஅளவில் இருக்கிறது. இது சருமத்தை பாதுகாக்கவும் எண்ணெய் சுரப்புக்கும் உதவுகிறது. இப்படி பச்சை மிளகாயால் கிடைக்கும் அனைத்து நன்மைகளும் எந்தவித கலோரிகளும் இல்லாமல் கிடைக்கிறது. அதனால் உடல் எடையை குறைப்பதற்காக உணவுக் கட்டுப்பாட்டில் இருப்பவர்களும் இதனை தாராளமாக உணவில் சேர்த்துக்கொள்ளலாம்.

ஆண்களுக்கு புரோஸ்டேட் புற்றுநோய் வரும் ஆபத்து அதிகமாக இருப்பதால் அவர்கள் பச்சை மிளகாயை உண்பதன் மூலம் அந்தப் பாதிப்பிலிருந்து விலகிக் கொள்ளலாம் என்று மருத்துவ ஆராய்ச்சிகள் சொல்கின்றன.



நெற்பாவாடைகள் தற்போது சந்தைக்கு வந்துள்ளன. இவை முழுநீளப்பாவாடையாகவும் குடைவெட்டு அமைப்புடனும் உள்ளன. இவை 900 ரூபாவில் இருந்து ஆயிரத்து 200 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றன.




# வரலாற்றில் இன்றைய தினம்

1792 - அமெரிக்காவில் தபால் திணைக்களத்தை ஸ்தாபிக்கும் தபால் சேவைச் சட்டத்தில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் வோஷிங்டன் ஒப்பமிட்டார்.

1810 - நெப்போலியன் படைக்கு எதிரான தேசாபிமானியும் கிளர்ச்சிக் குழுத்தலைவருமான அன்ரியஸ் ரைறோலியன் சாவுத் தண்டனைக்கு உள்ளானார்.

1872 - நியூயோர்க் நகரில் மெற்றபோலிற்றன் தொல்பொருள் கலைக் கூடம் திறந்து வைக்கப்பட்டது.

1921 - செக்கஸ்லோவாக்கிய இளம் கம்யூனிஸ்ட் லீக் தொடங்கப்பட்டது.

1933 - எதிர்நோக்கப்படும் தேர்தலுக்கு நிதி திரட்டுமுகமாக அடொல்ப் ஹிட்லர் ஜேர்மன் கைத்தொழிலாளர்களை இரகசியமாகச் சந்தித்தார்.

1935 - அண்டார்டிக்காவில் கால்பதித்த முதற் பெண்மணியானார் கரோலின் மைக்கல் சென்

1942 - லெப்டினன்ட் எட்வட் ஒஹேர் அமெரிக்காவின் இரண்டாம் உலகப் போரில் முதல் போர் விமான விமானியானார்.

1944 - இரண்டாம் உலகப் போர் ஜேர்மனிய விமான உற்பத்தி நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தும் 'பெரிய வாரம்' தொடங்கியது.

1965 - அப்பலோ திட்டத்தில் சந்திரனில் மனிதர் தரையிறங்கும் பகுதியை தேர்ந்தெடுக்கும் செயற்பாட்டில் புகைப் படங்களை வெற்றிகரமாக எடுத்த பின்னர் றேஞ்சர் 8 சந்திரனில் மோதியது.

1971 - அமெரிக்காவின் அவசர ஒலிபரப்பு முறைமை எதிர்பாராத விதமாக செயற்படத் தொடங்கி, தேசிய அளவில் பலத்த பரபரப்பை ஏற்படுத்தியது.

2003 - றோட் தீவு, இரவு விடுதி ஒன்றில் தீ பிடித்ததில் 100 பேர் வரை உயிரிழந்ததுடன், 200 பேர் காயமடைந்தனர்.

2009- இரண்டு தமிழ்ப் புலிகள் C 4 வெடிப்பொருள் நிரப்பப்பட்ட விமானத்தில் விமானப்படை தலைமையகத்தைத் தாக்கப் புறப்பட்ட நிலையில், இடை நடுவில் இலங்கை இராணுவத்தினரால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

2014 - உக்ரைன் தலைநகர் கீவில் டசின் கணக்கான அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டக் காரர்கள் குறி பார்த்துச் சுடும் துப்பாக்கிகளால் சுட்டுக் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

2015 - சுவிஸ் றாப் நகரில் இரண்டு ரயில்கள் மோதியதில் 49 பேர் வரை காயமடைந்தனர். சுவிஸ் சமஷ்டி ரயில் சேவை சில இதனால் இரத்துச் செய்யப்பட்டது.

1993- மஞ்சு விரட்டுப் போட்டி கிளிநொச்சியில் பிரபலம்

2014 - காணாமற்போனோர் தொடர்பான விசாரணை ஜனாதிபதி ஆணைக்குழு காலம் 6 மாதம் நீடிப்பு.

2014 - போர்க்குற்ற விசாரணைக்கு இந்தியா ஆதரவு இந்தியன் ரெலிகிராப் கூறுகிறது.

2014 - புலிகளை அழித்தபோது கூட்டமைப்பையும் தடைசெய்திருக்க வேண்டும். அரசின் தவறால் ஜெனிவாவில் அழுத்தம் என்கிறார் பிரதியமைச்சர் சரத் வீரசேகரா.

2014 - இலங்கையை முடக்க பல நாடுகள் முயற்சி, தோற்கடிப்போம் என்கிறார் பசில்.

2014 - மீன்பிடித்தலைத் தடைசெய்தால் மாடு அறுப்பதை கைவிடுவோம் என முஸ்லிம் மக்கள் கட்சி தலைவர் சவால்.

2014 - பிரேரணையைத் தோற்கடிக்க ஜெனிவா பன்னாட்டு புத்த விகாரையில் விசேட பூசை.

2016 - கிளிநொச்சி மாவட்டம் போசாக்கில் பின்னடைவு. மாவட்டச் செயலர் சுட்டிக்காட்டு

2016 - மாகாணத்துக்கு பொலிஸ் காணி அதிகாரம் வழங்கப்படுவது அவசியமென வலியுறுத்துகிறார் டிலான் பெரேரா.

## நாளை

**மாசி-09**

செவ்வாய்க்கிழமை -21.02.2017

திதி: தசமி மா. 06.31

நட்சத்திரம்: மூலம் பி.இ.03.05

சுபநேரம்:11.01-12.31 வரை

ராகுகாலம்:03.31-05.01 வரை

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## மரண அறிவித்தல்

### செல்வரத்தினம் சிவநேசன்

**(ஆயுள் வேத வைத்தியர், காரைநகர்)**



மாதகல் கிழக்கைப் பிறப்பிட மாகவும், வலந்தலை, காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் சிவநேசன் (18.02.2017) சனிக்கிழமை கால மானார்.


அன்னார் மாதகல் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான செல்வ ரத்தினம் - இரத்தினாம்பிகை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான சரசையா - பூலோகம் தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ் சென்ற பொற்கலை (ஆயுள் வேத வைத் தியர்) இன் கணவரும் காலஞ்சென்றவர்களான இந்திரபாலன், செல்வராணி மற்றும் ஜெயபாலன், லிங்கேஸ்வரன் ஆகி யோரின் அண்ணாவும் பகவதி, ஞானக்கிளி காலஞ்சென்ற கோமதி மற்றும் கமலாம்பிகை, கமலாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 22.02.2017 புதன்கிழமை அவரது இல்லத்துக்கு கொண்டுவரப்பட்டு இறுதிக்கிரியைகள் 23.02.2017 வியாழக்கிழமை மு.ப. 9 மணிக்கு நடைபெற்று பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இலகடி,**
**வலந்தலை, காரைநகர்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 21.01.2017
சனிக்கிழமை அன்று
சிவபதமெய்திய எங்கள்
அன்புத்தெய்வம்
அமரர்

### கந்தையா அமிர்தலிங்கம்

**(அரச கட்டட ஒப்பந்தகாரர்)**
**(திரியாய் அம்மன் ரான்ஸ்போர்ட் உரிமையாளர்)**

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (20.02.2017) திங்கட்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**கச்சாய் வீதி, சாவகச்சேரி.** **குடும்பத்தினர்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

**தோற்றம்**
**28 . 01 . 1928**



**மறைவு**
**21 . 01 . 2017**

### திருமதி லீலாபதி திலகராஜா

எமது பாடசாலையில் சதுரங்கப்பயிற்றுவிப்பாளராகக் கடமையாற்றிவரும் **திரு. திலகராஜா இராஜசிங்கம்** (முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்) அவர்களின் அன்புத்தாயான **திருமதி லீலாபதி திலகராஜா** அவர்களின்


31 ஆம் நாள் நினைவு தினத்தை நினைவு கூர்ந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.**

**சங்கத்தானை,**
**சாவகச்சேரி.**

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி பத்தினியம்மா (மல்லிகை) கந்தசாமி



எனது அன்புக்குரிய மைத்துனி திருமதி பத்தினியம்மா கந்தசாமி நேற்று (19.02.2017) ஞாயிற்றுக்கிழமை காலமான செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அவரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**குழந்தைவேல் இராமச்சந்திரன்**
**குடும்பத்தினரும் சகோதரர்களும்**
**458,மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னத்தங்க றமணி அம்பிகாபதி

**(றமணி)**



புலோலி கிழக்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், தம்பசிட்டியை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி சின்னத்தங்க றமணி அம்பிகாபதி நேற்று (19.02.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வநாயகம் - இரத்தினம் தம்பதிகளின் புதல்வியும், தம்பிராசா - கமலவேணி அம்மா தம்பதிகளின் மருமகளும், அம்பிகாபதியின் அன்பு மனைவியும், றாஜினி, தர்மபாலினி, ஜெயபிரசாத் ஆகியோரின் அன்புத்தாயும், சிவாகர் (மட்டக்களப்பு), ஜெயபிரகாஸ் (பிரான்ஸ்), சஜித்தா (மட்டக்களப்பு) ஆகியோரின் அன்பு மாமியும், சரணிகா,அபிசா, ஜெனாத், டிலானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2017) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர் மடம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

(C/28351)(11,17)

**077 790 6056, 0033 7839 88720**



### சின்னத்தம்பி குணநாயகம்

**(சின்னப்பொடி)**

மீசாலை வடக்கு கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட சின்னத்தம்பி குணநாயகம் 17.02.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நடராசா மற்றும் சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் திலகவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் திரவிய நாயகம் (கனடா), புஸ்பலீலா ஆகியோரின் அன்புச் சகோதரரும் தங்கவேற் பிள்ளை(பிரான்ஸ்), திலகேஸ்வரி(டென்மார்க்), சிவனேஸ்வரி (டென் மார்க்), சுசீலாதேவி(லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.02.2017) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 11.00 மணி யளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.


**மீசாலை வடக்கு,**
**கொடிகாமம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 711 1368**

### கந்தையா சண்முகம்

**( ஓய்வு பெற்ற பிரதம எழுது வினைஞர், நொறகல எஸ்ரேற் நிவிற்றிகல)**



உடுவில் தெற்கைப் பிறப்பிட மாகவும், உடுவில் கிழக்கை வசிப்பிட மாகவும் கொண்ட கந்தையா சண் முகம் (17.02.2017) வெள்ளிக் கிழமை தனது 97 ஆவது அகவையில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் காலஞ் சென்றவர்களான சண்முகம் - பார்வதி தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக்கணவரும் வாலாம்பிகை, இராஜேஸ்வரி, கமலேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீதரன் (ஓய்வு பெற்ற பொறியியலாளர் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை), சர்வேஸ் வரன் (ஓய்வு பெற்ற அதிபர்), இரவிச்சந்திரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புமாமனாரும் தயாழினி சத்தியமூர்த்தி, நளாயினி விஜயராயா, ராஜினி சேந்தன், நிரோஜினி சபேசன் (ஆஸ்திரேலியா), துஸ்யந்தி தரேந்திரா (ஆஸ்திரேலியா), பிரியந்தி ராயூசன் (ஆஸ்தி ரேலியா), வினோத்சங்கர் (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புப் பேரனும் ஜனந்தினி, தயூரன், தரணியா, டிலக்சனா, காருண்யா, கார்த்திக், ஆதிரை, ஆவகன், பிரிந்தன், தமிரா, சித்தாத், சாயா, ஆழியா, அர்ச்சுன், ஆகியோரின் அன்புப்பூட்டனும் காலஞ்சென்றவர் களான பீகாம்பரம், செல்லையா, மயில்வாகனம், பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2017) திங்கட் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஈஸ்வரி வாசா,**
**கற்பகப்பிள்ளையார் கோயிலடி,**
**உடுவில் கிழக்கு, சுன்னாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## (தொடர்ச்சிகள்...)

### 17ஆவது நாள்...

நாளாகவும் நேற்றுத் தொடர்ந்தது. போராட்டக் களத்துக்கு நேற்று நேரில் வருகை தந்த கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி.தண் டாயுதபாணி தனது ஆத ரவைத் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன் னால் உள்ள தங்களுடைய பூர்வீகக் காணி 19 ஏக்கரை விடுவித்து தாங்கள் அங்கு சென்று வாழ்வதை உறுத்திப்படுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி 11 நாள்களாக அற வழிப்போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டு வந்தனர். அதனைத் தொடர்ந்து கடந்த செவ்வாய்க் கிழமை முதல் தமது போராட் டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் சுழற்சி முறையிலான உணவு ஒறுப் புப்போராட்டத்திலும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி. தண் டாயுத பாணி மற்றும் கிழக்கு மாகாண சபை உறுப் பினர் கு. நாகேஸ்வரன் ஆகியோர் புதுக் குடியி ருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்னால் தொடர் அற வழிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்க ளைச் சந்தித்து தமது ஆதரவைத் தெரி வித்தனர். புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன் னால் அறவழிப்போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களுக்கு நேற்றைய தினம் தமது ஆதரவைத் தெரிவித்த புதுக்குடியிருப்பு வணிகர் கழகத்தி னர், அடையாள உணவு ஒறுப்பிலும் பங் கெடுத்தனர். மனித உரிமை ஆர்வலர்கள், அரசியல் கட்சிப் பிரமுகர்கள் எனப் பலரும் தமது ஆதரவை நேரில் சென்று மக்களுக்கு தெரிவித்து வரு கின்றனர். (வ-7)

### கேப்பாபிலவு...

ஐக்கிய சோசலிஸக் கட்சியின் தலைமையில் நடைபெறும் இந்த ஆதரவுப் போராட்டத்தில் சிவில் அமைப்புகளும் பங்கேற்கவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

காணி மீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் கேப் பாபிலவு மக்களைச் சந்திப்பதற்காக ஐக்கிய சோச லிஸக் கட்சியின் உறுப்பினர் சட்டத்தரணி சிறிநாத் பெரேரா தலைமையிலான குழுவினர் நேற்று பிலக்குடியிருப்புப் போராட்டக் களத் துக்குச் சென்றிருந்தனர். மக்களிடம் கலந்து ரையாடிய பின்னர் காணி களையும் அவர்கள் பார்வையிட்டனர். அதன் பின்னர், மக்களுக் குச் சார்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது. மக்களின் காணிகளைப் பலவந்தமாகப் படை யினர் பிடித்து வைத்துள்ளனர். அவை மீண் டும் மக்களிடம் கையளிக்கப்பட வேண்டும். இந் தப் பகுதிக்கு வரும்போது எங்கு பார்த்தாலும் முகாம்கள் காட்சியளிக்கின்றன. இந்த நிலைமை மாற வேண்டும்.

அத்துடன், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஒரு நாள் கடையடைப்பு போராட்டத்தை நடத்து மாறு கோரிக்கை விடுத்துள்ளோம்' என்று தெரி வித்தார் ஐக்கிய சோசலிஸக் கட்சியின் உறுப் பினர் சட்டத் தரணி சிறிநாத் பெரேரா.

கேப்பாபிலவு மக்களுக்கு ஆதரவு தெரிவித்து நாளைமறுதினம் புதன்கிழமை கொழும்பிலும் போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று ஐக்கிய சோசலிஸக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார். (4)

### அல் ஹுசைனின்...

மிகக் காட்டமானதாக அமையும் என்று தெரி விக்கப்படுகின்றது. இலங்கை அரசு இணை அனு சரணை வழங்கி நிறைவேற்றிய தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எந்தவொரு எத்த னமும் காண்பிக்காதது தொடர்பிலும், பிரேரணை யில் மாற்றம் மேற்கொள்ள முயற்சிப்பது தொடர் பிலும் காட்டமான விமர்சனத்தை ஆணையாளர் முன்வைப்பார் என்று அறிய முடிகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மற்றும் அவரது அலுவலகம், இலங்கையின் கூட்டு அரசு தொடர்பில் 2015ஆம் ஆண்டு தீர்மா னம் நிறை வேற்றப்படும்போது கொண்டிருந்த அபிப்பிராயத்தில் மாற்றம் ஏற்பட் டுள்ளதாக வும், அரசின் செயற்பாடுகளில் விசனம் - நம் பிக்கை யீனம் அடைந்துள்ளதை வெளிப்படுத்தும் விதத்தில் அவர்களது செயற்பாடு காணப்படுவ தாகவும் ஜெனிவாத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. கொழும்பு அரசுக்கு ஐ.நா. மேற்பார்வையுடன் கால நீடிப்பு வழங்கப்பட்டால், வழங்கப்படும் காலத்தினுள் பரிந்துரைகளை நிறைவேற்று வதற்கு கால அட்டவணை இருக்க வேண்டும். அத்துடன் ஒவ்வொரு அமர்விலும் முன்னேற்ற - இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண் டும். இவ்வாறான கோரிக்கைகள் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்திடம் முன்வைக்கப் பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (வ-5)

# சோலைமந்தி!

## மனிதர்கள் இடத்தே நெருங்குவதில்லை

இந்தியாவின் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் வாழும் அரியவகையான விலங்கே சோலைமந்தி ( Lion Tailed Macaque). ஐ.யூ.சி.என். கணக்கெடுப் பின் படி இந்த வகையைச் சார்ந்த குரங்குகள் இரண்டா யிரத்து 500 இற்கும் குறைவாகவே உள்ளன. உலகில் வேறு எந்தப் பிராந்தியங்களிலும் கண்டு கொள்ள முடியாத இந்த விலங்குகள் மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ளதான தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடக வனப் பகுதிகளில் அதிகம் காணப்படுகின்றன. பெரும் பாலும் பழங்கள், பூக்களின் மொட்டுகள், கொட்டைகள் மற்றும் ஒரு சில பூச்சி வகைகளை உண்டு வாழ்வதான இவ் வகைக் குரங்குகள் பத்து கிலோ வரை நிறையைக் கொண்டுள்ளன. சிங்கத்தின் வால் போலவே இவற் றின் வாலும் நீண்டு இருக்கும். முகத்திலே பிடரி மயிர் காணப்படும்.

சாதாரண குரங்குகளைப் போலவே இவை மனிதர்கள் இடத்தே நெருங்குவ தில்லை. காடழித்தல் இடம்பெறு வதன் காரணமாக வனப் பிரதேசங்கள் தொடர்ந்தும் பாதிப்புக்கு உள்ளாகின்றன. இதன் காரணமாக இவற் றின் வாழ்க்கை முறையில் மிகுந்த சிரமங்கள் ஏற்படு கின்றன. மிக குறைந்த அளவிலேயே இவை தப்பிப் பிழைத்து இருப்பதாக சொல்லப்படுவதுடன் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டால் மாத்திரமே இவற் றைக் காப்பாற்ற முடியும் என்பதான கருத்து கள் காட்டு யிரியலாளர்களால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

---

### யாரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாற்றப்பட்டுள்ளது. 'இது வான் படைக்குச் சொந்தமான காணி. உட்செல்லத் தடை. தேவையில்லாமல் சென்றால் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகுவீர்கள்' என்று கடந்த வெள்ளிக்கிழமை எச்சரிக்கைப் பலகை போடப்பட்டிருந்தது. நேற்று முன் தினம் 'இது வான்படைக் காணியாகும். தேவையில்லாமல் உட்செல்லத் தடை' என்ற வாசகம் மாத்திரம் காணப்பட்டது. மூன்றாவது எச்சரிக்கைப் பலகை நேற்று வைக்கப்பட்டுள்ளது. மும் மொழிகளிலும் அமைந்த அந்தப் பலகையில், 'இது வான்படை முகாம். உட் செல்லத் தடை' என்று மாத்திரம் எழுதப்பட்டுள்ளது.

(வ-5-7)


யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

**பழைய மாணவர் சங்கம்**

யாழ்ப்பாணம்

**வருடாந்தப் பொதுக் கூட்டம்**

05-03-2017 ஞாயிற்றுக்கிழமை காலை 09 மணி

சபாலிங்கம் கேட்போர் கூடம், யாழ். இந்துக் கல்லூரி

- வருடாந்தப் பொதுக் கூட்டம்
- புதிய செயற்குழுத் தெரிவு (தேர்தல் மூலம்)
- பிறவிடயங்கள்


அனைத்து பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களையும் அழைக்கின்றோம்...!

பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் 27-02-2017இற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் அனுப்பிவைக்கவும்

19-02-2017
யாழ்ப்பாணம்

த.சிவரூபன்
செயலாளர்


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை

**திருமதி சத்தியபாமா நாகேஸ்வரன்**

அவர்களின் அன்புக் கணவர்


### நாகேஸ்வரன்

காலமான செய்திகேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம். அன்னாரது பிரிவால் துயருற் றிருக்கும் அவரது குடும்பத்தவரின் துயரில் பங்குகொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/ கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்.**

## மரண அறிவித்தல்

### கந்தையா தவராசா



தோற்றம் 18.08.1936 — மறைவு 19.02.2017

யாழ்ப்பாணம் முத்தமிழ் வீதி, கொட்டடியை பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தவராசா நேற்று (19.02.2017) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான கந்தையா - சின்னம்மா தம்பதியரின் அன்புமகனும் இராசலஷ்மியின் அன்புக் கணவரும் தவமணிதேவி, அருள்ராசா, பரமேஸ்வரி, மகா ராணி, சந்திராதேவி ஆகி யோரின் அன்புச் சகோதரனும் ஜெயமதி, ஜெயாநந்தினி, ஜெய பாகரன் (அன்ரா), ஜெகதீசன் (சசி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிளேந்திரன், துஷ்யந்தி, சத்தியபாமா (ஆசிரியர், கிளி/சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஹஸ்மினா, டினுசிகா, அஜில், புரணி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2017) திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு கொட்டடி வில்லூண்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.06, முத்தமிழ் வீதி,**
**3 ஆம் ஒழுங்கை, கொட்டடி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 469 7604**

## மரண அறிவித்தல்



தோற்றம் 23 . 11 . 1922 — மறைவு 18 . 02 . 2017

### திருமதி சரஸ்வதி கந்தையா (காரைநகர்)

காரைநகர், பயிரிக்கூடலைப் பிறப்பிடமாகவும் காரைநகர், பெரேரா லேன், வெள்ளவத்தை, அராலிதெற்கு ஆகிய இடங்களில் வசித்தவருமாகிய திருமதி சரஸ்வதி கந்தையா 18.02.2017 சனிக்கிழமை இரவு இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கோவிந்தர்-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-நாகமுத்து தம்பதியரின் மருமகளும் காலஞ் சென்றவர் களான கனகம்மா, நடராசா மற்றும் வள்ளியம்மை (பொன்னம்மா), விசாலாட்சி ஆகியோரின் சகோதரியும் நவரத்தினராசா (MLT UK), கோமளம் (லோகம், அராலி சரஸ்வதி மகா வித்தியாலய ஓய்வுநிலை அதிபர்), வேதாரணியம்மா (வேதம், வெள்ளவத்தை) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுசிலா (UK), அம்பலவாணர் (ஓய்வுநிலை உபஅதிபர், அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்) நரேந்திரன் (மாருதி ஸ்ரோர்ஸ், கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியும் குமரன்(UK), சாம்பவி(UK), Dr.பிருந்தா (CRH கொழும்பு), Dr.சுகந்தா (இரத்மலானை), ஜயந்தா (பொறியிலாளர், RDA, கொழும்பு), மகேந்திரன்(Australia), ஹெலென்(UK), சிவகாந்தன் (பொறியியலாளர், கொழும்பு), விஷ்ணுகுமார் (பொறியியளாளர், கொழும்பு), சிவானந்தன் (பொறியியளாளர், கொழும்பு) கமலேஸ்வரி (Australia) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் லக்ஸ்மி (UK), முரளி(UK), சுயன்(கொழும்பு), லக்ஷன்(இரத்மலானை), ஜெய்ஷன் (இரத்மலானை), சீத்தானி (கொழும்பு), திவிஷன் (Australia), கவிஷன் (Australia) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2017) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் அராலி தெற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் அராலி தெற்கு பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அராலி தெற்கு,**
**வட்டுக்கோட்டை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**021 225 1638, 077 432 2837**

## மரண அறிவித்தல்

### சிதம்பரப்பிள்ளை நவரத்தினம்



மந்துவில் கிழக்கைப் பிறப்பிட மாகவும், கண்டி வீதி, ஐயாகடையடி மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை நவ ரத்தினம் (19.02.2017) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப் பிள்ளை - கதிராசிப்பிள்ளை தம்பதி யரின் மூத்த மகனும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் மருமகனும் திருமதி நாகேஸ்வரி (ஓய்வு பெற்ற உத்தி யோகத்தர் நீதிவான் நீதிமன்றம் யாழ்ப்பாணம்) யின் அன்புக் கணவரும் செந்தூரன் (சுவிஸ்), கார்த்திகா (மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்), வேற்கரன் (ஹற்றன் நஷனல் வங்கி, கிளிநொச்சி வடக்கு கிளை) ஆகி யோரின் பாசமிகு தந்தையும் கஜேந்தினி (சுவிஸ்), அகிலன் (பிரதேச செயலகம், நல்லூர்) ஆகியோரின் அன்புமாமனாரும் இசானிகாவின் அன்புப்பேரனும் கமலாதேவி, செல்வராசா, ஆகியோரின் பாசமிகு சகோதரரும் தயாநிதி, கனககேஸ்வரி பரமேஸ்வரி, புவனேஸ்வரி, காலஞ்சென்ற விக்கினேஸ்வரி, கமலேஸ்வரி, இராஜேஸ்வரி, ஜெகதீஸ்வரி, சர்வேஸ்வரி, நகுலேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் திரு.திருமதி ரவீந்திரநாதன் (சுவிஸ்), திருமதி சண்முகநாதன் ஆகியோரின் சம்மந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.02.2017) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கண்டி வீதி,**
**ஐயாகடையடி, மீசாலை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 248 7594, 077 736 4604**

## ஊடகவியலாளர்...

நேற்றுக்காலை கைதுசெய் யப்பட்டனர். மேலும் பலர் கைது செய்யப்படலாம் என்று தெரி விக்கப்பட்டது.

ஏற்கனவே கைதுசெய்யப்பட்ட 3 இராணுவத்தினரையும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

2008ஆம் ஆண்டு மே மாதம், வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த 'தி நேசன்' இதழின் இணை ஆசிரி யர் கீத் நொயார் கடத்திச் செல்லப் பட்டுத் தாக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப் பட்டிருந்தார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மேஜர் ஒருவர் உள்ளிட்ட மூன்று இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் காலை கைது செய்யப் பட்டனர். அவர்கள் நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், குற்றப் புலனாய்வுப் பிரிவு தலைமையகத்துக்கு அழைக்கப்பட்டு விசாரிக் கப்பட்டு வந்த இரண்டு இராணுவத்தினர் நேற் றுக்காலை கைது செய்யப்பட்டனர். அவர்கள் விசாரணைகளின் பின்னர் கல்கிசை நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்தது.

சனிக்கிழமை கைது செய்யப்பட்ட மேஜர் பிரபாத் புலத்வத்த, சார்ஜன்ட் துமிந்த வீரரத்ன, சார்ஜன்ட் ஹேமச்சந்திர பெரேரா ஆகிய மூன்று இராணுவத்தினரிடமும் இரவிரவாக நடத்தப்பட்ட விசாரணைகளுக்குப் பின்னர், மற்றைய 2 பேரும் நேற்றுக்காலை கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மேலும் மூன்று அதிகாரிகள் குற்றப் புலனாய்வுப் பிரிவு தலைமையகத்துக்கு அழைக்கப்பட்டு அவர்களிடம் விசாரணைகள் இடம்பெறுகின்றன.

ஊடகத்துறையைச் சேர்ந்தவர்கள் கொலை செய்யப்பட்டமை, கடத்தப்பட்டமை தாக்கப் பட்டமை குறித்து, விசாரணைகளை நடத்தும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிறப்புப் பிரிவு ஒன்றே இவர்களைக் கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை, ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டுக் காணாமலாக் கப் பட்டமை, ரிவிர ஆசிரியர் உபாலி தென்னக்கோன் தாக்கப்பட்டமை குறித்தும் இந்தக் குழு விசாரணை நடத்தி வருகிறது.

தெகிவளையில் உள்ள வதிவிடத்துக்கு அருகில் வைத்து கீத் நொயாரைக் கடத்திய சந்தேக நபர்கள், தொம்பேயில் உள்ள இராணுவப் புலனாய்வுப் பிரிவின் மறைவிடம் ஒன்றுக்குக் கொண்டு சென்று சித்திரவதை செய்துள்ளனர் என்று, சந்தேக நபர்களை முன்னிலைப்படுத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவு ஆய்வாளர் நிசாந்த சில்வா, மேலதிக நீதிவானிடம் தெரிவித்துள்ளார்.

'தனது நாளிதழில் வெளியிட்ட தகவல்களை வழங்கியவர்கள் யார் என்று அவர்கள் கீத் நொயாரிடம் இருந்து அறிந்து கொள்ள முயன்றனர். அவரைக் கொல்வதற்கும் சந்தேக நபர்கள் திட்டமிட்டிருந்தனர். எனினும் முக்கிய பிரமுகர் ஒருவரிடம் இருந்து வந்த தொலைபேசி அழைப்பை அடுத்து, அவரை தூக்கிச் சென்று வதிவிடத்துக்கு அருகே விட்டுச் சென்றனர்' என்றும் ஆய்வாளர் நிசாந்த சில்வா, நீதிவானிடம் குறிப்பிட்டார்.

இதேவேளை, இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் சார்பில் முன்னிலையான சட்டவாளர், நொயர் சாட்சியமளிப்பதற்கு நாட்டில் இல்லை என்றும், தமது கட்சிக்காரர்கள் அரசியல் ரீதியாக பழிவாங்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களும் முன்னைய ஆட்சிக்காலத்தில் மருதானையில் இயங்கிய திரிபொலி சந்தை என்ற முகாமில் இருந்து செயற்பட்ட இரகசிய இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விடயத்தில், பொலிஸார் கோரும் உதவிகளை இராணுவம் வழங்கும் என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். (வ-4)

## உப குழுக்களின்...

19ஆம் திகதி நாடாளுமன்றத்தில் மும் மொழியிலும் சமர்ப்பிக்கப்பட்டது.

'அறிக்கையில் உள்ள விடயங்கள் சட்டமொழியில் உள்ளன. மக்கள் விளங்கிக் கொள்ளக் கூடிய வகை யில் - புரிந்துணரக்கூடிய விதத்தில் இல்லை. இதனை வாய்ப்பாகப் பயன்படுத்தி, அறிக்கையில் உள்ளவற்றை திரிபுபடுத்தி, மக்கள் மத்தியில் தவறான பரப்புரைகளை சிலர் மேற்கொண்டு வருகின்றனர். இதுவும் புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சிக்குத் தடங்கலை ஏற்படுத்தியுள்ளது. எனவே உபகுழுக்களின் இடைக்கால அறிக்கையை மக்களும் படித்துத் தெளிவுறும் வகையில் புதிதாக வரைய வேண்டும்' என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

இதற்கு அமைவாக மக்களும் விளங்கிக் கொள்ளும் விதத்தில் தயாரிக்கப்பட்ட புதிய வரைவு கடந்த திங்கட்கிழமை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது. அது விரைவில் அரச தலைவரால் வெளியிடப்படும் என்று தெரியவருகின்றது. (வ-5)

## யாழ்ப்பாணம்...

பயணத்தின் போது பங்கெடுக்கத் திட்டமிட்ட நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் மார்ச் 4ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

இதன் போது காங்கேசன்துறை மேற்கில் மாம்பிராய் மாங்கொல்லைப் பகுதியில் 238 ஏக்கர் காணி மக்கள் பாவனைக்கு கையளிக்கப் படவுள்ளது. வள்ளுவர்புரத்தில் இதுவரை விடுவிக்கப்படாத காணிகளும் விடுவிக்கப் படவுள்ளன. மேலும் மீள்குடியேற்ற அமைச்சின் நிதி உதவியில் பலாலியில் அமைக்கப் பட்ட வீடுகள் உத்தியோகபூர்வமாகக் கையளிக் கப்படவுள்ளன.

இதனை விட, கோட்டைப் பகுதியில் மரம் நடுகை நிகழ்விலும், வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள 'அரச தலைவருக்குத் தெரிவியுங்கள்' அலுவலகத் திறப்பு விழாவிலும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கலந்து கொள்கிறார். (வ-5)

## ஜெய்சங்கர்...

இந்தியத் தூதரகத்தில் இன்று முற் பகல் 10.30 மணியளவில் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அவர் சந்திக்கிறார்.

இதன்போது புதிய அரசமைப்பு, ஐ.நா. தீர்மானம் மற்றும் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்துப் பேசப்படும் என்று எதிர்பார்க் கப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனான சந்திப்பையடுத்து அமைச்சர் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணியினரை ஜெய்சங்கர் சந்திக்கிறார்.

இலங்கையின் சமகால அரசியல் நிலவரம் பற்றி இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்படவுள்ளது என்று அறியமுடிகின்றது. குறிப்பாக அரசமைப்பை உருவாக்கும் பணி, தேர்தல் முறைமை மாற்றம் உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாக இந்திய அயலுறவு அமைச்சின் செயலாளரிடம் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதிநிதிகள் தெளிவுபடுத்தவுள்ளனர். மலையக அபிவிருத்திக்காக இந்தியாவின் மேலதிக உதவிகளையும் அவர்கள் கோரவுள்ளனர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், இந்திய அரசின் நிதி உதவியுடன் மலையகத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணி பிரதிநிதிகளிடம் கேட்டறியவுள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதிகளையும் இன்று மாலை 4.30 மணிக்கு இந்திய அயலுறவுச் செயலாளர் சந்திக்கவுள்ளார். இதன்போதும் முக்கிய பல விடயங்கள் பற்றிக் கலந்துரையாடப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4)

## கஞத்துறையில்...

வெகுவிமரிசையாக நடைபெறும். அதில் கடற்றொழிலில் ஈடுபடுபவர்களே அதிகமாகப் பங்கேற்பார்கள். திருவிழாவின் ஆரம்பத்தில் கடல் மாதாவின் ஆசிவேண்டி சொரூபம் கடல்வழியாக யாத்திரை செல்லும். அதனைப் பின்தொடரும் வகையில் யாத்திரிகர்களின் படகுகள் செல்லும்.

நேற்றுக் காலை 9.30 மணியளவில் 20 படகுகள் வரை இவ்வாறு அணிவகுத்துச் சென்றுள்ளன. இலக்கை அடைந்த பின்னர் மீண்டும் வழிபாட்டுத் தலத்தை நோக்கி வருகையில் கடைசியாக வந்த படகு கவிழ்ந்துள்ளது.

அந்தப் படகில் சுமார் 45 இற்கும் மேற்பட்டோர் பயணித்துள்ளனர். அளவுக்கு அதிகமாகப் பயணிகள் பிரயாணம் செய்ததால் கட்டுப் பாட்டை இழந்து படகு கவிழ்ந்திருக்கும் என்று சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்த மீனவர்கள் தெரிவித்தனர்.

படகு கவிழ்ந்ததையடுத்து மீனவர்கள் மீட்புப் பணியில் துரிதமாக ஈடுபட்டனர். அதன்பின்னர் கடற்படையினர், விமானப்படையினருடன், பொலிஸாரும் இணைந்து மீட்புப் பணியில் துரிதமாகச் செயற்பட்டனர். மீட்கப்பட்டவர்கள் நாகொட, பேருவளை ஆகிய வைத்தியசாலை களில் சேர்க்கப்பட்டனர்.

11 பேர் மூச்சித்திணறி உயிரிழந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டனர். உயிரிழந்தவர்களுள் சிறுவர்களும், பெண்களும் அடங்குகின்றனர். வைத்தியசாலைகளில் 32 பேர் வரை சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் இருவரின் நிலமை கவலைக்கிடமாக இருக்கின்றது என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. நேற்றிரவு வரை மீட்புப் பணிகள் தொடர்ந்தன. உறவினர்கள் கடற் கரையில் கதறி அழுதவாறு சூழ்ந்திருந்தனர். (வ-5)

## வடக்குப்...

வைத்துள்ள காணிகளை விடுவிக்குமாறு கோரி மக்கள் தொடர் போராட்டங்களை மூன்று வாரங்களாக நடத்தி வருகின்றனர். இவர்களுக்கு ஆதரவு தெரிவித்து அடுத்த கட்டப் போராட்டம் நடத்துவதற்குக் கடந்த வாரம் மக்கள் பிரதிநிதிகள் கூடி முடிவெடுத்திருந்தனர். கடந்த புதன் கிழமை முல்லைத்தீவு மாவட்டச் செயலக வளாகத்தில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுகூடி எடுத்த முடிவின் பிரகாரம் இன்றைய போராட்டத்துக்கான அழைப்பு விடுக்கப்பட் டுள்ளது.

இன்று காலை 7.30 மணி தொடக்கம், 8.30 மணி வரையில் ஒவ்வொரு பாடசாலைக்கு முன்பாகவும் மாணவர்கள் ஒன்று கூடி தமது ஆதரவை வெளிப்படுத்துவார்கள். வடக்கு மாகாணத்தில் உள்ள சகல பாடசாலைகளின் முன்பாகவும் இந்தப் போராட்டம் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-5)

## பிலக்குடியிருப்புப்...

போராட்டக் களத்திலிருந்து அகலக் கூடாது என்ற எங்கள் முடிவுக்கு உரமூட்டுபவையாக இந்த ஆதரவுகள் இருக்கின்றன'

இவ்வாறு பிலக்குடியிருப்பில் 20 ஆவது நாளாகவும் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் மக்கள் தெரிவித்தனர்.

ஜனவரி மாதம் 31ஆம் திகதி அதிகாரிகளினால் ஏமாற்றப்பட்ட நிலையில் போராட்டத்தை ஆரம்பித்த பிலக்குடியிருப்பு மக்கள் நேற்று 20ஆவது நாளாகவும் தங்களது திடமான போராட்டத்தை தொடர்கின்றனர். வாக்குறுதிகளையும், கால அவகாசங்களையும் ஏற்றுக் கொள்ள மறுத்து காணிக்குள் கால் வைப்பதே தமது முடிவு என்பதில் உறுதியாக இருந்து அவர்கள் போராடி வருகின்றனர்.

இந்த மக்களுக்கான ஆதரவு நாள் தோறும் பெருகி வருகின்றது. தமிழ் மக்களிடமிருந்து மாத்திரமின்றி சிங்கள - முஸ்லிம் முற்போக்குத் தரப்புக்களிடமிருந்தும் ஆதரவு கிடைத்து வருகின்றது.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி. தண்டாயுதபாணி மற்றும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கு. நாகேஸ்வரன் ஆகியோர் அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை நேற்றுச் சந்தித்து தமது ஆதரவைத் தெரிவித்தனர். யாழ்ப்பாணம் அரங்கச் செயற்பாட்டுக் குழுவினர் பிலக்குடியிருப்பு மக்கள் நடத்திவரும் தொடர் அறவழிப் போராட்ட இடத்துக்குச் சென்றனர். பாடசாலை மாணவர்களுக்கு உள ஆற்றலை மேம்படுத்தும் வகையில் ஆற்றுப்படுத்தும் செயற்பாட்டிலும் அவர்கள் ஈடுபட்டனர். (வ-5-7)

## ரணில்...

குழுவின் கூட்டத்தில் சமர்ப்பிக் கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த அறிக்கையை சமர்ப்பிக்குமாறு வழிகாட்டல் குழுவின் தலைவரும் தலைமை அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார்.

வழிநடத்தல் குழுவின் கூட்டம் கடந்த 7ஆம் திகதி நடைபெற்றது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் கள் கலந்து கொள்ளவில்லை.

நாடாளுமன்றத்தில் சைட்டம் தொடர்பில் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்ததால் அவர்கள் பங்கேற்கவில்லை என்று தெரிவிக் கப்பட்டிருந்தது.

அரசமைப்பில் சொல்லப்பட்டு இதுவரையில் நடைமுறைப்படுத் தப்படாத விடயங்கள், கடந்த காலங்களில் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டங்கள், உபகுழு முன்பாக சகல மாகாணங்களின் முதலமைச்சர்களும் தெரிவித்த கருத்துக்களில் பொதுவான விடயங்கள் ஆகியவற்றைத் தொகுத்து அறிக்கை தயாரிக்குமாறு கொழும்பு அரசின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வழிநடத்தல் குழுவின் கடந்த கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

இதற்கு அமைவாக அறிக்கை தயாரிக் கப்பட்டுள்ளது. அறிக்கையின் பிரதி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை நாளை நடைபெறும் வழிநடத்தல் குழுக் கூட்டத்தில் சமர்பிக்கப்பட்டு ஆராயப்படும் என்று தெரியவருகின்றது. (வ-5)

## அரசமைப்பு...

சபாநாயகர் கரு ஜய சூரியவிடம் நாளை செவ்வாய்க் கிழமை கடிதம் கையளிக்கவுள்ள னர்.

இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் உதயன் பத்திரிகையிடம் நேற்றுத் தெரி வித்தார். புதிய அரசமைப்பு உருவாக்கப் பணிகளுக்காக அரசமைப்பு நிர்ணயச் சபையால் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் 21 உறுப்பினர்களை உள்ளடக்கும் வகையில் வழிநடத்தும் குழு 2016 ஏப்ரல் 5ஆம் திகதி அமைக்கப்பட்டது.

இந்தக்குழுவில் மகிந்த ஆதரவு அணி சார் பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான தினேஸ் குணவர்தன, பிரசன்ன ரணதுங்க ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். மேலும் 6 உபகுழுக்களும் அமைக்கப்பட்டன. அதன்படி அடிப்படை உரிமைகள் தொடர்பான உப குழுவில் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர்களான பவித்ரா வன்னியாராச்சி, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

நீதி தொடர்பான உப குழுவில் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர்களான ஸ்ரீயானி விஜேவிக்கிரம, உதயகம்மன் பில ஆகியோரும், சட்டம் ஒழுங்கு சார்ந்த உபகுழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ச, செஹான் சேமசிங்க ஆகியோரும் பொது நிதியுடன் தொடர்புடைய உப குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான பந்துல குணவர்தன, கெஹலிய ரம்புக்வெல, பொதுச் சேவை உப குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சந்திரசிறி கஜதீர, ரமேஷ் பத்திரன ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

அத்துடன், கொழும்பு அரசுக்கும் மாகாண சபைகளுக்கும் இடையேயான தொடர்ப சம்பந்தமான உப குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அழகப்பெரும, விதுல விக்கிரமரத்ன, சனத் நிசாந்த ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

புதிய அரசமைப்பை உருவாக்கும் பணிகளில் மகிந்த அணி சார்பில் 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் அனைவருமே இவ்வாறு விலகியிருக்கத் தீர்மானித்துள்ளனர்.

உப குழுக்களின் பணிகள் நிறைவடைந்தாலும் அரசமைப்புத் தயாரிப்பு பணி இன்னும் ஆரம்பமாகவில்லை. இந்த நிலையிலையிலேயேதான் இனி அரசமைப்பு உருவாக்கப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்போவதில்லை என்ற அறிவிப்பை மகிந்த அணி விடுத்துள்ளது.

நாட்டைப் பிளவுபடுத்தும் வகையில் புதிய அரசமைப்பு அமையும் என்று மகிந்த அணி குற்றஞ்சாட்டிவரும் நிலையில், புதிய அரசமைப்பு சம்பந்தமாக இன்னும் ஒரு சரத்தேனும் எழுதப்படவில்லை என்று அரசு தெரிவித்தது. (வ-4)

# சிலந்தி கற்பித்த பாடம்

போரில் தோல்வி அடைந்த மன்னன் ஒருவன் காட்டுப் பகுதியிலுள்ள குகை ஒன்றில் தலை மறைவாக இருந்தான். அவன் வீரனாக இருந்தபோதிலும், படைகளின் தொகை குறைவாக இருந்தமையால் எதிரியின் பெரும்படை முன்னே அவனது படைகள் தாக்குப் பிடிக்க முடியாமல் போயின.

குகையில் இருந்த மன்னன் மிகவும் மனம் சோர்ந்து தோல்வி மனப் பான்மையில் தவித்தான். தன்னால் இனி தன் நாட்டை மீட்க முடியாது போய் விடுமோ என சஞ்சலமடைந்தான். இந்த நிலையில் குகையின் ஒரு மூலையில் சிலந்தி ஒன்று வலை பின்னிக் கொண்டிருப்பதைப் பார்த்தான். வலை பின்னுவதற்கு அது எடுத்துக் கொண்டிருந்த கடுமையான முயற்சிகள் அவன் கவனத்தை ஈர்த்தன. அது கீழிருந்து மேலாகவும் மேலிருந்து கீழாகவும் இடம் வலமாகவும், வலம் இடமாகவும் மாறி மாறி ஏறி இறங்கி வேலையில் ஈடுபட்டிருந்தது. இவ்வாறு அது இடம் மாறுகின்ற சந்தர்ப்பங்களில் பல தடவைகள் நூல் இழை அறுந்து விழுவதும் அதனோடு சிலந்தியும் சேர்ந்து விழுவதும் மீண்டும் வேலையைத் தொடர்வதுமாக இருந்தது. இவ்வாறு பல தடவைகள் ஏற்பட்ட போதிலும், இறுதியில் அதுஅந்த வலையைப் பின்னி முடித்து விட்டதைக் கண்டு அரசன் வியந்தான்.



"இந்தச் சிறு பூச்சியே தன் முயற்சியைக் கைவிடாது தொடர்ந்து முயன்று வெற்றி கண்டுள்ளதே! நானோ வீரன் ஏன் எனது நாட்டை முயற்சி செய்து மீண்டும் வெற்றி கொள்ள முடியாது? இப்படி கோழையாக ஓடி ஒளிந்துள்ளேனே இன்றிலிருந்தே செயற்பட்டு என் நாட்டை வென்றடைவேன்" என்று எழுந்து அங்கிருந்து புறப்பட்டுப் போனான். மீண்டும் தன் மதிநுட்ப மந்திரிமார்களை ஒன்று கூட்டி ஆலோசனை செய்து, பெரும் படை திரட்டி, குறுகிய காலத்துள் இழந்த நாட்டை மீண்டும் பெற்று வெற்றி வாகை சூடினான்.

**சிலந்தியின் செயல்கள் மன்னனுக்கு மட்டுமா பாடம்**
**எம் எல்லோருக்குமே பாடம்தான்**
**முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்.**

## மெய் எழுத்துக்களின் உருவாக்கம்

மெய் எழுத்துக்களும் உயிர் எழுத்துக்களும் இணைந்து 216 உயிர் மெய் எழுத்துக்கள் உருவாகின்றன.

18 மெய்யின் மேலும் 12 உயிரும் தனித்தனி ஏறி 216 உயர் மெய்கள் உருவாகின்றன (18X12= 216)

உதாரணம்

க் + அ = க
க் + ஆ = கா
க் + இ = கி
க் + ஈ = கீ
க் + உ = கு
க் + ஊ = கூ
க் + எ = கெ
க் + ஏ = கே
க் + ஐ = கை
க் + ஒ = கொ
க் + ஓ = கோ
க் + ஔ = கௌ

ச் + அ = ச
ச் + ஆ = சா
ச் + இ = சி
ச் + ஈ = சீ
ச் + உ = சு
ச் + ஊ = சூ
ச் + எ = செ
ச் + ஏ = சே
ச் + ஐ = சை
ச் + ஒ = சொ
ச் + ஓ = சோ
ச் + ஔ = சௌ



## சின்னஞ் சிறிய பிள்ளைகள் நாம்

சின்னஞ் சிரிய பிள்ளைகள் நாம்
செல்லமான பிள்ளைகள் நாம்
சிரிக்கும் வண்ண மலரைப் போன்ற
சிங்காரப் பிள்ளைகள் நாம்

ஓடி வந்து கூடி நின்று
பாட்டைப் பாடுவோம்
ஒன்று சேர்ந்து கையசைத்து
தாளம் போடுவோம்

கதிரவனும் உதிக்கும் முன்னே
எழுந்திட வேண்டும்
காலைக் கடன் முடித்து நாமும்
படித்திட வேண்டும்

தாயவளைத் தெய்வமாக
தொழுதிட வேண்டும்
தந்தை சொல்லை மதித்து நாமும்
நடந்திட வேண்டும்

வாய் திறந்து இனிய சொல்லைப்
பேசிட வேண்டும்
நல்வாழ்வுயாருக்கும்கிடைத்திடவே
உழைத்திட வேண்டும்

ஏற்ற தாழ்வு மறந்து நாமும்
பழகிட வேண்டும்
ஏற்றம் வாழ்வில் பெற்றிடவே
முயன்றிட வேண்டும்

கருணை எங்கள் நெஞ்சினிலே
கனிந்திட வேண்டும்
கயமை செய்வார் நட்பினையே
விலக்கிட வேண்டும்


திறமை கூட்டி நாட்டுநலன்
பெருக்கிட வேண்டும்
பிறர் திறமை பெருமையுடன்
பேசிட வேண்டும்



# பென் குயின்

பறவை இனத்தைச் சார்ந்த பென்குயின்கள் இறக்கைகள் இருந்தும் வளிக் கூடாகப் பறக்க முடியாதவை. ஆனால் நீருக்கூடாக மிக வேகமாகப் பறக்கக் கூடியவை. வளியில் பயன்படுத்தும் அதே செட்டைகளை நீருக்கூடாகப் பறப்பதற்குப் பயன்படுத்துகின்றன. இவை தம் வாழ்நாளின் 75 வீதநாள்களை நீருக் கடியில் உணவு தேடுவதற்காகக் கழிக்கின்றன. இவற்றின் உணவுகள் இறால், மீன்கள் என்பன. இவற்றின் அலகின் முன்பகுதி வளைந்து காணப்படும். இதனால் வழுக்கும் தன்மையுள்ள மீன்களைக் கூட இந்த அலகுகள் தவற விடாமல் பிடித்துக் கொள்ளும். இவை நன்னீரைக் குடிப்பதில்லை. கடல் நீரை மட்டுமே குடிக்கும். இவற்றின் உடலிலுள்ள சுரப்பிகள் குடிக்கும் நீரிலுள்ள உப்பைப் பிரித்து தனியே வெளியேற்றி விடும். இவை செட்டை கழற்றுவதற்கும் இனப் பெருக்கம் செய்வதற்குமே நீருக்கு வெளியே கரைக்கு வரும். இந்தப் பறவைகள் அந்தாட்டிக்காவைச் சேர்ந்த தீர்வுகளிலும் ஆபிரிக்கா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற குளிர்ந்த கடற்கரைகளிலும் வாழ்கின்றன. இப் பறவைகள் கறுத்த முதுகுப் புறமும் வெள்ளை நிற வயிற்றுப் பகுதியையும் கொண்டுள்ளன. இவற்றில் பெண் பறவை இரண்டும் முட்டைகளை மட்டுமே இடும். பெண் இரை தேடிச் செல்ல ஆண் பறவை அடைகாக்கும். இவை மனிதர்களைப் போல கரணம் அடிக்கக் கூடியவை. 17 வகையான பென்குயின் இனங்கள் உள்ளன.

## அணில் பழத்தை உண்பதற்கு வழிகாட்டுவோம்



## நன்மை தரும் ஏழு விடயங்கள்

1. ஏழ்மையிலும் நேர்மை
2. கோபத்திலும் பொறுமை
3. தோல்வியிலும் விடாமுயற்சி
4. துன்பத்திலும் துணிவு
5. செல்வத்திலும் எளிமை
6. பதவியிலும் பணிவு
7. வறுமையிலும் உதவும் மனம்





# முல்லை. கிளி. சம்பியனாகின

யாழ்ப்பாணம், பெப். 20
வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாவட்ட அணிகளுக்கு இடையிலான தைக் கொண்டோ போட்டியில் ஆண்கள் பிரிவில் முல்லைத்தீவு மாவட்ட அணியும், பெண்கள் பிரிவில் கிளிநொச்சி மாவட்ட அணியும் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தன.

முல்லைத்தீவு மாவட்டச் செயலக மண்டபத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இந்தப் போட்டிகள் இடம்பெற்றன. பெண்கள் பிரிவில் கிளிநொச்சி மாவட்ட அணி 6 தங்கப் பதக்கம், 2 வெள்ளிப்பதக்கம், ஓர் வெண்கலப்பதக்கம் என மொத்தமாக 9 பதக்கங்களைக் கைப்பற்றி 37 புள்ளிகளுடன் முதலாம் இடத்தைக் கைப்பற்றியது. முல்லைத்தீவு மாவட்ட அணி ஓர் தங்கம், 4 வெள்ளிப் பதக்கங்கள், 2 வெண்கலப் பதக்கங்கள் என 7 பதக்கங்களுடன் 19 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தை யும், வவுனியா மாவட்ட அணி 5 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்தை யும் தமதாக்கின.

ஆண்கள் பிரிவில் முல்லைத்தீவு மாவட்ட அணி 3 தங்கப் பதக்கங்கள், 2 வெள்ளிப் பதக்கங்கள், 3 வெண்கலப் பதக்கங்கள் என 8 பதக்கங்களுடன் 22.5 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், யாழ்ப்பாணம் மாவட்ட அணி 2 தங்கப் பதக்கம், 3 வெள்ளிப் பதக்கம், 5 வெண்கலப் பதக்கம் என மொத்தமாக 10 பதக்கங்களுடன் 22 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், வவுனியா மாவட்ட அணி 2 தங்கப்பதக்கங்கள், ஓர் வெள்ளிப் பதக்கம், ஓர் வெண்கலப் பதக்கம் என மொத்தமாக 4 பதக்கங்களுடன் 13.5 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் தமதாக்கின. (ம-23)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், பெப். 20

**இளைஞர் வி.க. கால்பந்தாட்டம்**

வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் லீக் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரின் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில்பாசையூர்சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதவுள்ளது.

**யங்ஸ்ரார் வி.க. கால்பந்தாட்டம்**

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடைபெற்றுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரின் இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் லக்கி ஸ்ரார் அணியை எதிர்த்து அல் இக்பால் 'ஏ' அணி மோதவுள்ளது.

**மத்தி. - இந்து துடுப்பாட்டம்**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான நட்பு ரீதியிலான டெஸ்ட் துடுப்பாட்டமொன்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று, நாளை என இரு தினங்கள் நடைபெறவுள்ளன. (ம-23)



# இளவாலை மத்தியை வீழ்த்தி ஆவரங்கால் மத்தி. சம்பியன்

யாழ்ப்பாணம், பெப். 20
ஆவரங்கால் இந்து இளைஞரின் கரப்பந்தாட்டத் தொடரில் 'ஏ' பிரிவில் கிண்ணம் வென்றது ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம்.

ஆவரங்கால் இந்து இளைஞரின் மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 'ஏ' பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் இளவாலை மத்திய விளையாட்டுக் கழகமும் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகமும் மோதின. முதல் இரு செற்களையும் கடும் போராட்டத்தின் மத்தியில் 25:19, 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி முன்னிலை வகித்தது ஆவரங்கால் மத்தி. அடுத்த செற்றை 25:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றிய இளவாலை மத்தி. ஆவரங்காலின் நேர்செற் வெற்றிவாய்ப்பை இல்லாமற் செய்தது. சரிவில் இருந்து மீண்டு நான்காவது செற்றை 27:25 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி 3:1 என்ற செற் கணக்கில் கிண்ணம் வென்றது ஆவரங்கால் மத்தி.

ஆட்டநாயகனாக ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சிந்துவும், தொடராட்ட நாயகனாக இளவாலை மத்தியைச்சேர்ந்த ஜெயநீதனும் தெரிவாகினர். இறுதியாட்ட நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொண்டார். (ம-108-422)



*ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரின் பரிசளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. கடந்த வருடம் நடைபெற்ற தேசிய மட்ட கோலூன்றிப் பாய்தலில் சாதனையுடன் தங்கம் வென்ற அனித்தா கழகத்தால் கௌரவிக்கப்பட்டார். கரப்பந்தாட்ட வீரர்களான செல்வரதன், தார்மீகன், கரப்பந்தாட்ட நடுவர் சுரேஸ்குமார் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர். யாழ்ப்பாணம்-கிளிநொச்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். (ம-23)*

# நவஜீவன்ஸ் அணி அசத்தல் ஆட்டம்

யாழ்ப்பாணம், பெப். 20
ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் 'பி' பிரிவில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி சம்பியனானது.

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி அணி மோதியது. இதில் 3:1 என்ற செற் கணக்கில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி சம்பியனானது. சிறந்த வீரனாக உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியின் அஜித் தெரிவானார். தொடராட்ட நாயகனான புத்தூர் வளர்மதி அணியின் குயின்டன் தெரிவானார். இறுதியாட்ட நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொண்டார். (ம-422-108-23)

# வென்றது மருதநிலா

யாழ்ப்பாணம், பெப். 20
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் மருதநிலா அணி வெற்றிபெற்றது.

யங்ஸ்ராரின் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மருதநிலா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சண் சைன் விளையாட்டுக் கழக அணி மோதியது.. இதில் மருதநிலா அணி 6:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# செவ்வானத்தை தோற்கடித்தது யுனிபைட் 'ஏ'

வவுனியா வைரப் புளியங்குளம் விளையாட்டுக் கழகத்தின் ரி-20 துடுப்பாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் யுனிபைட் விளையாட்டுக் கழக 'ஏ' அணி செவ்வானம் அணியைத் தோற்கடித்தது.

வவுனியா நகரசபை மைதானத்தில் இந்த ஆட்டம் இடம்பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய செவ்வானம் அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து, 97 ஓட்டங்களைப் பெற்றது.

98 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யுனிபைட் அணி, 17 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக உசாந் 37 ஓட்டங்களைப் பெற்றார். (ம-23)

# அண்ணா சம்பியன்

பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில், கெருடாவில் அண்ணா அணி சம்பியனானது. வல்வை உதயசூரியன் கடற்கரையில் நேற்றுமுன்தினம் இறுதியாட்டம் இடம்பெற்றது. இதில், வல்வை விளையாட்டுக் கழகமும் அண்ணா விளையாட்டுக் கழகமும் மோதின. மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலிரு செற்கள் முறையே 21:16, 21:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி நேர் செற் கணக்கில் கிண்ணம் வென்றது அண்ணா அணி. (ம-108)



## தென்னாபிரிக்காவிடம்
# வீழ்ந்தது நியூசிலாந்து

நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் ஒரு பந்து மீதமிருக்க திரில் வெற்றி பெற்றது தென்னாபிரிக்க அணி.

ஐந்து ஆட்டங்களைக் கொண்ட இரு தரப்புத் தொடரின் முதலாவது ஆட்டம் ஹமில்டனில் நேற்று நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. ஆட்டம் ஆரம்பமாகும் முன்னர் மழை பெய்ததன் காரணத்தால் 34 பந்துப்பரிமாற்றங்கள் கொண்டதாக ஆட்டம் மட்டுப்படுத்தப்பட்டது. குப்தில் விலகியதால் ஆரம்ப வீரராக பிரவுண் நீல் களமிறக்கப்பட்டார். அவருடன் லாதம் களமிறங்கினார். ஓட்டமெதனையும் பெறாத நிலையில் லாதமை வீழ்த்தினார் மொறிஸ். ஆட்டத்தின் ஆரம்பத்தில் மொறிஸின் பந்துவீச்சு சிறப்பாகவே எடுபட்டது. பிரவுண் நீல், வில்லியம்சன் இணைய பிறிதொரு இலக்கை இழக்காமல் 5 ஓட்டங்களைத் தொட்டது நியூசிலாந்து. 31 ஓட்டங்களுடன் பிரவுண் நீலை வீழ்த்தினார் மொறிஸ். அவர், ரெய்லர், புறூம் இருவரையும் அடுத்தடுத்து பவிலியனுக்குத் திருப்பினார். 82-4 என்று தடுமாறியது நியூசிலாந்து.

மறுமுனையில் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி அரைச்சதம் கடந்த வில்லியம்சன் 59 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். கிரான்ஸ்ஹோம், சவுத்தி இருவரும் முறையே 34, 24 ஓட்டங்களைப் பெற்று பின்வரிசையைப் பலப்படுத்தினர். முடிவில் நியூசிலாந்து 207-7.

பந்துவீச்சில் மொறிஸ் 4 இலக்குகளையும், ரபாடா 2 இலக்குகளையும், சம்சி ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்காவுக்கு ஆரம்ப வீரர்களான அம்லா, குயின்டன் டி ஹொக் இணை வெற்றிக்கான அடித்தளத்தை அமைத்தது. அணி 88 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 35 ஓட்டங்களுடன் அம்லா ஆட்டமிழந்தார். மறுமனையில் அரைச்சதம் கடந்தார் குயின்டன். அவர் 69 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பிளாசிஸ், டுமினி, பெக்கார்டின் மூவரும் ஏமாற்றினாலும் வில்லியர்ஸ் நிலைத்துநின்று ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தார். அவர் 37 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். (ம)




### சாதனையை நோக்கி

நியூசிலாந்துக்கு எதிராக நேற்றுப் பெற்ற வெற்றியுடன் தொடர்ந்து 12 ஒரு நாள் ஆட்டங்களில் தென்னாபிரிக்கா வெற்றிபெற்றுள்ளது. தொடர்ந்து அதிக ஆட்டங்களில் வெற்றிபெற்ற வரிசையில் 21 வெற்றிகளுடன் ஆஸ்திரேலியா முதலிடத்தில் உள்ளது. தென்னாபிரிக்க அணி 12 ஆட்டங்களில் வென்று இரண்டாவது இடத்தில் இருந்தது. தற்போது அந்த அணி தனது அடைவைத் தானே சமன் செய்தது. (ம)

### நுழைவாயில் திறப்பு விழா

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட அமரர் பகீசன் ஞாபகார்த்த நுழைவாயில் திறப்பு விழாவும் குருதிக் கொடை நிகழ்வும் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளன. கழகத் தலைவர் சி.வசந்தகுமார் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் விருந்தினர்களாக வட மாகாணசபை உறுப்பினர்களான வே.சிவயோகன் மற்றும் ச.சுகிர்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-108)

### ஏலம் இன்று

நடப்பு வருட ஐ.பி.எல். தொடருக்கான ஏலம் பெங்களூரில் இன்று நடைபெறவுள்ளது. மொத்தமாக 750 வீரர்கள் ஏலத்தில் உள்ளனர். அவர்களில் 79 வீரர்கள் வாங்கப்படுவார்கள். (ம)




## புனேயின் தலைமையிலிருந்து
# டோனி நீக்கம்
# சிமித் நியமனம்

ஐ.பி.எல். தொடரில் புனே அணியின் தலைமைத்துவத்தில் இருந்து நேற்று விடுவிக்கப்பட்டார் டோனி. அந்த இடத்துக்கு ஆஸ்திரேலிய அணித் தலைவர் சிமித் நியமிக்கப்பட்டார்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு தடை விதிக்கப்பட்ட பின்னர் புனே அணி புதிதாக் கடந்த வருடம் இணைக்கப்பட்டது. இதன் தலைவராக டோனி நியமிக்கப்பட்டார். கடந்த வருட ஐ.பி. எல். தொடரில் 14 ஆட்டங்களில் விளையாடிய புனே சுப்பர் ஜெயின்ட்ஸ் அணி 5 ஆட்டங்களில் மட்டுமே வெற்றிபெற்றது. தரப்படுத்தலில் 8 அணிகளில் 7 ஆவது இடத்தில் இருந்தது. இந்த மோசமான பெறுபேற்றாலேயே டோனி நீக்கப்பட்டார் என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன. சிமித் தலைவராக அறிவிக்கப்பட்டார்.

இந்திய அணியின் ஒருநாள் மற்றும் ரி-20 ஆட்டங்களின் தலைமைப் பொறுப்பில் இருந்தும் சில வாரங்களுக்கு முன்னர் டோனி விலகியிருந்தார். புனேயின் தலைவராகத் தொடர்வேன் என்ற நம்பிக்கையை அவர் வெளிப்படுத்தியிருந்தார். இந்த நிலையில் இந்த திடீர் நீக்கம் டோனியின் ரசிகர்களுக்குப் பெரும் அதிர்ச்சியாக வந்தமைந்தது.

அதேநேரம், அடுத்த வருடம் சென்னை அணி மீதான தடை விலக்கப்பட்டதும் டோனி சென்னையுடனேயே இணைவார். இதனால் இந்தத் தொடரில் புனேயின் தலைமையில் இருந்து டோனி நீக்கப்பட்டமை அடுத்த வருடம் சென்னை சுப்பர் கிங்ஸில் டோனியைக் காண்பதற்கான அடித்தளம் என்றும் கிரிக்கெட் ஆர்வலர்கள் கருதுகின்றனர். (ம)

## சுழல் சவாலை சந்திப்பதற்கு காத்திருக்கை

ஆஸ்திரேலிய அணியின் முன்னணி வீரரான ஷோன் மார்ஷ், இந்திய அணியின் சுழல்பந்து வீச்சுச் சவாலை சந்திப்பதற்குத் தயார் என்று தெரிவித்தார்.

இந்தியா -ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் புனேயில் எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்திய ஆடுகளங்கள் சுழலுக்குச் சாதகமானவை என்பதால் இந்திய அணியின் ஆதிக்கம் மிகைந்திருக்கும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுவரும் நிலையில், இந்திய அணியின் சுழல் பந்துவீச்சாளர்களான அஸ்வின், ஜடேயாவை எதிர்கொள்ள ஆஸ்திரேலிய வீரர்கள் தயார் நிலையில் உள்ளனர் என்று மார்ஷ் தெரிவித்தார்.


இந்திய 'ஏ' அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் மார்ஷ் சதம் கடந்தார். பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

களத்தில் நீண்ட நேரம் செலவிடுவது என்பது விலைமதிப்புடையது. இதன் மூலம் கிடைத்துள்ள நம்பிக்கையை இந்திய அணிக்கு எதிரான தொடருக்கும் எடுத்துச் செல்வேன். களத்தில் நேரம் செலவிடுவது எப்போதுமே உதவியாக இருக்கும். இதை அஸ்வின், ஜடேயா ஆகியோருக்கு எதிராக நாங்கள் பயன்படுத்த வேண்டும் என்பதை அறிந்துள்ளோம். இந்தியாவில் ஏற்கெனவே பல்வேறு ஆட்டங்களில் விளையாடியுள்ளோம். நாம் எப்போதும் உண்மையான சவால்களைத் தேடுபவர்கள். திறமை வாய்ந்த அணிக்கு எதிராக தற்போது நடைபெற உள்ள டெஸ்ட் தொடர் எங்கள் அணியில் உள்ள அனைத்து வீரர்களுக்குமே உண்மையான சவால்தான். இந்தத் தொடர் எல்லோருக்கும் சிறந்ததாக அமையும் என மார்ஷ் மேலும் தெரிவித்தார். (ம)

## சம்பியன்ஸ் கிண்ணத்தில் விளையாட நெக்ரா விருப்பம்

இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளரான நெக்ரா, இங்கிலாந்தில் எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் விளையாடும் விருப்பத்தை வெளியிட்டார்.

இந்திய ஊடகமொன்றுக்கு நேற்றுமுன்தினம் வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார். இங்கிலாந்து ஆடுகளங்களில் வேகப்பந்து வீச்சாளர்கள் முக்கிய பங்கு வகிப்பார்கள். குறைந்தது அங்கு 4 வேகப்பந்து வீச்சாளர்களுடன் விளையாட வேண்டி இருக்கும். ஆட்டத்தின் ஆரம்பம், மத்தி, இறுதி என்று எந்த பகுதியிலும் என்னால் பந்து வீச முடியும். இதனால் சம்பியன்ஸ் லீக்கில் நான் விளையாட விரும்புகிறேன் என நெக்ரா மேலும் தெரிவித்தார். (ம)



## எதிர்மறையான செய்திகளையே ஊடகங்கள் பார்க்கின்றன

*என்றார் மிர்சா*

எதிர்மறையான செய்திகளுக்கே ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுக்கின்றன என்று இந்திய ரென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா குற்றஞ்சாட்டினார்.

சானியா மிர்சா வரி ஏய்ப்புச் செய்தார் என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. பன்னாட்டு ஊடகங்களில் வெளியாகி பூதாகரமாக வெடித்திருந்தது. சானியா தான் குற்றமற்றவர் என்பதற்கான ஆதாரங்களை ஒப்படைத்தார். அதே நேரம் கட்டார் ரென்னிஸ் தொடரில் சிறந்த பெறுபேற்றை சானியா வெளிப்படுத்தினார். 'கட்டார் தொடரில் எனது செயற்பாடுகளை கண்டுகொள்ளாத ஊடகங்களுக்குப் பாராட்டுக்கள். வரிய ஏய்ப்பு தொடர்பான செய்திகள் மட்டும் அதிகமாக உள்ளன. இதில் இருந்து ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். நேர்மறைச் செய்திகளை விடவும் எதிர்மறை செய்திகளே அதிகம் விற்கின்றன' என்று சானியா தனது ருவிற்றர் பதிவில் குறிப்பிட்டார். (ம)

## சிம்பாப்வே – ஆப்கான் 3ஆவது ஆட்டம் நாளை

சிம்பாப்வே- ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் ஆட்டம் சிம்பாப்வேயின் ஹராரே மைதானத்தில் நாளை நடைபெறவுள்ளது.

இந்தத் தொடர் இரு சிறு அணிகளுக்கு இடையிலான தொடராக அமைந்தாலும் டெஸ்ட் கிரிக்கெட்டின் போக்கைத் தீர்மானிக்கப் போகும் தொடராகவும் அமைந்துள்ளது. தற்போது இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், சிம்பாப்வே ஆகிய பத்து அணிகளே டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாடி வருகின்றன. இந்த எண்ணிக்கையைப் 12 ஆக உயர்த்துவதற்கு அதாவது ஆப்கானிஸ்தான் மற்றும் அயர்லாந்து அணிகளுக்கும் டெஸ்ட் அந்தஸ்தை வழங்குவதற்கு பன்னாட்டு கிரிக்கெட் சபை பரிசீலித்து வருகிறது. இதனால் தன்னை டெஸ்ட் கிரிக்கெட்டுக்குத் தகுதியான அணியென்று காண்பிக்க இந்தத் தொடரை ஆப்கானிஸ்தான் வெல்ல வேண்டிய தேவை உள்ளது. (ம)

## களத்தில் பேல் மட்ரிட் வெற்றி

லா லிகா தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் பேலின் துடிப்பான ஆட்டத்தால் வெற்றிபெற்றது ரியல் மட்ரிட்.

ஆட்டத்தின் 33ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட்டின் முதல் கோலைப் பதிவுசெய்தார் அல்வாரோ. 1:0 என்று ரியல் மட்ரிட்டின் ஆதிக்கத்துடனேயே முதல் பாதி முடிவுக்கு வந்தது.

இரண்டாம் பாதியும் மட்ரிட்டின் ஆதிக்கத்துடன் நீண்டு சென்றது. 83 ஆவது நிமிடத்தில் பேல் பிறிதொரு கோலைப் பதிவுசெய்து மட்ரிட்டின் வெற்றியை உறுதிசெய்தார். வேறெந்த மாற்றங்களும் ஏற்படவில்லை. முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் ரியல் மட்ரிட் வெற்றிபெற்றது.

காயம் காரணமாக கடந்த ஐந்து மாதங்களாக களத்திலிருந்து விலகியிருந்தார் பேல். இந்த ஆட்டத்திலேயே அவர் காயத்தில் இருந்து மீண்டு வந்து விளையாடினார். பேலின் வருகையின் மூலம் ரியல் மட்ரிட் அணி மேலும் பலம்பெறும் என்பதற்கு தக்க சான்றாக இந்த ஆட்டம் அமைந்தது. (ம)



## குணரத்ன நெருப்பாட்டம்
# கிண்ணம் இலங்கையிடம்
### அரச தலைவர் மைத்திரி வாழ்த்து

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான ரி-20 தொடரில் நேற்று நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்திலும் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றுவதை உறுதிசெய்தது இலங்கை அணி. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணிக்கு ஆரம்ப வீரர்களாக கிலிஞ்சர் மற்றும் பின்ஞ். அணி 18 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது 12 ஓட்டங் களுடன் ஆட்டமிழந்தார் பின்ஞ். டங், கிலிஞ்சர் இரு வரும் அடித்தாடினர். 6 பந்துப்பரிமாற்றத்தில் ஆஸ்திரேலிய அணி 60 ஓட்டங்களைத் தொட்டது. 43 ஓட் டங்களுடன் கிலிஞ் சரை வீழ்த்தினார் பண்டார. ஓர் முனையால் இலக்குகள் சரிந்தாலும் மறுமுனையில் நிலைத்து நின்று அரைச்சதம் கடந்தார் ஹென்றிக்ஸ். முடிவில் ஆஸ்திரேலியா சகல இலக்குகளையும் இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் குலசேகர 4 இலக்குகளையும், மலிங்க, பண்டார இருவரும் தலா 2 இலக்குகளையும், குணரத்ன, பிரசன்னா இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கைக்கு ஆரம்பம் இலக்கை எட்டும்படியாக அமையவில்லை. டிக் வெல்ல 14, தரங்க 4, மொன வீர 10, மென்டிஸ் 5 ஓட்டங்களுடனும் சிறிவர்தன ஓட்டமெதனையும் பெறாத நிலையிலும் ஆட்டமிழக்க 40 ஓட்டங்களில் 5 இலக்குகளை இழந்து தடுமாறியது இலங்கை அணி.

குணரத்ன ஆட்டத்தின் போக்கை மாற்றுவதற்காக ஆரம்பம் முதல் துடிப்பாகச் செயற்பட்டார். அவருக்கு பக்கபலமாக அமைந்தார் கப்புக்கெதர. அசல குணரத்னவின் துடுப்பில் இருந்து பவுண்டரிகளும் சிக்சர்களும் சீறிப் பாய்ந்தன. 38 பந்துகளில் அரைச்சதம் கண்டு அதன் பின்னர் அதிரடியை இரட்டிப்பாக்கினார். 32 ஓட்டங்களுடன் கப்புக்கெதர ஆட்டமிழந்தாலும் ஆசிலின் ஆதிக்கம் தலை தூக்குவதை தடுத்து நிறுத்தினார் குணரத்ன. இறுதிப் பந்தில் 2 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் பந்தைப் பவுண்டரிக்கு விளாசி ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தார் குணரத்ன. அவர் ஆட்டமிழக்காமல் 84 ஓட்டங்களை எடுத்திருந்தார். ஆட்டநாயகனாகவும் தேர்வானார். இலங்கை அணி கிண்ணம் வெல்வதை உறுதிப்படுத்தியதையடுத்து அரச தலைவர் மைத்திரி தனது வாழ்த்தைத் தெரிவித்தார். (ம)


கோடிபதி ஷனிடா
சீட்டிழுப்பு வாரம்: 102
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 19.02.2017
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான சுப்பர் பரிசு
ரூ. 76,520,568/-
T 07 37 46 64
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

Galaxy Star
வெற்றி வாரம் 137
திகதி 19.02.2017
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
10 02 30 36 52
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,780,052 /-
22.02.2017
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

லக்ஷபதி
இம்முறை நனயோகம் உங்களுடையதா?
திகதி 19.02.2017
வெற்றி வாரம் 2098
வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள்
07 24 42 49
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 9, 925, 141/=
2017.02.21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.



## பணியாளர்கள் தேவை

- எழுது வினைஞர் (ஆண்)
- சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் (ஆண்)



வவுனியாவில் உள்ள எமது நிறுவனத்திற்கு எழுது வினைஞர்கள் மற்றும் சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் தேவை.

**உங்கள் சுயவிவரக்கோவையுடன் இன்று (20.02.2017) திங்கட்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 1.00 மணி வரை நேரில் சமுகம் தரவும்.**

**உதயன் அலுவலகம்**
இல.60,பஸ்தரிப்பு நிலையம், வவுனியா.
(பஸ்தரிப்பு நிலைய மேல்மாடி)



## நெஞ்சம் நெகிழ எம் அஞ்சலிகள்



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் புகழ்பூத்த பழைய மாணவரும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி நம்பிக்கை நிதிய தலைவரும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி சிவஞான வைரவப் பெருமான் ஆலய புனருத்தாரணப் பணிகளுக்கு பெரும் பங்காற்றியவரும் கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழா சிறப்பு மலருக்கான ஏக அனுசரணையாளரும், எமது கல்லூரி விடுதி மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு உழைத்து வருபவருமான

**வி. கையிலாசபிள்ளை**

அவர்களின் மறைவு எமது கல்லூரி சமூகத்துக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும் அவரது மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு கல்லூரி சமூகத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சிவஞானவைரவப் பெருமானை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிச்சமூகம்.**


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.